நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்- 203 ஒக்.01-07, 2000 விலை 12.00

**சிங்கள வீர விதானம் !**

வாருங்கள் ஐயா வாய்ச்சவடால் வேண்டாம்
போருக்குப் போவோம் புலிகளுடன்- வாருமென்று
கேட்டாலுங் கேட்டார் கேட்டவர்முன் கூச்சல்
போட்டவரைக் காணோம் போ !.

ஏழுமோகம்





ஓயாத அலைகள் ஈ ஆரம்பம்



## யாழ் குடா : படையினரின் கனரக ஆயுதங்கள் மட்டும் தாக்குப் பிடிக்குமா?




மிகப் பெரும் பின்னடைவு !



தேர்தல் வன்முறை : ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல்



## ரட்ணசிறி : யுத்தத்தின் தூதுவர் !





நிர்ப்பந்தம் எங்களுக்கு



சிங்கக் குட்டிகளும் புலிக் குட்டிகளும்



வரலாறு திரிப்பவர்களுக்கு எதிராக !



பெண் : தேசமும் நிஜமும் !

நன்றி - நூலகத்திட்டம்



திருமலை:

# மீனவர்கள் மீது கடற்படை துப்பாக்கிச் சூடு!

## 7 மீனவர் பலி! 6 பேர் படுகாயம்!! 4 பேர் கைது!!!

செப்.22ம் திகதி வெள்ளி இரவு திருகோணமலை கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஏழு அப்பாவி மீனவர்கள் பலியானார்கள். ஆறு பேர் படுகாயங்களுடன் வைத்திய- சாலையில் அனுமதிக்கப்பட்டி- ருக்கிறார்கள். நான்கு பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். சிலரைப் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

சம்பவம் நடந்த வேளை 7 படகுகளில் 21 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர் எனவும் இவற்றில் 2 படகுகள் முற்றாகச் சேதமடைந்து விட்டன என்றும் தெரிய வருகிறது.

**தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் மீனவர்!**

இந்த அனர்த்தத்துக்குக் காரணம் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் மீனவர்கள் நுழைந்- தமைதான் எனக் கடற்படையினர் சட்ட ரீதியாகச் சமாதானம் கூறிக் கொண்டாலும் கூட, கண்ணை மூடிக்கொண்டு கடற்படையினர் தங்கள் வசதியை மாத்திரம் கருத்திற் கொண்டு போட்டுக் கொண்ட கடற்தடைவலயமும், மீனவர்களின் வறுமைத் துயரும் தான் உண்மை- யான காரணங்களாகும்.

அரச உயர்பீடத்தில் உள்ளவர்- கள் சொகுசு வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் வேண்டாத யுத்தமும் சொந்த நாட்டில் தனது கடற்பரப்பில் தன்னுடைய நிலத்தையண்டிய பகுதியில் மீன்- பிடிக்கும் உரிமையை மீனவர்களுக்கு மறுத்த - அடிப்படை நியாயம் எதுவுமற்ற - அரச தர்பாரின் கொடூரமும் தான் இந்த அப்பாவி உயிர்களைப் பலிகொண்டும் உடற்காயங்களை ஏற்படுத்தியும் விட்டிருக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

கரையோரப் பகுதிகளில் காணப்படும் மீன்கள் எப்போதும் கடற்பாறைகளை அண்டிய பிர- தேசங்களின் தான் பகலில் காணப்- படும் இக்கடற்பாறைகளும், உயர்ந்த மலைகளின் நிழல்களும் அவற்றைச் சூரிய வெப்பத்திலிருந்தும், ஆபத்- துக்களில் இருந்தும், பாதுகாக்- கின்றன. இரவு நேரங்களில் மீனவர்களின் வெளிச்சங்கள் நிறைந்த பகுதியில் உலாவர விரும்புகின்றன.

ஆழங்குறைவான பிரதேசங்- களில் வெளிப்பரப்பில் பிடிபடும் மீன்கள் கூட தங்களது பயணங்களின் போதுதான் மீனவர்களிடம் சிக்கிக் கொள்கின்றனவேயொழிய அப்- பகுதியைத் தங்கள் இருப்பிடமாகக் கொள்வதால் அல்ல.

இரவில் கடற்படைத் தள- வெளிச்சங்கள், தரித்து நிற்கும் கப்பல்களின் வெளிச்சங்கள் என்பவற்றின் அழகும் மீன்களைக் கவர்ந்திழுப்பதால் இப்பகுதிகள் எப்போதும் மீன்வளம் நிரம்பிய பகுதியாகவே காணப்படும்.

எரிபொருட் செலவுடன் பலமைல் தூரம் ஓடியும் கஷ்டப்- பட்டும் வெறுங்கையுடன் திரும்பி நட்டமுடன் வீடு வரும் மீனவர்கள் தங்கள் பல நாள் நஷ்டத்தை ஒரே நாளின் ஈடுகட்ட வேறு வழியின்றி தடை செய்யப்பட்ட கடற்பரப்பிற் கூட நுழைந்து விடுகிறார்கள். தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து இவ்வாறு எப்போதாவது நுழையும் மீனவர்கள் நிரம்பிய மீன்களுடன் கரைசேரும் போது, ஏக்கமுடன் பார்க்கும் ஏனைய மீனவர்களும், தங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய தடை செய்யப்பட்ட கடற்பரப்புகளில் நுழைந்து விட முயல்கிறார்கள்.

இவ்வாறு வயிற்றைக் கழுவு- வதற்காக நுழைந்த மீனவர்கள் தாம் கடற்படையினரின் அதிநவீன கருவிகளுடன் கூடிய யுத்த சாகஸங்- களுக்கு எதிர்நின்று உயிரிழந்- திருக்கிறார்கள். உயிரிழந்தவர்களின் இரண்டு மீனவர்கள் மட்டுமே தமிழர்கள். ஏனையோர் - காயம- டைந்தவர்கள் உட்பட அனைவரும் சிங்கள மீனவர்களே.

**சொல்லச் சொல்லச் சுட்டார்கள்!**

"இரவு 11.30 மணியளவில் இருக்கும். கடும் இடிமுழக்கத்துடன் பெய்த மழை ஓய்ந்து இருந்தது. திடீரென்று பத்துக்கு அதிகமான கடற்படைப்படகுகள் மீன்பிடித்துக் கொண்டிருந்த எமது படகுகளைச் சுற்றி வளைத்துக் கொண்டன. பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தன. நாம் கத்தினோம். மீன்பிடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம் என்று சத்தம் எழுப்பினோம். ஆனால் கடற்படையினர் சுட ஆரம்பித்தனர்"- இவ்வாறு சொன்- னார் மயிரிழையில் உயிர் தப்பிய சைமன் சிங்கோ என்ற சிங்கள மீனவர்.

"கடற்படையினர் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே படகுகளில் இருந்து மீனவர்கள் உயிர் தப்புவதற்காக கடலில் குதித்தனர். நானும் கடலினுள் குதித்தேன் அதன் பின்னர் கடற்படையினர் எம்மைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். எம்மைத் தாக்க ஆரம்பித்தனர். பின்னர் எம்முடன் இருந்த ஐந்து பேரைக் கைது செய்து கூட்டிச் சென்றனர்" என்றும் அவர் கூறினார்.

தாங்கள் மீனவர்கள் சிங்கள- வர்கள் புலிகளில்ல..." என்று அவர்கள் அவலக்குரல் எழுப்பியும் கடற்படையினர் செவிசாய்க்காமல் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். இரவானதால் பரா வெளிச்சம் போட்டு இலக்குப் பார்த்துப் பீரங்கித் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

இதில் சில படகுகள் முற்றாக அழிந்துவிட்டன. சில மீனவர்கள் கதி என்னவாயிற்று என்பது பற்றி விபரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

திருகோணமலையின் மீனவ சமுதாயம் தமிழர், சிங்களவர்கள் என்ற வேறுபாட்டுக்கப்பால் சோகம் தாங்காது குமுறலுடன் கடற்படை- யினரின் கையாலாகாத தாக்குதலுக்கு எதிராகக் கோபமடைந்த நிலையில் காணப்படுகிறனர். சில கடற்படை அதிகாரிகள் இறந்தவர்கள் வீட்டுக்கு வந்து ஆறுதல் கூறியும் அவர்கள் கொந்தளிப்பும் குமுறலும் குறைய- வில்லை.

உயிர்வாழ ஆசைப்பட்டு உழைக்கப் போனார்கள். பிணமாக மீண்டார்கள். அவர்களை நம்பிய ஜீவன்கள் குடும்பத் தலைவனை இழந்து கண்ணீரில் மிதக்கின்றன.

இதேவேளை மன்னார் பெரிய- கடை பகுதியில் மீனவர் வாடியில் வேலை செய்துகொண்டிருந்த இரு மீனவ தொழிலாளர்கள் இராணுவத்- தினரால் செப்.22 வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் சுட்டுக்- கொல்லப்பட்டனர். பெரிய கடை- யைச் சேர்ந்த கே.தங்கராசா (47வயது) எஸ்.சதீஸ் (21வயது) ஆகியோரே சுட்டுக்கொல்லப்- பட்டவர்களாவர்.

வழமைபோல மீனவர்கள் வாடியில் இருந்த போது அங்குவந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரைப்பகுதியில் சந்தேகத்- திற்கு உரிய வகையில் நடமாட்டம் தெரிந்ததாலேயே தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இறந்த இருவரது சடலங்களும் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாவட்ட பதில் நீதிபதி ஏ.எச்.எம்.அஸ்மிர் முன்னிலையில் மரணவிசாரணைகள் நடைபெற்றன. சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

**உறவினர் முறைப்பாடு!**

செப்.19ம் திகதி கடற்தொழி- லுக்குச் சென்ற குருநகரைச் சேர்ந்த 5 மீனவர்கள் காணாமற் போனதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து அவர்களது உறவினர்கள் செஞ்- சிலுவைச் சர்வதேசக் குழுவினரிட- மும் மனித உரிமை ஆணைக்- குழுவிடமும் முறைப்பாடு செய்- துள்ளனர். இது குறித்து குருநகர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் சிறிலங்கா இராணுவத்தின் 51-2 படையணியிடம் முறையிட்டுள்ளது.

இவர்களுள் மூன்று மீனவர்கள் செவ்வாய் காலை வள்ளம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றதாகவும், மற்றைய இருவரும் கடலில் நடந்து சென்ற- தாகவும் மேற்படி சங்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

காணாமற்போனதாக முறைப்- பாடு செய்யப்பட்டுள்ள மீனவர்களின் பெயர்கள் வருமாறு-

1.இம்மானுவல் விஜயகுமார், புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர் 2.தேவசகாயம் யூட் கிளின்டன், மத்திய கிழக்குவீதி, குருநகர் 3.ரிச்சார்ட்சோட் றிசோன், தண்ணீர்த் தாங்கி வீதி, குருநகர் 4.மரியநாயகம் குணதாஸ், புதிய வீதி, குருநகர், 5.ஸ்ரீபன் ஜோர்ஜ், புதிய வீதி, குருநகர்

"கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டிலும் புலி வாழும் காடு நன்றே" என்று அன்று சொல்லி வைத்தது நன்றாகத் தான் பொருந்துகிறது.

நடந்தது இப்படி இருக்க, இலங்கை வானொலி செய்தி அறிக்- கையில் கடற்படையுடன் நடந்த மோதலில் 7 புலிகள் பலி என்று அறிவித்தது.

திருமலையில் சிங்களவர்களும் புலியில் சேர்கிறார்கள் போலும்...!

**– விவேகி**

# அவர்களுக்கு யோகம்

யுத்தத்துக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக மேஜர் ஜெனரல் விஜேசூரிய தெரிவித்த ஒரு தகவல் மிகவும் சுவையானது.

அண்மையில் மொனராகல குடாஓயா இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் உரையாற்றும் போது அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

புலிகளை ஒழித்துக் கட்ட வேணும் என்று ஓயாமல் கூச்சல் போடுபவர்கள் யுத்தத்துக்கு வருவதற்குத் தயாரற்றவர்களாகவே இருக்கிறார்கள். 'நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டாம் புலிகளை ஒழித்துக் கட்டுவோம்' என்று கூச்சலிடும் இவர்கள் தாமோ தம்மைச் சேர்ந்தவர்களோ யுத்தத்தில் பங்கு பற்றுவதற்கு ஒப்புக் கொள்வதில்லை என்று சாடினார் அவர்.

ஆம், அவர்களுக்கு யுத்தத்தின் அருமை தெரியும். அதன் விளைவுகளும் தெரியும். அங்கு போனால் அநியாயமாகச் சாக வேண்டி வரும் என்றும் அவர்களுக்குத் தெரியும்.

ஆனால், இந்த யுத்தம் இல்லாமல் தாம் தமது அரசியலை நடாத்த முடியாது என்றும் தெரியும்.

அதனால் தான் அவர்கள் அதி தீவிரமான இனப்பற்றைக் காட்டி வருகிறார்கள்.

துயரம் என்னவென்றால் தமக்கெதிரான, புலிகளை விடப் பயங்கரமான இந்த எதிரிகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை சிங்கள மக்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்பது தான்!.

அதுவரை அவர்களுக்கு குருசந்திர யோகம்.

ரணிலின் அரசாங்கத்தில் பிரபாகரன் பாதுகாப்பு அமைச்சர் என்று ஆரூடம் கூறுவது முதல் சந்திரிகா ஈழம்வாதிகளுக்கு அதிகாரத்தை தாரை வார்க்கத் தயார் என்பது வரை எதை வேண்டுமானாலும் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கலாம்!

எங்கள் தமிழ் அரசியல்வாதிகளைப் போல!.

# சந்தேகம்

கள்ளவாக்குப் போடுவோரைக் கண்டால் உடன் சுடுவதற்கு பொலிசாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக நடைமுறைக்கேற்ப தேர்தல் நடைபெற வேண்டும் என்ற அக்கறையுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதாக நம்புவோம்.

ஆனால் ஒரு சந்தேகம்..

யாருக்குக் கள்ளவாக்குப் போடுவோரைக் கண்டால் சுட முடியும் என்பது தெரியவில்லை.

அரசாங்கக் கட்சிக்கு வாக்குப் போடுவோரையும் சுடலாமா என்று தெரிய வேண்டும்.

ஏனென்றால் அப்படிச் சுடுவதானால் பல வேட்பாளர்களையும் கூடச் சுடவேண்டியிருக்குமே,அதனால் தான் இந்தச் சந்தேகம்.!

# அனுருத்தரின் மக்கள் !

தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும் உத்தேசம் அரசாங்கத்துக்குக் கிடையாது... என்று அறிவித்திருக்கிறார் அனுருத்த ரத்வத்த.

தமிழ்க் கட்சிகளின் நெஞ்சில் பாலை வார்த்த இந்தக் கதையை அவர் தமிழ்ப்பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

புலிகளிடமிருந்து அவர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படப் போவதில்லை என்பது அமைச்சரது விளக்கம்.

இந்த இயக்கங்களின் ஆயுதங்கள் இவ்வளவு காலமும் சொந்தப் பாதுகாப்புக்கு மட்டும் தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது இதன் பொழிப்புரை.

தமிழ்க்கட்சிகளின் ஆயுதங்கள் மக்களுக்கு எதிராக அவர்களது வாக்குப் பெட்டிகளை நிரப்புவதற்காக பயன்படப் போவதில்லை என்பது இதன் விளக்கவுரை.

அமைச்சர் சொல்வது சரிதான்.

அவரது அகராதியில் 'மக்கள்' என்பது அரசாங்கத்தின் ஆயுதப் படைகள் என்பது ஒன்றும் புதிய விடயமல்லவே!

அந்த மக்கள் இன்று ஆயுதமேந்தி வடக்கில் 'புலிகளிடம் இருந்து எம்மைக் காப்பாற்று என்று கதறும் தமிழ் மக்களை பாதுகாத்து நிற்கின்றனர்.

அவர்களோடு தோளோடு தோள் நின்று செயற்படும் ஆயுதமேந்திய தமிழ் 'ஜனநாயக'க்கட்சிகளும் கூட அமைச்சரின் மக்களே அல்லவோ?

தெரியாமலா மாவோ சொன்னார்:

'மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றை உருவாக்கும் உந்து சக்திகள்' என்று!

மக்களைப் பிரிந்து எப்படி வரலாற்று நாயகராக அவரால் வர முடியும்?

வாழ்க அவரது மக்கள் பக்தி!

நன்றி - நூலகத்திட்டம்





## சிறிலங்காப் படைகளின்

# அதிகரித்து வரும் சூட்டுச் செறிவும் வீழ்ச்சியடைந்து வரும் காலாட் படைகளின் போர் வலுவும்

- டி.சிவராம்

நாம் ஏற்கெனவே பல கட்டுரைகளில் குறிப்பிட்டு வந்துள்ளதைப் போல பீரங்கி , எறிகணை, ஏவுகணை என்பவற்றின் சூட்டுப்பலம் என்பது இன்று புலிகளுக்கும் சிறிலங்காப் படையினருக்கும் இடையே நடை பெற்று வரும் சண்டைகளின் இன்றியமையாத அங்கமாகி விட்டது.

எதிர்காலத்தில் ஈழப்போரின் வெற்றி தோல்விகளை தீர்மானிக்-கும் ஒன்றாக இந்தச் சூட்டுப் பலம் அமையும் என சிறிலங்கா அரசு திடமாக நம்புவது கண்கூடு.

கைப்பற்றப்பட்ட சாவகச்சேரி நகரின் படங்கள் எந்தளவிற்கு இந்தச் சூட்டுப்பலம் குடாநாட்டுச் சண்டைகளில் மேலாட்சி செலுத்துகின்றது என்பதற்குச் சான்று பகர்கின்றன. மரபுவழிச் சண்டைகளில் சூட்டுப் பலத்தை (Fire Power) எப்படிப் பயன்படுத்துவது, அதன் நன்மைகள் என்ன, தீமைகள் என்ன என்பன போன்ற விடயங்கள் பல போரியல் வல்லுநர்களால் ஆராயப்பட்டுள்ளன.

பெரிய தொகைகளில் செறிந்து தாக்கும் அல்லது நிலைகொண்டிருக்கும் எதிரிகள் மீதே ஒரு படையின் சூட்டுவலு குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், எதிரிப் படைகள் பீரங்கித் தாக்குதலுக்கு அதிகம் முகங் கொடுத்துப் பழக்கமில்லாதவையாக இருக்கும் பட்சத்திலேயே எறிகணை மற்றும் குண்டு வீச்சுகள் தேவையான உளவியற் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் ஒரு சாரார் கூறுகின்றனர். இப்பிரச்சினையை சரியாக ஆராய்ந்தறிவதற்காக அமெரிக்கப் படைத்துறையும் அதோடு தொடர்புபட்ட RAND நிறுவனமும் 1968 இல் கூட்டாக சில கள முனைப் பரிசோதனைகளையும், ஆய்வுகளையும் மேற்கொண்டன. இவற்றின் முடிவில் பின்வரும் முக்கியமான சில விடயங்கள் கண்டறியப்பட்டன.

1. எதிரியின் நிலைகள், படைக்குவிப்புகள் என்பனவற்றை அறியக்கூடிய இடர்குறைந்த ஒரு புவியியற் பகுதியில் உள்ள களமுனை மீது வீசப்படும் 750 இறாத்தல் குண்டொன்று வெடிக்கும் போது அதன் கொல்திறன் ஏறத்தாழப் பூச்சியமாகும்.

2. சரியான முறையில் தோண்டப்பட்ட பதுங்கு குழிகளில் நிலையெடுத்திருக்கும் ஒரு எதிரிப்படையணி மீது சுடப்படும் 105 mm பீரங்கிக் குண்டின் கொல்திறன் நூற்றுக்கு ஒன்றிலும் குறைவானதாகும்.

3. ஒரு நேப்பாம் (Napalm) குண்டின் அழிப்பு விட்டம் 30 யார்களாகும். இது மரங்கள் உள்ள பகுதிகளின் மீது வீசப்படும் போது அதன் அழிப்புத்திறன் மேலும் குறைகிறது.

இந்த ஆய்வு ஐரோப்பிய நிலப்பரப்புகளில் மரபுவழிப் போருக்குரிய முறையில் அணி வகுக்கப்பட்ட படையணிகளை எதிரியெனக் கொண்டே செய்யப்பட்டன. அவ்வாறாயின் யாழ்குடாநாடு, வன்னி போன்ற பகுதிகளில், பெரிய தொகையில் மரபு வழிப் பாணியில் நிலையெடுத்து நிற்காத எதிரியின் மீது செறிவான குண்டுவீச்சு, எறிகணை வீச்சு ஆகியன எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறி. கொழும்புத்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இறந்த புலிப்படையினர், 53ம் டிவிசனின் விசேட கொமாண்டோக்களின் சுற்றி வளைப்பில் சிக்குண்டவர்களே அன்றிக் குண்டு வீச்சாலோ அல்லது பல்குழல் எறிகணை வீசிகளின் தாக்கத்தாலோ இறந்தவர்கள் அல்ல என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.


சூட்டுச் செறிவின் மூலம் எதிரிப்படைகளினிடையில் உளவியற் பயங்கரத்தையும், குழப்பத்தையும் உண்டாக்கலாம். இது களமுனையில் எதிரிப்படை நிலைகுலைந்து போக வழிவகுக்கும் எனச் சிலர் கூறுவர். குறிப்பாகப் பல்குழல் எறிகணை வீசிகளின் முக்கிய பயன்பாடே அவை எதிரி அணிகளினிடையில் ஏற்படுத்திடக் கூடிய பயங்கரம் எனப் பல போரியலாளரும் கூறுவர்.

அதேவேளை எதிரிப்படைகள் இவற்றின் தாக்கத்திற்குக் காலப் போக்கில் பழக்கப்பட்டு விட்டால் உளவியற் தாக்கம் என்பதை கணக்கிற் கொள்ள முடியாது எனவும் அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

பீரங்கிகளாலும், பார எறிகணை வீசிகளாலும், பல் குழல் ஏவுகணை வீசிகளாலும் புலிகள் வசம் உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதி மீது செறிவான, தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அதை நோக்கி முன்னேறுவதையே சிறிலங்காப் படையினர் தற்போது தம் வழக்கமாகக் கொண்டுள்ளன. இதில் மூன்று சிக்கல்கள் எதிர் கொள்ளப்படு-கின்றன.



ஒன்று: தாக்குதலுக்-குள்ளான பகுதியில் புலிகளோ அவர்களது நிலைகளோ இல்லாதி



ருப்பது. ரிவிகிரண நடவடிக் கையின் போ து இதுவே நடந் தது. இரண்டு: புலிகளின் சில வகையான கண்ணி வெடி வயல்கள், பொறிவலைகள் என்பது படை நகர்வுக்கு முன்னர் நடைபெறும் தாக்குதல்கள் எவ்வளவு செறிவானவையாக இருந்தும் கூட முற்றாக அழிக் கப்பட முடியாத வையாக உள்ளன. தாழப் பறந்து குண்டு வீசுவதன் மூலம் அரியாலை, கொழும்புத் துறைப் பகுதிகளில் உள்ள புலிகளின் கண்ணிவெடி வயல்களையும் பொறி வலைகளையும் அழிக்கலாம் என்ற நோக்கில் சிறிலங்காப் படைத்துறை அண்மையில் செயல்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

மூன்று: பார எறிகணை வீசி, பீரங்கி மற்றும் பல் குழல் ஏவுகணை வீசி என்பவற்றின் ஒன்றிணைக்கப்பட்ட தாக்குதலின் பின்னர் சிறிலங்காப் படையினர் ஒரு பகுதியினுள் நுழையும் போது அங்கு அந்த அடியையும் பொறுத்துக் கொண்டு இருக்கக் கூடிய புலிகள் அவர்களுடன் நெருங்கி மோதுவார்களேயானால் அவ்விடத்தில் அவர்களைக் (சிறிலங்காப் படையினரை) காப்பாற்ற எந்தச் சூட்டுவலுவாலும் முடியாது.

ஏனெனில் தமது படைகளின் நிலை எது? புலிகளின் நிலை எது எனத்திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாத ஒரு களமுனையில் எந்தச் செறிவான சூட்டுவலுவும் எதுவும் செய்ய இயலாது என்பது சிறிலங்காப் படையினருக்குத் தெரியும். புலிகள் முன்னேறும் ஒரு படையணியுடன் நெருங்கி மோதத் தொடங்கிய பின்னர் பீரங்கிகளாலோ, பார எறிகணை வீசிகளாலோ, பல்குழல் ஏவுகணை வீசிகளாலோ சுட முடியாது. அப்படிச் சுட்டால் இறக்கப் போவது சிறிலங்காப் படையினரே.

இதே வேளை குடாநாட்டின் கட்டிடச் செறிவு இல்லாத பகுதிகளுக்குள் படைகள் முன்னேறும் போது கொடுக்கப்படும் பெரும் சூட்டாதரவு என்பது சிலவேளைகளில் விழலுக்கிறைத்த நீராகி விடுகிறது. ஏனெனில் குண்டுகளும் எறிகணைகளும் ஆளில்லாத இடங்களில் விழுந்து வெடித்து விடுகின்றன. ஆனால் இங்கு உள்நுழையும் படைகள் பாதுகாப்புக்காகச் செறிந்து நிலையெடுக்க முற்படுகையில் அதாவது அவர்கள் பதுங்கு குழிகள், அரண்கள் என்பவற்றை அமைக்க முற்படுகையில் புலிகள் அவர்கள் மீது சரியாகக் குறி வைத்து பார எறிகணை வீசிகளாலும் , பீரங்கிகளாலும் தாக்கும் போது பெரும் ஆட்சேதம் உண்டாகி விடுகிறது. இதுவே ரிவிகிரண நடவடிக்கையின் போது ஏறத்தாழ 1200 சிறிலங்காப் படையினர் காயப்பட்டமைக்கும் 200 பேர் அளவில் இறந்தமைக்கும் காரணமாகும். (இவ்வளவு சேதமும் எட்டு மணித்தி யாலங்களுக்குள் ஏற்பட்டன என்பதைக் கவனிக்க வேண்டும்.)

இன்னொரு புறம், அதிகரித்து வரும் சிறிலங்காப் படையின் சூட்டுச் செறிவு உண்மையில் அதனுடைய காலாட் படைகளின் போர் வலு வீழ்ச்சியடைந்து வருவதையே காட்டுகிறது என ஒரு கருத்தும் உண்டு. போர்க்களத்தில் எதிரியை சந்தித்துப் போரிடும் உளவலுவை படையினர் எந்த அளவிற்கு இழந்துள்ளனர் என்பதற்கு அவர்கள் / எதிர்பார்க்கும் சூட்டாதரவின் செறிவு நல்ல அறிகுறியாகும் எனப் போரியலாளர் கூறுவர்.

1952ம் ஆண்டு வியட்நாமில் தமது காலனியாதிக்கத்தை நிலைநாட்ட போராடிக் கொண்டிருந்த பிரான்ஸ் நாட்டுப் படைத் தளபதிகள் ஒரு கட்டத்தில் டொங்கின் எனும் இடத்தில் எதிரிகளுக்கெதிராக செலவழிக்கப்பட்ட எறிகணைகள், பீரங்கித் தோட்டாக்கள் என்பவற்றின் அளவு சண்டைகள் பெரிதாக இல்லாத காலத்திலும் கூடிச் செல்வதை அவதானித்தனர். 1952ம் ஆண்டின் ஒரு மூன்று மாதக் காலப்பகுதியில் டொங்கினிலிருந்த பிரெஞ்ச் படைகள் 4800 தொன் குண்டுகளையும், எறிகணைகளையும் வியட்நாமிய கெரில்லாக்களுக்கெதிராகச் சுட்டிருந்தனர். ஆனால் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 1954இன் அதே காலாண்டுப் பகுதியில் அவர்கள் 8900 தொன் எறிகணைகளையும், பீரங்கிக் குண்டுகளையும் எதிரிக்கெதிரான நடவடிக்கைகளில் செலவழித்திருந்தனர்.

இதன் காரணத்தை பிரெஞ்ச் படைத் தலைவர்கள் ஆராய்ந்த போது, போரிடும் உளவலுவை இழந்த படைகள் நேரடியாக வியட்நாமிய கெரில்லாக்களுடன் போரிடுவதைக் கூடுதலானவரை தவிர்த்து அதற்குப் பதிலாக எதிரியின் இலக்குகள் மீது தாராளமாக பீரங்கிகளையும், எறிகணை வீசிகளையும் பயன்படுத்திக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது. "படையாட்கள் மத்தியில் போர்க் களைப்பும், சலிப்பும் ஏற்பட்டுள்ளமைக்கு எதிரியின் சிறு சிறு எதிர்ப்புகளுக்குக் கூட அவர்கள் பலத்த பீரங்கிச் சூட்டாதரவில் தங்கியிருத்தல் சிறந்த அறிகுறியாகும்" என இதைப்பற்றி எழுதியுள்ள பிரெஞ்ச் தளபதி ஒருவர் குறிப்பிடுகின்றார்.

1960களில் அமெரிக்கா வியட்நாம் போரில் கால் வைக்கத் தொடங்கிய காலத்தில் அங்கிருந்த பல அமெரிக்கத் தளபதிகள் சூட்டாதரவில் காலாட் படைகள் தங்கியிருக்கும் உளநிலையை எப்படியாவது தவிர்க்கும் வகையிலேயே களமுனைப் போர்த் தந்திரோபாயங்கள் வகுக்கப்பட வேண்டும் என வற்புறுத்தினர். இவர்களில் முதன்மையானவர் C.K. நூல்சன் (C.K.Nulsen) என்பவராவார். இவர் இப்பிரச்சினையைப் பற்றி The use of firepower in counter insurgency operation எனும் ஒரு நூலையே எழுதினார். ஆனால் காலப்போக்கில் வியட்நாமியரின் தொடர்ச்சியான கடும் எதிர்ப்போரினால் பலத்த ஆளிழப்புகளை சந்திக்கத் தொடங்கிய அமெரிக்கப் படைகளும், பிரெஞ்ச் படைகளை விட அதிகமாக சூட்டாதரவில் தங்கியிருக்கத் தொடங்கினர். இத் தங்குநிலை அவர்களது போரிடுதிறனைப் பாதிக்கலாயிற்று.

இறுதியில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

நன்றி - நூலகத்திட்டம்



# வரலாறு கைமாறும் மிகப்பெரும் பின்னடைவு!

இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல் வரலாற்றில் எம்.எச்.எம்.அஷ்ரஃப் போன்ற ஆளுமை மிக்க தலைவர்கள் இதுவரை இருந்ததில்லை. அந்த மிகப்பெரும் ஆளுமையை முஸ்லிம் சமூகம் இன்று இழந்து விட்டது. கைசேதத்தை நோக்கிய அதன் பயணம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் பின் மரணத்துடன் தொடங்கி விட்டது என்பதை உறுதியாகக் கூற முடியும்.

நெஞ்சம் வெடித்து விடும் மிகப்பெரும் சோகத்தை, இழப்பை, முஸ்லிம் சேதத்தை, முஸ்லிம்களின் தனித்துவ அரசியலை நேசிக்கும் மக்கள் தாங்கி நிற்கின்றனர் - இன்னொரு வகையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலும் இவ் இழப்பு மிகவும் தாக்கத்திற்குரியதாகி உள்ளதை தரிசிக்க முடிகிறது- அஷ்ரஃப் மரணத்தின் மூலம் சிங்களப் பேரினவாத வல்லூறுகள் தங்கள் நிலையை இலங்கைத் தேசத்தில் மீண்டுமொரு முறை ஸ்திரப்படுத்தி உள்ளனர்.

அஷ்ரஃப்பின் மரணம் இயற்கையாக நேர்ந்த ஒன்றல்ல. மாறாக, அம்மரணம் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரும் சதியாகும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது! முஸ்லிம்களை தங்கள் சப்பாத்துக் கால்களின் கீழ்போட்டு நசுக்கி, அடிமைச் சேவகம் செய்யும் ஒரு சமூகமாக மாற்ற வேண்டுமென சதா ஏங்கி நின்ற பிற்போக்கு போலிகளுக்கு மட்டுமே அஷ்ரஃப்பின் மரணம் ஒரு வகையில் உவகை தரக்கூடியதாக இருக்கும் - அது சிங்கள இனவாத மனோபாவம் என்றால் என்ன? தமிழ் மேலாதிக்க மனோபாவம் என்றால் என்ன? முஸ்லிம் காட்டிக் கொடுக்கும் அரசியல் மனோபாவம் என்றால் என்ன? இவர்களே இன்று ஒரு எதிரி ஒழிந்தான் என எக்காளமிட்டு, தங்களது அரசியலின் ஏகபோக ஒரு எதிரி ஒழிந்தான் எனக் கொடுக்காளமிட்டு தங்களது அரசியலின் ஏகபோக கனவை நினைத்து சந்தோசப்பட்டுக் கொண்டிருப்பர்.


முஸ்லிம் தாய் இன்றைய தனது இருப்பை நினைத்து கவலை கொண்டிருக்கிறாள். முஸ்லிம் இளைஞர்கள் தங்களது அரசியல் அபிலாஷைகளின்- உரிமைப் போராட்டத்தின் அடுத்த காலடியை நோக்கித் திகைத்து நிற்கின்றனர். அஷ்ரஃப் பின் மர்ணம் என்பது முஸ்லிம் சமூகத்தின் ஆன்மாவை மிகவும் பாதித்து விட்டது. முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றின் மிக உன்னதப் பிரவேசமாக அஷ்ரஃப் இருந்தார். பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியலில் தங்கி நிற்கும் முஸ்லிம்களின் கறிவேப்பிலை அரசியலை - அஷ்ரஃப் என்ற ஒரு யுகப்புயல் சுக்குநூறாகத் தகர்த்தெறிந்தது- தங்கி நிற்கும் முஸ்லிம்களின் அரசியல் அஷ்ரஃப்பினதும், முஸ்லிம் காங்கிரசினதும் வருகையால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. இந்தக் கேள்விகளின் தொடர்ச்சி தான் கடந்த இருபதாண்டு கால முஸ்லிம் காங்கிரசினதும் அஷ்ரஃப்பினதும் வாழ்வும், வரலாறுமாகும்.

ஒரு அரசியல் பத்தியாளன் என்ற வகையில் அஷ்ரஃப்பின் மறைவுக்குப் பின்னாவது அவர் பற்றிய காய்தல் உவத்தலின்றிய ஒரு பார்வையை முன்வைப்பது அவசியமாகவுள்ளது. அதனை இக்கட்டுரையில் முற்று முழுதாக சொல்லி முடிக்க முடியாது! இருந்தும் சில விடயங்களை கோடிட்டுக் காட்ட முயல்கிறேன்.

### எம்.எச்.எம். அஷ்ரஃப் யார்?

புதைக்கப்பட்டிருந்த முஸ்லிம் சமூகத்தின் முகவரியை தோண்டி எடுக்கும் மிகப் பெரும் அக்கினிப் பரீட்சையில் ஏறத்தாழ இருபது ஆண்டுகளை அர்ப்பணித்து - அந்த அக்கினிப் பரீட்சையில் உயிர்நீத்த முஸ்லிம் சமூகத்தின் ஆன்மாவாகவே அவர் இருந்தார். மைய நீரோட்ட அரசியலில் அவரின் தாக்கம் - இலங்கை அரசியல் வரலாற்றில் அவருக்கும் - அவர் தலைமை தாங்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும் மிக முக்கியமான ஒரு இடத்தை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இட்டுச் சென்றது - இதனைப் பொறுக்க முடியாத - சகிக்க முடியாத பாவிகள் அவரைக் கொன்று விட்டனர்.

இந்த வரலாறு இன்றைய நமக்கு மிகப் பெரும் பாடங்களைத் தரக்கூடியது. இந்த மரணத்திற்கான காரணங்கள் மிகவும் இரகசியமான ஒன்றல்ல, நமது மண்ணில், நமது தெருக்களில், நமது உரிமைகளில், நமது வாழ்வில் நெருப்பை அள்ளி வீசும் அடக்கு முறைக் கரங்களின் மிக வெளிப் படையான பிரகடனம் தான் அஷ்ரஃப் பின் மரணம்.



மறைந்த தலைவர் அஷ்ரஃப்பும் புதிய இணைத் தலைவர் ரவூப் ஹக்கீமும்

ஒரு சமூகத்தின் நியாயமான உணர்வு களின் குரல் களையும், அதன் பலத்தையும் குழி தோண்டிப் புதைக்கும் பாசிசத்தின் பல கொடூ ரங்களை சந்தித்த தமிழ், முஸ்லிம் களின் வரலாற்றில் செப்டெம்பர் 16, சனிக்கிழமை 2000 தினத்தில் முஸ்லிம்களின் குரல் அழித்தொழிக்கப்பட்டுள்ளது- அதன் பலம் நசுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களை அடக்க நினைத்த சக்திகளுக்கு அஷ்ரஃப் சிம்ம சொப்பனமாகவிருந்தார்- அவருடைய குரல்கள் சிங்கள, தமிழ் பேரினவாத முஸ்லிம்களின் கூரைகளை முட்டிமோதிக் கொண்டிருந்தது - ஆனாலும் அவர் பயணம் இடையறாது தொடர்ந்தது - அவர் முஸ்லிம்களை நேசித்த, அவர்களின் தனித்துவத்தை, அரசியல் அடையாளத்தை, ஏற்றுக் கொண்ட சிங்கள, தமிழ் மக்களை, தலைமைகளை நேசித்தார். அவர்களுடன் கருத்தொருமைப்பாடு கொண்டிருந்தார்- அவரின் எதிரிகள் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமையை, அதன் பலத்தை, அதன் அடையாளத்தை மறுப்பவர்களாக இருந்தனர். இந்த உண்மை அவரின் மரணம் நிகழ்ந்த கணத்தின் பின் இன்று வரை நிரூபிக்கப்பட்டு விட்டது.

### தனித்துவ அரசியலின் எதிர்காலம்?

அஷ்ரஃப்பின் மறைவுக்குப் பின் இன்று தோன்றியுள்ள மிகப்பெரும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முஸ்லிம் சமூகத்தில் இன்று யாரும் இல்லை. போலிகளை இட்டு நிரப்புவதன் மூலமோ - அல்லது அவர் பின் நின்றவர்களைக் கொண்டு வந்து அமர்த்துவதன் மூலமோ எதிர்கால வரலாறு முஸ்லிம் சமூகத்திற்கு தரக்கூடிய வரலாற்று நெருக்கடிகளை முறியடிக்கலாம் என நான் நம்பவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

அதில் முதலாவதாக - இந்த பாராளுமன்ற ஜனநாயக அரசியல் வழிமூலம் முஸ்லிம் தேசத்தை - முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை முஸ்லிம்கள் படிப்படியாக இழந்து வந்தாலும் கூட; ஒரு தனிப்பட்ட அஷ்ரஃப் என்ற ஆளுமையின் வழிகாட்டலில் தலைமைத்துவத்தின் மூலம் சில எட்டுகளை முன்வைக்க முடியும் என நம்பினர்- அது வரலாற்றில் ஓரளவு மெய்ப்படுத்தப்பட்டும் வந்திருக்கிறது- இன்று அஷ்ரஃப்பில்லாத முஸ்லிம்களின் பாராளுமன்ற ஜனநாயக அரசியல் சூழலையும் - முஸ்லிம் காங்கிரசையும் நினைத்துக்கூட பார்க்க முடியாது உள்ளது. ஏனெனில், அஷ்ரஃப் முஸ்லிம்களின் அரசியலில் அஞ்சலோட்டம் ஓடியவரல்ல, ஒரு தனிமனிதனாக பல்லாயிரம் கிலோமீட்டர்களை தனியே ஓடி முடித்தவர் தான் அஷ்ரஃப்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியலில் அஷ்ரஃப் தனியே ஓடிவந்து விட்ட இடத்தில் இருந்து அவர் பணி தொடரப்பட வேண்டிய மிக இக்கட்டான நெருக்கடி வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு நேர்ந்துள்ளது. இந்த இடைவெளியின் வெற்றிடம் பல பிளவுகளை - முஸ்லிம் சமூகத்திற்குள் ஏற்படுத்தலாம்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசையும், அஷ்ரஃப்பையும் தங்களுடைய காட்டிக் கொடுப்பு அரசியல் சார்புநிலைக்கு ஏற்ப பலவாறு விமர்சித்து - முஸ்லிம் காங்கிரசையும் அஷ்ரஃப்பையும் அழிக்க பலவாறு முயற்சித்து வந்தவர்கள்- இன்று அஷ்ரஃப்பைப் புகழ்வதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்குள் ஊடுருவ முற்படலாம் - இது அம்பாறை மாவட தில் இப்போதே தொடங்கி விட்டது.

இரண்டாவதாக - ஐக்கிய தேசியக் கட்சியிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் அற்ப முஸ்லிம்கள் - முஸ்லிம்களுடைய அரசியலுக்குள் எட்டப்பர்களாக இருந்தவர்கள் அஷ்ரஃப்பின் இழப்பின் பின் முஸ்லிம்களுக்கு தலைமை தாங்குபவர்கள் நாங்களே என இடைவெளியை நிரப்ப முயற்சிக்கலாம் - இவை பற்றிய புரிதல்கள் இன்று நமக்கு மிக அவசியமாகின்றன.

நமக்கு இன்று தேவை - முஸ்லிம் தேசத்தை முன்னெடுத்து, சகதமிழ் தேசத்துடன் புரிந்துணர்வின், கருத்தொருமைப் பாட்டின் அடிப்படையில் ஒட்டுமொத்த சிங்கள இனத்தேசியவாதத்-திற்கெதிரான போராட்டத்தை விட்டுக் கொடாமல் முன்னெடுக்கும் ஒரு தலைமையே- அத்தலைமை- காலம் பிந்தியாவது முஸ்லிம்களுள் இருந்து வெளிக்கிட்டே தீரவேண்டும் - "ஆறுகள் ஒரு நாளும் பின்னோக்கிப் பாய்வதில்லை" என்பதை முஸ்லிம் அரசியலில் குளிர்காய நினைப்பவர்கள் புரிந்து கொண்டால் சரி- இல்லாவிட்டால் வரலாறு அவர்களின் முகத்தில் அறைவது நிச்சயமாகி விடும்.

~ பையூஸ் அஹமட் ~

நன்றி - நூலகத்திட்டம்



# எங்கள் முடிவை அவர்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்!

இலங்கையின் அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு சிறப்பான நாம் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஒரு சில அடையாள வார்த்தைகள் இருந்திருக்கின்றன.

ஜே.ஆர்.ஜெயவர்தனவைப் பற்றிப் பேசுபவர்கள் அவரது புகழ்பெற்ற 'போர் என்றால் போர் சமாதானம்.என்றால் சமாதானம்' என்ற வார்த்தைகளை மறக்க மாட்டார்கள். அவ்வாறே பிரேமதாச பற்றிப் பேசுபவர்கள் அவரது 'எல்லாம் தருவேன், ஈழம் தவிர' என்ற வார்த்தையை மறக்க மாட்டார்கள். அவருக்குப் பின்வந்த விஜேதுங்க தனது முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பின்போதே தனது புகழ்பெற்ற வார்த்தைகளை வெளியிட்டார். இங்கு 'இனப்பிரச்சினை கிடையாது அது வெறும் பயங்கரவாதப் பிரச்சியையே' என்று அறிவித்தார். கூடவே புகழ்பெற்ற அவரது 'மரமும் கொடியும்' என்ற விளக்கத்தையும் தெரிவித்திருந்தார். அவருக்குப் பிறகு வந்த ஜனாதிபதி சந்திரிகாவும் மொத்த 'தமிழ் மக்களையும் புலிகள் என்று குற்றம் சாட்டினார்.

இப்போது அவரது அணியில் பிரதமராக வந்திருப்பவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க. அவர் அண்மையில் தேர்தல் கூட்டமொன்றில் அவருடைய இனி செல்வாக்கு பெறப்போகிற வார்த்தைகளைத் தெரிவித்தார். பிரேமதாச பாணியில் மேடையில் நின்றபடி உரையாற்றிய அவர் தாம் ஏழை மனிதருக்காக நிற்பதாகவும், ரணில் பணக்காரர்களுக்காக நிற்பதாகவும் கூறி அதற்கு அடையாளமாக 'நாங்கள் 'பாரம்பரிய பழக்க வழக்கங்களை மதிப்பவர்கள். வெற்றிலைக்கு இடம்கொடுப்பவர்கள். ஆனால், ரணிலோ 'சுயிங்கம்' பற்றிப்பேசுகிறார்' என்று குறிப்பிட்டார்.

'வெற்றிலையும் சுயிங்கமும்' என்ற அடையாளச் சொல் அவருக்குரியதாகி விடப்போகிறது.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பழைய உறுப்பினர். சுதந்திரக் கட்சியின் இனவாதக்கருத்துக்களிலும் அது பரப்பிய 'சோசலிச'த்திலும் பெரிதும் ஈடுபாடு காட்டி வந்தவர். சந்திரிகாவின் இன்றைய அரசில் உள்ள சிங்கள இனவாத அணியைச் சேர்ந்த ஒருவர் அவர். புலிகளுடனான சந்திரிகாவின் யுத்தத்தில் அவர் எடுக்கும் யுத்ததீவிரம் காணாது என்று விமர்சனம் செய்து வந்தவர் அவர். பௌத்தபிக்குகளுடன் அவருக்குள்ள உறவு மிகவும் பிரசித்தமானது. அவர் அதை எப்போதும் பெருவிருப்பத்துடன் பேணிவந்தார். சந்திரிகாவின் அதிகாரப் பரவல் யோசனையை எதிர்த்த பிக்குகளுடனான அவரது உறவும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கான தயாரிப்பில் ஈடுபடத் தொடங்குவதற்கு வசதியாக ஒரு பிரதம மந்திரியை நியமிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததும் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைத் தான் தெரிவு செய்தார். பிரதம மந்திரி பதவி என்பது ஜனாதிபதிக்கு அடுத்த அதிகளவு அதிகாரம் கொண்ட பதவியாகும்.

தன் மீது விமர்சனம் கொண்ட ஒருவரை இத்தகைய அதிகாரம் கொண்ட பதவிக்கு சந்திரிகா நியமித்ததற்கு நிச்சயம் காரணம் உண்டு. இம்முறை தேர்தல் களத்தில் இனவாத சக்திகள் தான் முன்னணியில் நிற்கப் போகிறார்கள் என்பதை அவர் புரிந்து வைத்திருந்தார். ஆகவே அவருக்கு இனவாத சக்திகளுடன் நெருக்கமான உறவைக்கொண்ட ஒருவர் தனது தேர்தல் பிரச்சாரத்தை முன்னின்று நடாத்த வேண்டும் என்ற எண்ணம் வலுவாக இருந்தது. இதுதான் சந்திரிகா அவரைப் பிரதமராக நியமிப்பதற்கான அடிப்படைக் காரணம்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக வந்தது என்ற நிகழ்வு, பொ.ஐ.முவிற்குள் இனவாதிகளது கை பலமாக ஓங்கிவிட்டது என்பதற்கான ஒரு குறியீடு எனலாம்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தன்னை ஒரு ஏழைப் பங்காளன் என்று காட்டுவதிலும், புலிகளை ஒடுக்குவதற்கான யுத்தத்தை நடாத்துவதில் மிகவும் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தும் ஒருவராகக் காட்டுவதிலும் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டு வருகிறார்.

இப்போதெல்லாம் அவர் தனது தேர்தல் பிரசாரப் பேச்சுக்களில் அரசாங்கத்தைவிட இனவாத சக்திகளையும் மதகுருமாரையும் தாஜாபண்ணுவதிலேயே கூடுதல் கவனம் செலுத்துவதைக் காணமுடிகிறது.

அவரது அபிப்பிராயப்படி இலங்கையில் நிலவும் பயங்கரவாதப் பிரச்சினை பேசித்தீர்க்கப்படக் கூடியதல்ல. அது யுத்தத்தினால் மட்டுமே சாத்தியப்படுத்தக் கூடியது. புலிகளுடன் பேசுவதாக இருந்தால் அது அவர்கள் ஆயுதங்களை கீழேபோட்டு-விட்டு சமாதானப் பேச்சுக்கு வந்தால் மாத்திரமே சாத்தியம். அது மட்டுமல்லாமல் அவர்கள் தாம் பயங்கரவாதத்தை முற்றாக கைவிட்டதாக அறிவிப்ப-துடன், ஒரு ஜனநாயக அரசாங்கத்திற்கு தயார் என்றும் அறிவிக்க வேண்டும்.

ஆக, பொ.ஐ.மு.வினரால் திரும்பத் திரும்ப சமாதானப்பேச்சு, சமாதானம், அரசியல் தீர்வு என்று என்னதான் சொல்லப்பட்டாலும், அவர்களது நோக்கமெல்லாம் அவையல்ல. புலிகளை முற்றாக அழிப்பதே என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்தியப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் 'நாம் கோடிக்கணக்கான விலை கொடுத்து ஆயுதங்களையும் பிற இராணுவத் தளபாடங்களையும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறோம். இப்போது இராணுவம் முழுக்க முழுக்க ஒரு சிறப்பான யுத்தத்தை செய்யுமளவுக்குரிய ஊக்கத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருக்கிறது. யுத்த நடைமுறை தற்காலிகமாக இந்த தேர்தல் காரணமாக சற்று ஸ்தம்பித்-திருந்தாலும் மீண்டும் அது தொடரும் என்று அறிவித்துள்ளார்.

பொ.ஐ.முன்னணியின் நடந்து முடிந்த ஆட்சிக்காலம் வெறும் வாக்குறுதிகளிலும், தமிழ் மக்கள் மீதான யுத்தத்திலும் கழிந்து போயிற்று. அடுத்ததாக வரப்போகிற காலம் வெறும் யுத்தத்தை மட்டுமே கொண்ட காலமாக அமையப் போகிறது என்பதை இவரது இந்தக் கூற்று தெளிவாக்கி விட்டுள்ளது.

பொ.ஐ.முன்னணி அரசியல் சீர்திருத்தம் செய்யும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு ஏற்றவிதத்தில் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கும் என்ற பழைய கதைகளை எண்ணி அல்லது நம்பி அதற்கு ஆதரவு தர யாராவது தமிழ்க்கட்சிகள் நிற்கின்றனவென்றால், அவை இங்கே சொல்லப்பட்ட இந்த விடயங்களுக்காக அல்ல, மாறாக தமது தனிப்பட்ட நலன்களுக்காகத் தான் அவர்கள் அதைச் செய்கிறார்கள் என்பது தெளிவு.

பொ.ஐ.மு. ஆட்சியின் கீழ், தமிழ் மக்களினது வரலாறு இன்னும் ஒரு தசாப்தகாலத்துள் பிரச்சினைகள் தீர்க்கப்படும் ஒரு சூழலைப் பதிவுசெய்வதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படவில்லை.

அதற்கான முயற்சிகள் எதிலும் தமிழ்க்கட்சிகள் ஈடுபடவும் இல்லை.

ஆக, நடுத்தெருவில் நிற்கும் தமிழ் மக்களுக்கு எதிர்காலம் தரப்போகிற தீர்வு என்ன?

அடியும் உதையும் குண்டுவீச்சும் மட்டும் தானா?

அல்லது தமிழீழமா?

மாறாக, ஐ.தே.க ஆட்சிக்கு வந்தால், அது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணுமா? அது யுத்தத்தை நிறுத்தி சமாதானத்திற்கு வழி காட்டுமா?

இந்தக் கேள்விக்கு சுயபுத்தியுள்ள எவராலும் ஆம் என்று கூற முடியாது. அதுவும் 'வரதர்' குறித்து ரணில் கூறும் கருத்துக்களைக் கேட்டால் நிச்சயமாக அதற்கு வாய்ப்பே இல்லை என்று தெரிகிறது.

ஆக, இந்த நாட்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளப் போகும் எதிர்காலம் தான் என்ன?

எதிர்காலம் என்ன என்பதற்கான பதிலுக்கு முன்பாக தெளிவாக வேண்டிய ஒரு விடயம்:

எமது எதிர்காலத்தை யாரும் எமக்குத் தரப்போவதில்லை. அதை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அது.

அந்த முடிவுக்கு நாம் வராதவரை எமது 'முடிவை' அவர்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்!




> “
>
> **ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்தியப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் 'நாம் கோடிக்கணக்கான விலை கொடுத்து ஆயுதங்களையும் பிற இராணுவ தளபாடங்களையும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறோம். இப்போது இராணுவம் முழுக்க முழுக்க ஒரு சிறப்பான யுத்தத்தை செய்யுமளவுக்குரிய ஊக்கத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருக்கிறது. யுத்த நடைமுறை தற்காலிகமாக இந்த தேர்தல் காரணமாக சற்று ஸ்தம்பித்திருந்தாலும் மீண்டும் அது தொடரும் என்று அறிவித்துள்ளார்.**
>
> ”

நன்றி - நூலகத்திட்டம்



## அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கடந்த வாரத்துச் சிங்களப் பத்திரிகைச் செய்திகள் குறித்த ஒரு அலசல்



கே.சி.ஜே.ரட்ணாயக்க

சென்ற முறை சிங்கள வார இறுதிப் பத்திரிகைகளில் அமைதியானதொரு ஆர்ப்பாட்டமற்ற விடயங்களைக் காணக் கூடியதாகவிருந்தது. ஏன் இந்த அமைதி என்பதை தலைப்புச் செய்திகளை அவதானிப்பதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

## ரணிலின் இரட்டை வேடம்!

**சிலுமின செப். 24**

**"ஐ.தே.க பத்திரிகை விளம்பரங்களில் ரணிலின் இரட்டை வேடம்"**

**-வடக்கில் ஒரு வேடம்: தெற்கில் ஒரு வேடம்**

ஐ.தே.கவினால் இம்முறை பாராளுமன்றத் தேர்தலுக்கென பிரசுரிக்கப்படும் பத்திரிகை விளம்பரங்களிலும், அவர்களது "உங்களது எதிர்காலம்" எனும் கொள்கை விளக்கவுரையிலும் தமிழ் மக்களுக்கு ஒரு விதமாகவும், சிங்கள மக்களுக்கு இன்னொரு விதமாகவும் கொள்கைகள் தீட்டப்பட்டுள்ளன என செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள அறிக்கைகளில் யுத்தம் ஒழுங்காக மேற்கொள்ளப்படுவதில்லை எனவும், தமிழ் அறிக்கைகளில் "யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அதிகரித்துள்ளதாக" எனக் கூறிக் கொண்டு ஐ.தே.க சிங்கள மற்றும் தமிழ் மக்களை ஏமாற்றுவதாக செய்தியில் அறிக்கையிடப்பட்டுள்ளது. இச் செய்தியை உறுதிப்படுத்தும் முகமாக ஐ.தே.க "ஹத்தே ஹத்த" (ஏழில் ஏழு) எனும் பத்திரிகை விளம்பரத்தின் சிங்கள, தமிழ் பிரதிகள் இரண்டின் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

**"தமிழ் தேசிய இராணுவத்தை ஏற்படுத்தும் யோசனையைத் தந்தது ரணில் தான்"**

**-வரதராஜப் பெருமாள்**

இது சிலுமின பத்திரிகையின் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த மேலும் ஒரு செய்தியாகும். அச் செய்தியில், தமிழ் தேசிய இராணுவத்தை உருவாக்கியமை குறித்து இன்று ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தன்னைக் குற்றம் சாட்டுகின்ற போதிலும் அன்று அவ்வாறானதொரு இராணுவத்தை அமைக்குமாறு யோசனை தெரிவித்ததும், அதற்கான பெயரைச் சூட்டியதும், ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை பெற்றுக் கொடுத்ததும் பிரேமதாசா-ரணில் அரசாங்கத்தின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவினால் தான் என வரதராஜப் பெருமாள் கூறுவதாக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும், புலிகள் இயக்கத்திற்கு ஆயுதங்கள், நிதி என்பனவற்றை வழங்கி ஜனநாயக ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களையும் மிக மோசமான முறையில் தாக்கிய போது அதற்கு முகம் கொடுக்க முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அவர்களினால்

## பிரபாகரன் இரத்தத்தால் உறுதி மொழி அளிக்க வேண்டும்!

மேற் கூறப்பட்ட ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அதேபோல் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்காது தமது உறுப்பினர்கள் 700 பேரைக் கொன்ற பிரேமதாசா அரசாங்கத்திற்கு எதிராக தாம் ஈழக் கொடியை உயர்த்திவிட்டு இந்தியாவுக்கு தப்பியோடியது உயிரைப் பாதுகாக்க என வரதராஜப் பெருமாள் அவர்கள் கூறியுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"ஜே.வி.பி அன்று கடைப்பிடித்த இந்திய விரோத நிலைப்பாடு போலியானது"**

-பிரின்ஸ் குணசேகர தமது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது சிலுமின பத்திரிகையின் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேலும் ஒரு விசேட செய்தியாகும். "இந்திய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் போராட்டம்" என்ற அறிமுகத்துடன் 13வது அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராக ஆயிரக் கணக்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை செய்த ஜே.வி.பி அன்று இந்திய மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் நெருங்கிய இரகசியத் தொடர்பைப் பேணியுள்ளதாகத் தெரிய வருவதாக செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் பா.உவும் ஜே.வி.பி ஆதரவாளராக செயற்பட்ட சட்டத்தரணி பிரின்ஸ் குணசேகர அவர்களினால் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட "A Lost Generation" எனும் நூலில் இது குறித்து விபரமாக



வெளிப்படுத்தியுள்ளதாக செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை ஜே.வி.பி தலைவர்கள் இந்திய றோ அமைப்புடன் தொடர்பு வைத்துள்ளனர் என கலாநிதி கமல் கருணாதாச அவர்கள் முன்பு வெளிப்படுத்தியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"ரணில் -பிரபாகரன் ஆகியோர் ஒரு நாணயத்தின் இரு பகுதிகள்"**

சிலுமின ஆசிரியர் தலையங்கத்திற்கு மேற்கூறப்பட்ட தலைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. பொ.ஐ.மு அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய யாப்புக்கு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இறுதியில் எதிர்ப்பு தெரிவித்தது புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தேவையினால் எனவும், இன்று பிரபாகரனின் உதவி ஐ.தே.கவுக்கு கிடைத்துள்ளதுடன் ஐ.தே.க தேர்தல் கொள்கை விளக்கமும் புலிகளுக்கு தேவையான போர் நிறுத்தம் மற்றும் இடைக்கால நிர்வாக சபை குறித்தான யோசனைகளை தெரிவித்துள்ளமையும் ரணில்- பிரபாகரன் கூட்டை வெளிப்படுத்துவதாக சிலுமின ஆசிரியர் தலையங்கத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**"வரதராஜ பற்றி கதைக்கும் ரணில் சிறையில் இருக்க வேண்டியவர்"**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கை இரண்டு ஆண்டுகளுக்கு புலிகளுக்கு வழங்குவதாகக் கூறிய ரணில், தற்போது நிலவும் யாப்பின்படி சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியவர் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அவர்கள் "சிலுமின" பத்திரிகைக்கு நேர்காணலை வழங்கி குறிப்பிட்டுள்ளார்.

**"இரிதா பெரமுண" செப் 24**

**"வாக்குகளைக் கொள்ளையடிக்க வந்தால் சுட உத்தரவு"**

பிரதான தலைப்புச் செய்தியில் இம்முறை தேர்தலில் பலாத்காரமாகப் புகுந்து தேர்தல் அதிகாரிகளை பயமுறுத்தி கள்ளவோட்டு இட வரும் நபர்களைச் சுடுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி எம்.பி.ராபன் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**"பிரபாகரன்-சந்திரிகா கடித பரிமாற்றம் நூலின் மூலம் தெரியவந்தது"**

பொ.ஐ.மு ஆட்சிக்கு வந்த வேளை புலிகள் இயக்கத்துடன் நடாத்திய சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த அனைத்து தகவல்கள் அடங்கிய நூல் ஒன்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக இரிதா பெரமுண பத்திரிகையின் முதல் பக்கத்தின் செய்தியொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. The Politics of Duplicity (போலியான அரசியல்) எனப்படும் அந் நூலின் விசேடம், ஜனாதிபதி மற்றும் புலிகள் இயக்கத் தலைவர்களுக்கிடையில் பரிமாறப்பட்ட 47 கடிதங்கள் இந்நூலில் இணைக்கப்பட்டடுள்ளமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**"பெருமாள் தொடர்பு எமக்கு கிடைத்த கௌவரமாகும்"-மங்கள**

லக்பிம முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்படும் மேற்கூறப்பட்ட செய்தியில், வரதராஜப் பெருமாள் பொ.ஐ.முவுடன் இணைந்தது பொ.ஐ.முவுக்கு கிடைத்த கௌரவமும், ஆடம்பரமும் என அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் கூறியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள வரதராஜப் பெருமாள் பொ.ஐ.முவின் மூலம் தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பது பிரச்சினைக்குரியதல்ல என அமைச்சர் கூறியுள்ளதாக செய்தியில் மேலும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**ஞாயிறு லங்காதீப செப். 24**

**"வாக்குச் சாவடிகளைப் பாதுகாக்க ஆன்மீகத் தலைவர்கள் அடங்கிய குழு"**

- தாய்நாட்டை காக்கும் அமைப்பு முன்னணியில்

லங்காதீப பத்திரிகையில் அப்பிரதான தலைப்புச் செய்தியில் நீதியானம், சுதந்திரமானதும் தேர்தலுக்கு பிக்குகள், இந்து /முஸ்லிம்/கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து வாக்குச் சாவடிகளை பாதுகாக்க குழுக்களை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இச் செய்தி இதற்கு முன்னரும் கூட பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனினும் பிக்குகள் மட்டுமே தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட வேண்டுமென்று இதற்கு முன்னர் அச்செய்திகளில் கூறப்பட்டிருந்தது.

நீதியானதும் சுதந்திரமானதும் தேர்தலுக்கு பல்லின, மத இணைப்பைக் கட்டியெழுப்புவோம் என லங்காதீப பத்திரிகையில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் வாக்காளர்களை சிங்கள/ தமிழ்/ முஸ்லிம் என்று பிரித்து விடும் இனபேத அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் லக்பிம பத்திரிகையின் உள் பக்கங்கள் பல இன அரசியல் தொடர்பான கருத்துக்களுக்கு சார்பான கட்டுரைகள் மற்றும் செய்திகள், நேர்காணல்களை உள்ளடக்கியுள்ளது. அவற்றின் சில தலைப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**"பிரபாகரன்-பெருமாள் பெயரில் அரசாங்கம் நடத்துவது சிங்கள மக்களின் சாபக்கேடாகும்"**-புளொட்

**"புலிகளுக்கு தீர்வு வழங்க எவராலும் முடியாது"** -வாசுதேவ நாணயக்கார

**"நாம் புதிய அரசொன்றை கட்டி எழுப்பப்போகிறோம்"**

-சிஹல உறுமய தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க

**"பிரபாகரன் இரத்தத்தினால் உறுதிமொழி அளித்துவிட்டு வருவானால் நாம் பிரபாகரனை ஏற்றுக் கொள்வோம்"**

-அமைச்சர் மங்கள சமரவீர

**"ஈழவாதிகள் பொ.ஐ.முவினரா? ஐ.தே.கவினரா?"**

இவ்வாரம் தேர்தல் குறித்து பத்திரிகைகள் ஆற்றியுள்ள பாத்திரம் மேற் கண்டவாறு தான் உள்ளது. இது நகைப்புக்குரிய விடயமா அல்லது கவலைக்குரிய விடயமா என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

## றோவுடன் ஜே.வி.பி தொடர்பு!

**லக்பிம செப்.24**

**"தேர்தல் வேலைகளுக்கு பாதாள உலகத் தலைவர்களை மறைவிலிருந்து வெளியே எடுக்க முயற்சி"**

பலதரப்பட்ட குற்றங்களுக்கென சிறைப்படுத்தப்பட்டுள்ள பாதாள உலகத் தலைவர்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கென பயன்படுத்த சில அரசியல்வாதிகள் முயற்சிப்பதாக லக்பிம பிரதான தலைப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கென சிறைத்தண்டனை அனுபவிக்கும் குற்றவாளிகள் எதிர்வரும் 2,3 வாரங்களில் சிறையில் இருந்த தப்பிச் செல்லத் தயாராக உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து எதிர்ப்பு"**

காலம் சென்ற எம்.எச்.எம் அஷ்ரஃப் அவர்கள் வகித்த அமைச்சுப் பதவியை ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு வழங்குவது குறித்து அமைச்சரவையும், கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



## வவுனியா:
# தூக்கியவர் யாரோ?



ஓகஸ்ட் 24 ஆம் திகதி தோணிக்கல் அம்மன் கோவிலில் துாக்குப்போட்ட நிலையில் இறந்து கிடந்த சண்முகநாதன் மகாதேவன் (19) என்ற இளைஞனின் மரணத்தில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அந்த மரணம் தொடர்பான விசாரணைகள் வவுனியா மாவட்ட நீதிவானால் நேரடியாக நடத்தப்பட்டது.

இந்த விசாரணைக்காக காலஞ்சென்றவரான மகாதேவனின் பெற்றோர், சகோதரன், மரண விசாரணை நடத்திய திடீர்மரண விசாரணை அதிகாரி, வைத்திய பரிசோதனை நடத்திய வவுனியா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர், விசாரணைகளை நடத்திய சிறுகுற்ற பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

மாணவனாகிய மகாதேவன் துாக்கில் தொங்கிய நிலையில் இறந்து கிடந்த போதிலும் அவருடைய மரணத்திற்கான காரணம் அறியப்படாததனால், திடீர்மரண விசாரணையின் முடிவில் பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

திடீர்மரண விசாரணையின் போது தமது மகன் ஏன் இறந்தார் என்பது தெரியாது எனச்-சாட்சியமளித்திருந்த பெற்றோர், நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் கையெடுத்துக் கும்பிட்டு அவருடைய மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்தனர். அத்துடன் இளைஞனின் தாயார் நீதிமன்றத்தில் மயக்கமடைந்து விழுந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மரண விசாரணை தொடர்பாக திடீர் மரண விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் விளக்கமளித்தார்.

சந்தேகத்திற்குரிய நிகழ்வுகளைக் கொண்ட இந்தத் திடீர்மரணம் தொடர்பாக உடனடியாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு-வரத்தவறியதற்காக திடீர்மரண விசாரணை அதிகாரியைக் கண்டித்த நீதிவான், மரண விசாரணையின் பின்னர் பகிங்கத் தீர்ப்பு வழங்கி பொறுப்போடு செயற்பட்டுள்ளார் என்பதைக் குறிப்பிட்டு அதற்காக குறிப்பிட்ட திடீர்மரண விசாரணை அதிகாரியை நீதிவான் பாராட்டினார்.

ஒரு பிரஜையின் திடீர்மரணத்தை விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டிய மிகவும் பொறுப்பான கடமையே திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள நீதிவான் எம்.இளஞ்செழியன், மரண விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்ற சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என திடீர் மரண விசாரணை அதிகாரி கருதுபவர் யாராக இருந்தாலும், எத்தகைய் சமூக அந்தஸ்தைக் கொண்டிருந்தாலும், அவர்களை விசாரணைக்குச் சமூகமளிக்குமாறு அழைப்பு விடுப்பதற்கு சகல உரிமையும் அதிகாரமும் மரண விசாரணை அதிகாரிகளுக்கு உண்டு என்பதையும் எடுத்துக் காட்டினார்.

இந்த இறந்தவருடைய உடலை வைத்திய பரிசோதனை நடத்திய அதிகாரி சாட்சிய-மளிக்கும் போது, இறந்தவருடைய உடலில் எந்த விதமான இரசாயன மணமும் இருக்கவில்லை என்றும், உடலில் எந்த விதமான காயங்களும் காணப்படவில்லை என்றும், சுருக்கிட்டதன் காரணமாக மூச்சுத் திணறியே மரணம் சம்பவித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இறந்தவருடைய சகோதரன் சாட்சியமளிக்கும் போது, சம்பவ தினத்தன்று இரவு பதினொன்றரை மணிவரையில் தாங்கள் இருவரும் தமது வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நித்திரைக்குச் சென்றதாகவும், இரவு பதினொன்றரை மணியளவில் வீட்டுக்கு வெளியே நாய் குரைத்த சத்தம் கேட்டு வெளியில் எழுந்து வந்து பார்த்ததாகவும், சந்தேகத்திற்கு இடமான முறையில் எதுவும் தென்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன், தமது வீட்டில் ஓர் ஆச்சி இருப்பதாகவும் அவர் வழமையாகவே இரவில் நித்திரை கொள்வதில்லை என்றாலும் சம்பவ தினத்தன்று அவரும் நன்கு நித்திரை கொண்டுள்ளார் என்றும், வீட்டில் ஏனையோர் வழமையாக அதிகாலை எழுந்துவிடும் வழக்கம் இருந்த போதிலும், அன்று அனைவரும் நன்கு விடிந்த பின்பே நித்திரையை விட்டு எழுந்ததாக்வும் இதனால், அவருடைய மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இறந்தவர் துாக்கில் தொங்கிய அம்மன் கோவிலின் ஐயருடைய வாக்குமூலம் மரணவிசாரணையின் போது பதிவு வெய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிவான் குற்றத்தடுப்பு பொலிசாருக்கு கோவில் ஐயர், கோவில் பரிபாலன சபையினர் ஆகியோருடைய வாக்குமூலங்களைப் பதிவு செய்வதுடன் இந்த மரணம் தொடர்பாக பூரணமான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதன் பின்னர் செப்.22ம் திகதி வெள்ளியன்று வவுனியா நீதிமன்றத்தில் அம்மன் ஆலயக் குருக்கள் சாட்சியமளித்தார்.

சம்பவ தினம் விசேட பூஜை ஒன்றை நடத்துவதற்காக முதல் நாள் இரவு கோவில் நந்தி, கொடிக்கம்பம் முதலானவற்றிற்கும் நிறம் தீட்டப்பட்டதென்றும், இரவு 10 மணி வரை தானும் அந்த வேலைகளில் ஈடுபட்டிருந்து விட்டுச் சென்றதாகவும் ஆலயக்-குருக்கள் தெரிவித்துள்ளார்.

"நந்திமீது கால் வைத்து ஏறியதற்கு அடையாளம் இல்லை. பெயின்ட் அடித்திருந்தது. ஒருவர் துாக்குப் போடுவதாக இருந்தால், நந்தி மீது ஏறித்தான் துாக்கு போட்டிருக்க வேண்டும். ஆனால் எந்தவிதமான அடையாளங்களும் இருக்கவில்லை" என குருக்கள் சாட்சியமளித்துள்ளார்.

சிறுநீர் கழித்ததற்கு அடையாளமாக ஏதும் அடையாளம் இருந்ததா என வினவியதற்கு இல்லையென குருக்கள் பதிலளித்துள்ளார்.


இதனையடுத்து ஸ்தலத்திற்குச் சென்ற நீதிவான் எம்.இளஞ்செழியன் மேற்படி இளைஞனின் சடலம் தொங்கிய இடத்தைப் பார்வையிட்டார். சைக்கிள் நிறுத்தப்பட்ட இடம், செருப்பு வைக்கப்பட்டிருந்த இடம் போன்ற அனைத்தையும் பார்வையிட்டதுடன் அவசியமான குறிப்புக்களையும் எடுத்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தோணிக்கல் லக்ஸ்சபானா வீதி அம்மன் கோவில் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர், செயலாளர்கள் ஆகியோரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்-படுவதற்காக வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்-பட்டுள்ளன.

என்.எம்.ஆர்.

---

# எங்களது ஜனநாயக வழிமுறை இதுதான்!





செப்.19 ஆம் திகதி, வவுனியா தவசிகுளம் பகுதியில் உள்ள சேவாலங்கா தொண்டர் நிறுவனத்திற்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்காகச் சென்ற தமது உறுப்பினர்கள் மீது அங்கிருந்த சுரெஷ் அணியினர் துபபாக்கிப் பிரயோகம் செய்து கொலை செய்ய முயற்சித்ததாக வரதர் அணியினர் பொலிசாரிடம் முறையிட்டுள்ளார்கள்.

இதனையடுத்தே பொலிசார் சுரேஷ் அணியைச் சேர்ந்த ஆறுமுகம் நடராசா, கணபதி தேவமித்திரன் ஆகிய இருவரையும் கைது செய்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததையடுத்து, இருவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கு முன்னதாக ஒருவார காலமாகவே இவ்விரு தரப்பினருக்கும் இடையே பாவற்குளம் பகுதியில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவதில் ஆரம்பித்த சச்சரவு அடிதடிக்குச் சென்று பின்னர், தவசிகுளம் பகுதியில் கைக்குண்டெறிந்தது, துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை முயற்சியில் ஈடுபட்டது என்ற அளவிற்குச் சென்றுள்ளது.

சுரேஷ் அணியைச் சேர்ந்த பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை சுவரொட்டி ஒட்டிய போது ஏற்பட்ட சச்சரவுக்காகக் கண்மண் தெரியாமல் தாக்கி வீதியில் துாக்கியெறிந்து விட்டு வந்ததையடுத்து, அவரை ஊரவர்களின் உதவியோடு சுரேஷ் அணியினர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்கள்.

இதனையடுத்து, இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வரதர் அணியைச் சேர்ந்த ஒருவரை வவுனியா ரயில் நிலைய வீதியில் உள்ள தனியார் தொலைபேசி நிலையத்தில் இருந்து கடத்திச் சென்று நையப்புடைத்த சுரேஷ் அணியினர் அவரை வவுனியா வைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதித்திருக்கின்றார்கள். இதனை அறிந்து கோபமுற்ற வரதர் அணியினர் அன்றைய தினம் மாலை வவுனியா ரயில் நிலையத்திற்கு எதிரில் மோட்டார் சைக்கிளில் வந்த சுரேஷ் அணியைச் சேர்ந்த ஒருவரைத் தாக்கி அவரிடமிருந்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளதாக சுரேஷ் அணியினர் தெரிவித்துள்ளார்கள்.

அன்றிரவு சுரேஷ் அணியினரின் தவசிகுளம் முகாம் மீது வரதர் அணியினர் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதாகவும், மறுநாள் பகல் வேளையில் அந்த முகாமை நோக்கி வரதர் அணியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தாக்குதல் நடத்தியதையடுத்தே தமது உறுப்பினர்கள் தற்காப்புக்காக எதிர்தாக்குதல் நடத்தியதாகவும், இதனையடுத்து தாக்குதல் நடத்திய வரதர் அணியினர் தப்பியோடி-விட்டதாகவும் சுரேஷ் அணியினர் தெரிவித்துள்ளனர்.

கைக்குண்டெறிந்தது, தாக்கிக் காயப்படுத்தியது ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் வரதர் அணியைச் சேர்ந்த நால்வர் வவுனியா நீதிமன்றத்தில் பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து அவர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார். இவர்களில் ஒருவர் தேர்தலில் போட்டி-யிடுகின்ற வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் மத்தியில் தமக்குள்ள செல்வாக்கைக் குலைப்பதற்காகவும், தம்மீது பழியை ஏற்படுத்தி தண்டனை பெறச் செய்வதற்காகவுமே இத்தகைய செயற்பாடுகளில் வரதர் அணியினர் ஈடுபட்டுள்ளதாக சுரேஷ் அணியினர் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

வெறும் பாராளுமன்றக் கதிரைகளுக்காக பொல்லுத் துாக்கும் இந்தக் கனவான்களிடம் தயவு செய்து பொல்லுகளைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வாருங்கள் என்று யார் கேட்பது?

- தருமர்

# கண்டியில் ஓர் ஆவணக் காப்பகம்:

## - நுண்படச் சுருளில் தமிழ்ப் படைப்புகள்!



இரா. கனகரத்தினம்

வரலாற்றுத் துறை தொடர்பான அக்கறையீனம் நமது தமிழ்ச் சூழலில் ஒரு நோயாக நம்மவர்களைப் பீடித்துள்ளது எனலாம். இந்த அசிரத்தை நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும், சிங்கள இன வரலாற்று ஆசிரியர்கள், சம்பவங்கள், நிகழ்வுகளைத் திரித்தும் மறைத்தும் எழுதி வருவதோடு மட்டுமல்ல அவர்கள் கூறுவது தான் சரியான வரலாறு என ஏனைய மக்களை நம்ப வைக்கும் கைங்கரியத்தையும் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறார்கள். எமது மாணவ மாணவியர்களைப் பிஞ்சு வயதில் மூளைச்சலவை செய்து 'தமிழர்கள்: வந்தேறுகுடிகள்' என்ற நிரந்தர அடிமை மனோபாவத்தை அவர்களிடையே உருவாக்க முயற்சி செய்கிறார்கள்.

பண்டைய வரலாறு ஒரு புறமிருக்க நிகழ்கால வரலாற்றுத் தரவுகளையாவது ஆவணப்படுத்துவது காலத்தின் கட்டாயம், ஒரு அவசியமான பணி. இந்த வரலாற்றுப் பணியைத் தனது முக்கிய மூல இலட்சியமாகக் கொண்டு தனிமனிதனாக, கடந்த ௪௫ வருடங்களாக பல்வேறு அரசியல் சூழ்நிலைகளுடும், பணியாற்றி வருபவர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்கள். தரவுகளைச் சேர்ப்பதோடு நின்று விடாது நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றை நுண்படச் சுருள் (Micro Filming) ஆக்கி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், வைத்து பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தனது பணி குறித்த தகவல்களை இங்கே விளக்கமாக வெளிப்படுத்துகிறார் அவர்.

**அழிந்து போய்க் கொண்டிருக்கும் தமிழர் வரலாற்றுத் தரவுகளைப் பேணிப் பாதுகாக்க. — நுண்படச் சுருள்களாக மாற்றுவது (மைக்றோ பிலிம் செய்வது) தான் சிறந்ததோர் முறை என்கிறீர்களா?**

நிச்சயமாக, உலகின் பல்வேறு நாட்டுக் காப்பகங்களிலும் இந்த முறையே இன்னமும் பின்பற்றப்பட்டு வருகிறது. தொழில் நுட்பம் பல்வேறு பரிமாணங்களில் இன்று அதிதீவிர வளர்ச்சி காணப்பட்டாலும் அடிப்படையில் -அதாவது நுண்படச் சுருளாக பிரதி பண்ணும் முறையில் எந்த விதமான மாற்றங்களும் இதுவரையில் ஏற்பட்டு விடவில்லை. அதோடு நீதிமன்றங்களும் கூட நுண்படச்சுருளில் பதிவு பண்ணப்பட்ட ஆவணங்களை முக்கிய சாட்சிப் பொருள்களாக ஏற்றுக் கொண்டுள்ளன. மேலும் படுவேகமாக முன்னேறி வரும் கணிணித்துறைக்குக் கூட ஈடுகொடுக்கக் கூடியது இந்த பதிவு செய்யப்பட்ட நுண் படச் சுருள்கள்.

**அப்படியானால் இத்தொழில் நுட்பத்தைப் பல ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தியிருந்தால் யாழ். நூலகத்தில் எரிந்து போன பல்லாயிரக்கணக்கான அறிவுக் களஞ்சியங்களை நாம் காப்பாற்ற முடிந்திருக்கும் என்கீறீர்களா?**

நிச்சயமாக, நுண்படச் சுருளாகப் பதிவு பண்ணும் இந்தத் தொழில் நுட்பம் பல ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது. அதனைப் பயன்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்திருக்க வேண்டும். இதற்கு மேலை நாட்டுத் தூதரகங்களை அணுகி உதவிகோரி இருக்கலாம். அவ்வாறு நுண்படச் சுருள்களாக அவற்றை மாற்றியிருப்பின் நிச்சயமாக நாம் அவற்றைக் காப்பாற்றியிருக்க முடியும்.

**ஒரு தனி மனித முயற்சியாக கடந்த 45 ஆண்டுகளாக நீங்கள் சேகரித்த தரவுகளை உங்கள் காலத்திலேயே நுண்படச் சுருள்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள். உங்கள் முயற்சி பாராட்டத்தக்கது. ஆனால். இத்தகு முயற்சிகளில் யாழ். நூலகம். யாழ். பல்கலைக்கழக நூலகம் மற்றும் ஏனைய மாவட்ட நூலகங்கள் ஈடுபட முடியாமல் போனது ஏன்?**

நாட்டில் ஏற்பட்டிருக்கும் யுத்த நிலை ஒரு காரணம். அடுத்த காரணம் போதிய அக்கறையின்மை. யாழ். பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த எனது ஏராளமான சேகரிப்புகளை யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்திலேயே காலத்திற்குக் காலம் கப்பல் மூலமாக கொழும்புக்குத் தருவித்து இப்போது கண்டியில் வைத்து நுண்படச் சுருளில் பதிவு செய்து கொண்டிருக்கின்றேன். மிகச் சாதாரணமான குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தால் இதைச் சாதிக்க முடியுமானால் ஏன் ஒரு சில மிக முக்கிய சேகரிப்புக்களையாவது யாழ். பல்கலைக்கழகத்தால் கொழும்புக்குக் கொண்டு வந்து நுண்படச்சுருளாக்க முடியவில்லை? அழிந்த பின் அல்லது அழிக்கப்பட்ட பின் வருந்துவதில் என்ன பலன் இருக்கப் போகிறது?

**இலங்கையில் உங்களைப் போன்ற தனியார்கள் வேறு யாராவது இத்துறையில் ஈடுபட்டுள்ளார்களா?**

நான் அறிந்த வரை இல்லை. ஆனால், வீரகேசரி நிறுவனமும், வட்டுக்கோட்டை யாழ். கல்லூரியும் தம்மிடமுள்ள சேகரிப்புக்களின் ஒரு பகுதியை நுண்படச்சுருளாக்கி உள்ளதாக அறிகிறேன். மேலும் கொழும்பு ஆங்கில, சிங்கள தினசரிகள் தமது வெளியீடுகளை உடனுக்குடன் நுண்படச் சுருள்ளாக்கி வருகின்றன எனவும் அறிந்துள்ளேன்.

**இத்தொழில் நுட்பத்தை பற்றி மேலும் சில தகவல்களைத் தரமுடியுமா?**

ஓலைச் சுவடிகள், நூல்கள், சிற்றேடுகள், சஞ்சிகைகள் என்பவற்றை அவற்றின் அளவிற்கேற்ப 16மி.மி., 35மி.மி. கமராக்கள் மூலம் படமாக்குகிறோம். சாதாரணமாக 16மி.மி. படச்சுருள்களில் 1200 பக்கங்களும், 35மி.மி. படச்சுருள்களில் ஏறத்தாழ 600 பக்கங்களும் நுண்படச் சுருள்களாக மாற்ற முடியும். திறமையான தொழில் நுட்பவியலாளர் ஒருவரால் சராசரி 3600 பக்கங்களுக்கு மேல் அதாவது 3 நுண்படச் சுருள்களை தினசரி பதிவு செய்ய முடியும். இவை பின்பு அவர்களின் தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரசாயன மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. மூல நாடா எப்போதும் பிலிம் ஆகவே இருக்கும். என்பது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இப்படியான நுண்படச் சுருள்களை வாசிக்கவும், பிரதியாக்கவும் நுண்படச் சுருள் வாசிப்பு பிரதியாக்கல் (Micro Film Reader Printer) இயந்திரம் மூலம் முடியும். இந்த மூலப்பிரதியிலிருந்து தேவையான எத்தனை பிரதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**இதன் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளை விபரிப்பீர்களா?**

இயற்கை அழிவு, வன்செயல் அழிவு, தீ, கறையான், எலி போன்றவற்றிலிருந்து எமது சேகரிப்புகளைப் பாதுகாக்கவும், இடநெருக்கடியைத் தவிர்க்கவும், இதன் மூலம் முடியும். பல பிரதிகளை எடுத்து பல்வேறு நூலகங்களிலும், பல நாடுகளிலும் வைத்துப் பாதுகாப்பதன் மூலம் இவற்றை அழிவிலிருந்து காப்பற்றலாம். பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும், தமிழர் வரலாற்று ஆய்வாளர்களும் தம் ஆய்வுக்கு இவற்றைப் பயன்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும். ஒரு சில சூட்கேஸ்களுக்குள் ஒரு நூலகத்தையே நகர்த்த முடியும் என்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

**உங்கள் கூற்றுப்படி பிலிம் ஆக்கப்பட்ட தகவல்களை வாசித்றிய நுண்படச் சுருள் வாசிப்பு பிரதியாக்கல் கருவி அவசியமாகிறது. பெறுமதி மிக்க இக்கருவியை சாதாரணமாக ஒரு மாணவனோ ஆய்வாளரோ இலகுவில் பெற்றுவிட முடியுமென நீங்கள் நம்புகிறீர்களா? ஆக. இது சாதாரண மட்டத்தில் உள்ளவர்களுக்கு எவ்வாறு பயன்படப் போகிறது?**

தமிழர் வரலாற்றை நீண்ட காலத்திற்கு பேணிப் பாதுகாப்பது ஒரு அவசியமான பணி. கிடைக்கக்கூடிய தொழில் நுட்ப வளங்களைப் பயன்படுத்தி முடிந்தளவு விரைவாக இதனை நாம் செய்து முடிக்க வேண்டுமென்பதில் உங்களுக்கு மாறுபட்ட கருத்து எதுவுமிருக்குமென நான் நினைக்கவில்லை. இதில் இரு வகையான நன்மைகள் உண்டு. ஒன்று நான் முன்பு குறிப்பிட்ட நீண்டகால அடிப்படையிலான நன்மை, இரண்டாவது நீங்கள் குறிப்பிட்ட உடனடியாகக் கிடைக்கக்கூடிய நன்மை. இன்று இலங்கையின் முக்கிய நூலகங்களில் நீங்கள் குறிப்பிடும் நுண்பட வாசிப்பு - பிரதியாக்கக் கருவிகள் புழக்கத்துக்கு வந்து விட்டன. நுண்படச் சுருள் வாசிப்புக்கு மட்டுமெனக் குறைந்த விலையில் ஏராளமான கருவிகள் வந்து சேர்ந்துள்ளன. கணிணித் தொழில் நுட்பம் மேலும் வளர்ச்சியடைந்து இந்த நுண்படச் சுருள்களை அவற்றின் மூலம் வாசித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் கூட மேலை நாடுகளில் சாதாரணமாகக் கிடைக்கிறது. நாம் முன்பு குறிப்பிட்டபடி வளர்ந்து வரும் தொழில் நுட்ப வளங்களை உள்வாங்கிக்கொள்ளும் தன்மை இந்த நுண்படச் சுருள் துறைக்கு உண்டு.

**சாதாரணமாக எவ்வளவு காலத்திற்கு இந்தப் பிலிம்களைப் பாதுகாக்க முடியும்?**

நன்கு குளிரூட்டப்பட்ட அறையில் வைத்து பேணிப் பாதுகாப்பதன் மூலம் சுமார் - 100 ஆண்டுகளுக்கு இவற்றைப் பயன்படுத்த முடியும். மீண்டும் அதனைப் பிரதி எடு[illegible]தன் மூலம் மேலும் 100 ஆண்டுகளுக்குப் பாவிக்க முடியும்.



நுண்படச் சுருளில் பதிவு செய்யும் போது

**இப்பணிக்கான நிதிச் செலவை எப்படிச் சமாளிக்கிறீர்கள்? வெளிநாட்டு. உள்நாட்டுத் தமிழர்களிடையே எவ்வகையான உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள்? நுண்படச்சுருள்களின் பிரதிகளை முழுமையாகவோ. ஒரு குறிப்பிட்ட பகுதியையோ பெற முடியுமா?**

தாரளமாக, இதைத் தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம், நம் தமிழர் வாழும் நாடெல்லாம் இவை பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். இப்பணிக்கு நிறையப் பணம் தேவைப்படுகிறது. அதிர்ஷ்டவசமாக நோராட் நிறுவனம் செலவின் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டுள்ளது! நிதி உதவி வழங்த விரும்புவோர் பிரதிகள் தேவையானோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 08 -233547 முகவரி ஆர். கனகரத்தினம் 128/8, Hettiyawatte Mulgampola, Kandy, Sri Lanka

**உங்கள் சேகரிப்புக்களில் இலங்கை இலக்கிய ஏடுகளும். புலம் பெயர்நாட்டு சஞ்சிகைகள் ஏடுகளும் இடம்பெற்றுள்ளனவா?**

இலங்கையில் வெளிவந்த ஏறத்தாழ ஆயிரம் சஞ்சிகைகள் ஏடுகள் கைவசமுள்ளன. அதுபோலவே புலம்பெயர் நாட்டுச் சஞ்சிகைகளும் ஏராளமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. 7500க்கு மேற்பட்ட பல்துறைக் கட்டுரைகளும், 4000க்கு மேற்பட்ட கேலிச்சித்திரச் சேகரிப்புக்களும் கைவசம் உள்ளன. இவை அனைத்தும் நுண்படச் சுருள்களில் பதிவு செய்யப்படவுள்ளன. இலக்கிய நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்! உங்களால் வெளியிடப்படும் ஏடுகள், சஞ்சிகைகளில் ஒவ்வொரு பிரதியையேனும் எமது காப்பகத்திற்கு அனுப்பி வையுங்கள். நுண்படச் சுருளில் பதிவு செய்வதன் மூலம் அவை நிரந்தரமாகப் பாதுகாக்கப்படும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

**இறுதியாக உங்களிடம் ஒரு கேள்வி. உங்கள் முயற்சியின் இறுதி நோக்கம் என்ன?**

தமிழ் மக்களுக்கென ஒரு தேசியக் காப்பகம் உருவாக வேண்டும்! அது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு காப்பரணாக அமைய வேண்டும். காப்பகங்கள் மட்டுமல்ல, தொழில் நுட்பக் கூடங்கள், கைத்தொழில் மையங்கள், விஞ்ஞான அறிவியல் ஆலயங்கள் என எங்கள் மண் எதிர்காலத்தில் உலகுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பு.

- இ.க.

### இதுவரை நுண்படச்சுருளில் பதிவு செய்யப்பட்டவை

| | | |
|---|---|---|
| 1864 - | | Ceylon Patriot தேசாபிமானி |
| 1899 | - 1930 | Hindu Organ (அரசியல் செய்திகள் மட்டும்) |
| 1930 | - 1958 | ஈழகேசரி |
| 1946 | - 1948 | Kesari |
| 1952 | - 1955 | சுதந்திரன் (தினசரி) |
| 1954 | - 1977 | Tribune |
| 1967 | - 1973 | விடுதலை |
| 1975 - | | காங்கிரஸ் |
| 1977 | - 1978 | Independent |
| 1977 | - 1982 | சுதந்திரன் - (வாரம்) |
| 1978 | - 1979 | Sansoni Commission Evidence |
| 1978 | - 1999 | Lanka Guardian |
| 1982 | - 1987 | Saturday Review |
| 1989 | - 1990 | திசை |
| 1990 | - 2000 | சரிநிகர் |
| 1993 | - 2000 | தினமுரசு |
| 1993 | - 1999 | புதிய கண்ணோட்டம் |
| 1995 | - 1996 | தாய்நாடு |

தந்தை செல்வா * சொற்பொழிவுகள் (1947 - 1976)

தந்தை செல்வா * S.J.V. Chelvanayagam and the Crisis of Sri Lanka - A. Jeyaratnam Wilson

* செல்வா ஈட்டிய செல்வம் அ. அமிர்தலிங்கம்
* செல்வாஞ்சலி - கோவை மகேசன்
* தமிழர் செல்வம் - புத்தொளி
* தமிழர் செல்வம் - புத்தொளி
* 2,500,000 மக்கள் தலைவர் - குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்
* தமிழரசுத் தந்தை - குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்
* செல்வாவின் சிந்தனைகள் - குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்


(பணி தொடருகிறது)

நன்றி - நூலகத்திட்டம்



## எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 3

# மாலியினால் பாடங் கற்றேன்!




கலாபவனம் சுப்பையா என்றால் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கலையுலகம் முழுவதும் நன்கு அறியப்பட்ட பெயர்.

ஆளைப் பார்த்தாலே பரத நாட்டியத்தின் நளினம் அவரது உருவத்தில் தெரியும்.

கொக்குவிலில் 'கலாபவனம்' என்று ஒரு நடனப்பள்ளியை நடத்தி பல நாட்டிய தாரகைகளை உருவாக்கி வளர்த்த பெருமை சுப்பையா அவர்களைச் சாரும்.

கலைஞனுக்கே உரியமிடுக்கு அவரிடம் என்றும் குறைந்ததில்லை. அதேபோல் அவருக்குக் கொஞ்சம் முற்கோபமும் இருக்கும்.

கலாபவனம் சுப்பையா போல் கீதாஞ்சலி நல்லையா என்றும் ஒரு நாட்டியக் கலைஞர் யாழ்ப்பாணத்தில் இருந்தார். இவரும் நடனப்பள்ளி நடத்தி வந்தார்.

இவரது பள்ளியில் சிறுவர் சிறுமியரே அதிகம் நடனம் கற்று வளர்ந்தனர்.

இதே சமயம் வேல் ஆனந்தன் என்றொரு கலைஞரும் நாட்டியம் சொல்லிக் கொடுத்து வந்தார். இவர் குச்சுப்பிடி நடனம் பயிற்றுவித்து வந்தார். கல்வி நிலையங்களிலும் இவர் குச்சுப்பிடி நடனம் பயிற்றுவித்தார்.

மேடைகளிலும் இவரது நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறும். இவரது நிகழ்ச்சிகளுக்கு கூட்டமும் அதிகம் சேரும். பஸ்மாசுரமோகினி என்ற நாட்டிய நாடகத்தில் வேல் ஆனந்தனும் பத்மினி என்ற இளம் பெண்ணும் தோன்றும் காட்சிகள் மக்களின் கரகோஷத்தைப் பெறும்.

மகாலிங்கசிவம் என்றொரு பையனை நண்பர் சசிபாரதி சபாரெத்தினம் ஒருநாள் என்னிடம் கூட்டிவந்து அறிமுகம் செய்து வைத்து இவர் கவிதைகள் எழுதுவார். வளரக்கூடியவர், திறமைசாலி இவரைப் பயன்படுத்தலாம் என்றார்.

இவரது கவிதைகள் ஈழநாடு பத்திரிகையில் வெளிவரத் தொடங்கின. பசுவூர்மாலி என்றும் இவரது பெயர் பத்திரிகையில் கவிதைகளுடன் வெளிவந்து கொண்டிருந்தது.

கலை நிகழ்ச்சிகளுக்கும் பசுவூர் (பசுவூர் என்றால் நெடுந்தீவு) மாலி சென்று பார்த்து செய்தி எழுதத் தொடங்கினார். பின்னர் இவர் விமரிசனமும் எழுத ஆரம்பித்தார்.

கூட்டங்கள், நாடகங்கள் என கலை நிகழ்ச்சிகளுக்கும் சென்று எழுதிவந்த பசுவூர் மாலி பின்னர் நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் சென்று விமரிசனங்கள் எழுதி வந்தார். நன்றாகவே எழுதுகிறார் என்று நாங்களும் அவர் எழுதுவதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. இடையிடையே வெளியிலிருந்து மாலி பக்கச் சார்பாகவும் எழுதுகிறார் என்று வந்த சில சிறு புகார்களை பொறாமையின் பிரதிபலிப்பு என்று உதறிவிட்டேன். மாலியின் நாடக நாட்டிய கலைவிமரிசனங்கள் ஈழநாடு, பத்திரிகையில் ஓகோ என்று வெளிவந்து கொண்டிருந்தன.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் ஒரு விழா, ஆண்டு விழாவோ கலைவிழாவோ நன்றாக நினைவில்லை பெரியவிழா. அமைச்சர் செல்லையா குமார சூரியர் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதாக ஞாபகம். நாட்டிய நாடக நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம் பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அழைப்பின் மீது பிரமுகர்கள் எல்லோரும் வந்திருந்தனர்.

சற்றுத் தாமதமாகவே வந்த அமைச்சர் குமாரசூரியரை கல்லூரி அதிபர் மற்றும் முக்கியஸ்தர்கள் வரவேற்று உள்ளே அழைத்துச் செல்லத் தொடங்கினர். இவர்களுடன் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த 'ஈழநாடு' நிருபர் பசுவூர் மாலி என்ற மகாலிங்கசிவமும் பின் தொடர்வதற்கு எத்தனித்த சமயம் அவரைத் தடுத்த கலாபவனம் சுப்பையா, நீ என்னடா எழுதுகிறாய். நீ என்ன நாட்டியத்தில் எல்லாம் கற்றமேதையோ என்று கேட்டபடியே காலிலிருந்த செருப்பைக் கழற்றி மாலிக்கு அறைந்து விட்டார்.

எல்லோரும் அமைச்சருக்குப் பின்னால் சென்று விட்டபடியால் இதை யாரும் கவனிக்கவில்லை.

மாலிக்கு அவமானம், ஆத்திரம் அங்கு சத்தம் போட்டு ஆரவாரம் செய்தால் நிலைமை மோசமாகி விடும் அமைச்சரின் பாதுகாப்புக்கு வேறு பொலிஸ்காரர்கள் நிற்கிறார்கள்.

மாலியோடு அவரது நண்பர் வ.ஐ.ச.ஜெயபாலனும் சென்றிருந்தார். இருவரும் அங்கிருந்து வெளியேறி விட்டனர். நள்ளிரவு 12 மணி தாண்டியிருக்கும். மாலியும் ஜெயபாலனும் எனது வீட்டுக்கு வந்து என்னை எழுப்பி நடந்த சம்பவங்களைச் சொன்னார்கள்.

ஈழநாடு பத்திரிகையாளர் ஒருவரை ஒரு பொது நிகழ்ச்சிக்குக் சென்றிருந்த போது ஒருவர் செருப்பால் அடித்தார் என்பது மட்டும்தான் என்நெஞ்சில் குத்தியது,

இந்த நேரத்தில் எதுவும் செய்ய முடியாது. வீட்டில் படுத்திருந்து விட்டு காலையில் வீட்டுக்குப் போய் வாருங்கள். நாளை என்ன செய்யலாமென்று யோசிப்போம் என்று அவர்களுக்கு ஆறுதல் சொன்னேன்.

மறுநாள் சுன்னாகம் பொலிசில் புகார் செய்யம்படி சொல்லிவிட்டு 'ஈழநாடு' முதல் பக்கத்தில் 'நடன வாத்தியார் செருப்பால் அடித்தார்' என்று செய்தியைப் பிரசுரித்தேன்.

'கலைச்செல்வன்', 'கலைச்சுடர்' என்றெல்லம் அவரது பேட்டியும் மற்றும் அவரைப் பற்றிய செய்திகளும் வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் 'நடனவாத்தியார்' என்று கலாபவனம் சுப்பையா பற்றிய செய்தி வெளிவந்ததும் பலர் ஆச்சரியமடைந்தனர்,

இது மட்டுமல்ல, சுன்னாகம் பொலிஸ் கூட அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கியது. நான் விடவில்லை. உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினேன்.

சுன்னாகம் பொலிஸ் நடவடிக்கை எடுத்து, மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்து விட்டது.

முதல் தவணைக்கு மாலி என்ற மகாலிங்கசிவத்தையும் கூட்டிக் கொண்டு நானே போயிருந்தேன்.

புறக்டர் (பொட்டர்) நடராசா என்னைக் கண்டதும், நீ ஏன் இந்த வேலை செய்கிறாய். அந்தாள் (சுப்பய்யா) நல்ல மனுசன், ஏதோ ஆத்திரத்தில் செய்திருப்பார். வழக்கைத் தொடர்ந்து நடத்தாமல் விட்டால் நல்லது என்ற யோசனை சொன்னார்.

இதேபோல எனது குருநாதரும் கூறியிருந்தார். எனக்குப் படிப்பித்த கார்த்திகேசு மாஸ்ரரும் வீடு தேடிவந்து வழக்கை விட்டு விடும்படி சொன்னார். மற்றும் சில கலைஞர்களும் கூட இதையே தான் கூறினார்கள். 'ஈழநாடு' பத்திரிகை நிருபர் என்று தெரிந்து செருப்பால் அடித்தவரை எப்படி விடமுடியும். இதையே நாளைக்கு மற்றவர்களும் செய்ய முற்பட மாட்டார்களா? என்று இவர்களுக்கெல்லாம் பதில் சொல்லி வந்தேன்.

கலைஞர் வேல்ஆனந்தன் மாலியின் தாய்மாமன் என்பது பின்னர் தான் எனக்குத் தெரிய வந்தது. இதுதான் மாலியின் நாட்டிய விமரிசனங்கள் மீது சுப்பையா மாஸ்ரருக்கு ஆத்திரம் வந்ததற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

மாலிக்காக நான் வழக்கு நடத்திக் கொண்டிருக்க வேல் ஆனந்தன் மாலியைக் கூட்டிக் கொண்டுபோய் இரகசியமாக சுப்பையா மாஸ்ரருடன் சமரசம் செய்து கொண்டார்.

நீதிமன்றத்துக்கு அடுத்த தவணைக்குப் போவதற்கு மாலி வரவில்லை. நான் அவருக்காக அலுவலத்தில் காத்திருந்தேன்.

இது நான் படித்த ஒரு பாடம்!

# இனவாதக் கட்சிகளின் செயல்களுக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம்!

**– அருண சொய்சா – ருகுணு மக்கள் கட்சி**

***ருகுணு மக்கள் கட்சி, சிஹல உறுமய, பூமிபுத்திரக்கட்சி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளுடன் இணைந்து வடக்கு கிழக்கு உட்பட பல பிரதேசங்களில் போட்டியிடுகின்றது. இது ஒரு பிரதேச கட்சி என்ற காரணத்தினால் தொடர்பூடங்கள் இக்கட்சி குறித்து பெரிதாக அக்கறை காட்டாத போக்கைக் காணக்கூடியதாக உள்ளது. ருகுணு மக்கள் கட்சி வடக்கு கிழக்கில் போட்டியிடுவது குறித்தும், அதன் செயற்பாடுகள் குறித்தும் இக்கட்சியின் செயலாளர் அருண சொய்சாவுடனான நேர்காணல் இது.***

**றுகுணு மக்கள் கட்சி ஒரு பிரதேசக் கட்சி இக்கட்சி எப்பிரதேசங்களில் போட்டியிடுகின்றது எனக் கூற முடியுமா?**

பொதுவாக எமது கட்சி வடக்கு கிழக்கு பிரதேசங்களில் 5 மாவட்டங்களிலும், நுவரெலியா, கண்டி, புத்தளம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் போட்டியிடுகின்றது.

**வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உங்களது கட்சி போட்டியிடுவதற்கான காரணம் யாது?**

எமது கட்சி ஒரு பிரதேசக் கட்சியென நான் முன்னரேயே கூறியிருந்தேன். குறிப்பாக றுகுணு பிரதேசமாக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலேயே எமது செயற்பாடுகள் அமைந்திருந்தன. ஓகஸ்ட் 23இல் எமது கட்சி உத்தியோகபூர்வ கட்சியாக தேர்தல் ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குறிப்பாகக் கூறுவதாயின் நாம் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போட்டியிடக் காரணம் அம்மக்களுக்கு ஒரு செய்தியை வழங்கவே. குறிப்பாக பிரதேசக்கட்சி ஒன்றினால் முழுநாட்டிலும் போட்டியிடக் கூடிய சந்தர்ப்பம் இல்லை.

மேலும் எமது கட்சி ஒரு இனவாதக் கட்சியோ, மதவாதக் கட்சியோ இல்லை. அத்துடன் மூவின மக்களும் ஒற்றுமையாக, சமாதானமாக வாழும் சூழலை ஏற்படுத்துதலே எமது பிரதான நோக்கமாகும். இதுவரை காலமும் தமிழர்களுக்கு எதிராக இந்நாட்டு இனவாதக் கட்சிகள் செயலாற்றிய முறை குறித்து நாம் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். மேலும் தமிழ் மக்களிடம் நாம் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறோம். அதாவது உங்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமை இருந்தாலும் அப்படிச் செய்ய வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கிறோம். இவை தாம் எமது பிரதான கோரிக்கைகளும், நோக்கங்களுமாகும்.

**வடக்கு கிழக்கு பிரதேசத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து கூறுவதானால்..?**

எமது கட்சி சார்பாக தமிழ், முஸ்லிம் சிங்கள வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பாக நான் செயற்படுகிறேன். மேலும் இரண்டு சிங்கள வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மற்ற வேட்பாளர்கள் அனைவரும் தமிழர்கள், முஸ்லிம்கள் என நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

**பூமிபுத்திர கட்சி, சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளும் வடக்கில் கிழக்கில் போட்டியிடுகின்றன. இக்கட்சிகளின் செயற்பாடுகள் குறித்து ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?**

யாழ்ப்பாணத்திற்கு பூமிபுத்திரக் கட்சி, சிஹல உறுமய, ஜே.வி.பி. கட்சி நபர்களுடன் நாம் விமானத்தில் பயணம் செய்தோம். அப்பொழுது அவர்களுடன் பல விடயங்களை பரிமாறிக் கொள்ள முடிந்தது. இக்கட்சிகள் அனைத்தும் சிங்கள மக்களின் தேவைக்கும் விருப்பு வெறுப்புக்கும் ஏற்ப தமிழ் மக்கள் வாழ வேண்டும் என்ற வரையறையைக் கொண்டுள்ளன. தமிழர்கள் கௌரவமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு துளியும் இல்லை. அதேநேரம் ஜே.வி.பி. போன்ற சோசலிசக் கட்சியும் இக்கூட்டத்தில் இணைந்து கொண்டது கவலைக்குரியதாகும். எவ்வாறாயினும் சிஹல உறுமய போன்ற கட்சிகளை மக்கள் நிராகரித்து விடுவார்கள் என்பது திண்ணம். தமிழ் மக்கள் இது குறித்து கவலையடையக் கூடாது என்பது எமது கருத்தாகும்

**றுகுணு மக்கள் கட்சி பொதுத் தேர்தலில் குறிப்பிடத்தக்க ஆசனங்களை பெற்றுக்—கொண்டால் அதன் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கும்?**

இனியும் மக்களை ஏமாற்ற இயலும் என நான் நினைக்கவில்லை. பிரதேசங்கள் மத்தியில் அதிகாரப் பரவலாக்கலை தெளிவாக வரையறுக்கும் யாப்பு ஒன்றை சமர்பிப்பதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடுவோம்.

மூவின மக்களுக்கும், சுதந்திரத்தையும், கௌரவத்தையும் வழங்கி அவர்கள் சுமுகமாகவும் ஒற்றுமையாகவும் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவது எமது தலையாய கடமையாக இருக்கும்.

**பொதுவாக இனப்பிரச்சினை குறித்தும், போர் குறித்தும் உங்களது அபிப்பிராயம் என்ன?**

யுத்தம் ஒரு சாபக்கேடு என்றே நான் கருதுகிறேன். மேலும் யுத்தம் என்பது ஒரு உள்ளகப் பிரச்சினை. 1977 ஐ.தே.க காலத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை தாம் இனப்பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம். வடக்கிலும், கிழக்கிலும் மக்கள் இளைஞர்கள், கிளர்ச்சி செய்யவும், சிங்களவர்களுக்கு எதிராக போக்கு வளரவும் இந்நிலைமையே காரணமாகியது.

தெளிவாகக் கூறுவதாயின், பொருளாதார ரீதியான சமத்துவம் ஏற்படல் வேண்டும். கொழும்பில் மையமாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பல பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படல் வேண்டும். மேலும் நாட்டின் எதிர்காலம் கருதி புதிய அரசய யந்திரம் ஒன்றை ஏற்படுத்தல், அதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்தல் முக்கியமானதாகும்.

மாறாக, 5 ஆண்டு திட்டத்தினால் ஜே.வி.பி. கூறுவது போன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வை கொண்டு வர முடியாது.

இங்கு இன்னொரு விடயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வடக்கு கிழக்கு பிரதேசத்தை இணைப்பது குறித்து பேசப்படுகின்றது. நாம் இவ்விடயத்தில் ஒரு நிபந்தனையை முன்வைக்க விரும்புகிறோம். தமிழர்களின் தாயகப் பிரதேசம் வடக்கு - கிழக்கு பிரதேசம் மட்டுமல்ல. முழு இலங்கைத் தேசத்தையும் அவர்கள் தமது தாயகமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான நிபந்தனையின் பேரிலேயே நாம் வடக்கு - கிழக்கு பிரதேச இணைப்பை ஏற்கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



# "அரசுக்கு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு!"

**- இரா.யோகராஜன் பா.உ.**



இ.தொ.கா.வின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் இரா.ஜோகராஜன்

**இத்தேர்தல் சூழலில் மக்கள் மத்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதான கோஷம் என்ன?**

இந்திய வம்சாவழி மக்கள், வடகிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவத்தை நிச்சயப்படுத்துவதே இ.தொ.கா.வினுடைய முக்கிய கோஷமாகவும் நோக்கமாகவும் இருக்கின்றது.

**தேர்தல் காலங்களில் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு பின்னர் தேர்தலில் வெற்றி பெற்றதும் பேரம் பேசலின் அடிப்படையில் வாக்குகள் விற்கப்படுகின்றன. இதே விடயம் தான் இனிவரும் காலத்திலும் நடக்கப்போகின்றது. இதுபற்றி?**

இ.தொ.கா. என்றைக்குமே மக்கள் மத்தியில் இதைச் செய்து தருகிறோம், அதைச் செய்து தருகிறோம் என்று தேர்தல் காலத்தில் சொல்லியது கிடையாது. தூர நோக்கோடு பல திட்டங்களை சமூக ரீதியாக படிப்படியாகச் செய்து வருகின்றது. அதாவது பிரஜாவுரிமைப் பிரச்சினையை பலவருடமாகப் போராட்டம் நடத்தித் தீர்த்துள்ளோம். வீட்டுரிமை பெறுவது, நாங்கள் வைத்துள்ள ஒரு கோரிக்கை. இதை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும், இன்னும் பல தடங்கல்களின் மத்தியில் அதை அமுல்படுத்த எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கின்றோம். பாடசாலைகள் அபிவிருத்தி, ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றது. இது தூர நோக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இது பல வருடமாக போராடி கடந்த ஆறு வருடத்தில் 4200 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இன்னும் 2000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் எல்லா பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை தீர்ந்து விடும். தொழிற்பயிற்சிகளை ஆரம்பித்துள்ளோம். பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதில் மாவட்ட மட்டத்திலான கோட்டா முறையே நடைமுறையிலுள்ளது. அது நம் சமூகத்திற்கு பிரயோசனமில்லை. அவிசாவளையில் ஜி.சி.ஈ.உயர்தரம் படிக்கக்கூடிய மாணவனும் கொழும்பு றோயல் கல்லூரியில் படிக்கக் கூடிய மாணவனும் ஒரே தரத்தில் சமப்படுத்தப்படுகிறார்கள். அதாவது பாடசாலைகள் தான் தரப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான விடயங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்தோடு தான் நாங்கள் செயற்பட வேண்டும். இருக்கின்ற ஐந்து சதவீதமான பாராளுமன்ற சக்தியை வைத்து ஏதேனும் செய்ய வேண்டுமென்றால் இருக்கின்ற அரசாங்கத்தோடு சேர்ந்து தான் செயற்பட வேண்டும்.

**அரசாங்கத்தோடு கூட்டுச் சேர்ந்து நீங்கள் சொல்கிற சில சலுகைகளைத் தவிர எதையாவது பெற்றுள்ளீர்களா?**

நிச்சயமாக. 1988ல் அரசாங்கத்துடன் இருந்ததால் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் பலருக்கு பிரஜாவுரிமை வழங்கக் கூடியதாக இருந்தது. இந்தியாவுக்குச் செல்வதாக எழுதிக் கொடுத்தவர்களுக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை கடந்த அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. அதை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது ஐ.தே.க.வின் துரோகச் செயலினாலேயே. பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினையை தீர்க்கக் கூடியதாக இருந்ததுவும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தமையாலேயாகும். நிச்சயமாக சமூக ரீதியாக பல நன்மைகள் அடைந்திருப்பதும் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தமையாலேயாகும். TULF எதிர்க்கட்சியாகவே இருந்துள்ளது. வடகிழக்கு மக்களுக்காக எதையுமே அடைய இவர்களால் முடியவில்லை. வடகிழக்கு மக்கள் இன்றும் அகதிகளாகவும் யுத்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கும் அவர்களுடைய அணுகுமுறை பிழை என்பதே காரணமாகும். இ.தொ.கா.வின் அணுகுமுறை, இருக்கும் அரசாங்கத்தோடு சேர்ந்து ஒத்துழைத்து நமது மக்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்வது தான் சரியான கொள்கை என்று உறுதியாக நான் கூறுகின்றேன்.

**ஆசிரிய நியமனங்களை வழங்குவது. கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது இவற்றையா உரிமைகள் என்று கருதுகின்றீர்கள்?**

இவை அடிப்படையானவை. நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு கல்வி அவசியமானது.

**அரசாங்கத்துடன் ஒத்துழைத்து பெற்ற அரசியல் ரீதியான உரிமைகள் என்ன?**

அரசியல் ரீதியாக எங்களுக்கு என்ன குறையிருக்கிறது. இன்றைக்கு தோட்ட உள்ளக கட்டமைப்பு என்றொரு அமைச்சு கிடைத்திருக்கிறது. நிச்சயமாக அது அரசியல் வெற்றி. நாட்டின் எந்த பகுதியில் மக்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு நேரடியாக அபிவிருத்தி திட்டங்களை கொடுக்கக்கூடிய நிலையை அரசியல் வெற்றியாகவே கருதுகின்றேன். அரசியலமைப்புத் திட்டத்தில் நமக்கான பல நன்மைகளை நாம் சேர்த்திருந்தோம், அவை எல்லாமே அரசியல் ரீதியான வெற்றிகள் தான். நாம் தனிநாடு கேட்கவில்லை. தனி அலகு கேட்கவில்லை. அது அவசியமுமில்லை. நம்மக்கள் காலியிலும் மாத்தளையிலும் இருக்கிறார்கள். தனி அலகு கேட்க முடியாது. நுவரெலியாவுக்கு மட்டும் ஒரு நன்மையைச் செய்து எழுபது சதவீதமாக இருக்கின்ற ஏனைய மாவட்ட மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காத ஒரு திட்டத்தை முன்வைக்க நாங்கள் விரும்பவில்லை. அதைவிட மத்தியில் எங்கள் மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் நேரடியாக செயல்படக்கூடிய ஒரு அமைச்சை நாங்கள் கேட்டுப் பெற்றுள்ளோம். அதுதான் சரியான எண்ணம். அதுவொரு பெரிய அரசியல் வெற்றி.

> அரசியல் ரீதியாக எங்களுக்கு என்ன குறையிருக்கிறது. இன்றைக்கு தோட்ட உள்ளக கட்டமைப்பு என்றொரு அமைச்சு கிடைத்திருக்கிறது. நிச்சயமாக அது அரசியல் வெற்றி.

**கொழும்பில் இடம்பெறும் கைதுகளின் போது அவர்களை விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்ற அதேநேரம் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கின்றீர்கள். இது பெரும் அரசியல் பிழைப்பு என்று கூறப்படுகின்றதே. இந்த இரட்டைத் தன்மைபற்றி?**

இன்று அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருந்து நம்முடைய அபிவிருத்தி பற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அப்படி இருக்கும் போது அதற்கு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். அதேநேரம் அதை எதிர்த்து வாக்களிக்கலாம். அப்படி செய்தாலும் கூட ஏனைய தமிழ் கட்சிகள் வாக்களித்து வெற்றி பெறச் செய்யக்கூடும். அரசாங்கத்தோடு சேர்ந்து வாக்களித்தாலும் இன்று அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய குறைபாடுகளை தீர்ப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு எனக்குக் கிடைக்கின்றது. தொல்லை தவிர்ப்புக் குழுவில் என்னை நியமித்துள்ளார்கள்.

**இரத்தினபுரி வேவல்வத்தை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்—கொண்ட நடவடிக்கைகள் என்ன?**


உடனடி பாதுகாப்பு வழங்கப்பட்டது. வீடுகள் அமைப்பதற்காக பதின்னான்கு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

**வட்டியுடன் கூடிய கடன் திட்டத்தின் கீழேயே வீடுகள் அமைப்பதற்கு உதவியளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றதே.**

எந்தவித கடன் அடிப்படையிலும் அவ்வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை.

# 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்'

**பி.பி.தேவராஜ்**



இ.தொ.கா.வின் இருந்து பிரிந்து சென்ற மாற்றுக்குழு உறுப்பினர் பி.பி.தேவராஜா

**காங்கிரஸில் பல்வேறு முரண்பாடுகள் ஆரம்ப காலம் தொட்டு இருந்து வந்துள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரிந்து செல்லாத தாங்கள் தற்போது இவ்வாறான மாற்றுக் குழுவாக பிரிந்து செல்லக் காரணம் என்ன?**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள போக்கு கடந்த ஆறு ஏழு வருடங்களாகத் தான் ஏற்பட்டுள்ளது. தொண்டமான் நீண்ட காலமாக இ.தொ.கா தலைவராக இருந்திருக்கிறார். அவருடைய வேறு சில போக்குகளினால் காங்கிரஸில் சில சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன.

ஆனால் அந்தக் காலகட்டத்தில் இவ்வாறான முரண்பாடுகள் இருக்கவில்லை என்பதல்ல. அந்த நேரத்திலேயே இவ்வாறான கேள்விகள் எழுப்பப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக நிர்வாக முறைமைகள் பற்றி கேள்விகள் எழுப்பப்பட்டு வந்துள்ளன.

**இவ்வாறான கேள்வி முரண்பாடுகள் ஆரம்பத்திலிருந்தே இருந்த போதும் தற்போது மாற்றுக் குழுவாக பிரிந்து செல்லக் காரணம் என்ன?**

நாங்கள் பிரிந்து போனதாக நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. நாங்கள் இன்னமும் பிரிந்து போகவில்லை.

**கொழும்பில் இடம்பெறும் கைதுகளின் போது அவர்களை விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்ற அதேநேரம் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கின்றீர்கள். இது பெரும் அரசியல் பிழைப்பு என்று கூறப்படுகின்றதே. இந்த இரட்டைத் தன்மைபற்றி?**

> 1983ல் கலவரம் நடந்த போது நானும், தொண்டமானும் செல்லச்சாமியும் ஜே.ஆரைச் சந்தித்து உடனடியாக அவசரகால சட்டத்தை பிறப்பியுங்கள் என்று விடுத்த வேண்டுகோளுக்கிணங்கத் தான் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இவ்விடயத்தை இரண்டு மூன்று விதமாக அணுகுகிறார்கள். இலங்கையின் அரசியலை ஒரு நேர்கோடாக பார்த்து செயற்படுவதென்றால், அனுபவத்தில் அது முடியாத கர்ரியம். இரண்டு இனவாத கட்சிகளுடனும் ஏன் கூட்டுறவுகள் அமைத்து செயற்படுகின்றோம். ஐ.தே.க. கட்சியிலுள்ள பலர் இனவாத போக்கோடு செயற்படுகின்றார்கள். இனவாதத்தை எதிாக்கக்கூடிய நிலையிலுள்ள நாங்கள் ஏன் ஐ.தே.கட்சி பட்டியலிலே போட்டியிடுகின்றோம்.

வடகிழக்கு பகுதியிலே தான் தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்குமிடையே ஒத்த தன்மை இருக்க முடியாது. இங்கே வாழும் தமிழ் மக்களுடைய சூழ்நிலைக்கு ஏற்பத்தான் அவர்களுடைய போக்குகளை அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். ஆகையினால் பேரினவாத கட்சிகளுடன் சில உறவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒப்பந்தங்கள் செய்ய வேண்டியுள்ளது.

நான் ஐ.தே.கட்சியை ஆதரித்த போது பெரும்பாலும் விமர்சனம் செய்ததில்லை. எப்பொழுதும் சமமான அரசியலை வைத்துத் தான் பார்த்திருக்கிறேன். இரண்டுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

வடகிழக்கிலே ஏற்பட்டுள்ள யுத்தம் தீவிரமடைந்து அதன் பிரதிபலிப்புக்கள் இங்கேயும் ஏற்பட்டுள்ளன. வன்முறைகள், குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்கின்றன.

1983ல் கலவரம் நடந்த போது நானும், தொண்டமானும் செல்லச்சாமியும் ஜேயாரைச் சந்தித்து உடனடியாக அவசரகால சட்டத்தை பிறப்பியுங்கள் என்று நாங்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கத் தான் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அவசரகாலச்சட்டத்திற்கு எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் இதனை நிறுத்திவிட முடியாது. சில சமயங்களில் விபரீதமாகக் கூடப் போகலாம்.

**நேர்காணல்: தர்ஷி**

# தேர்தல் வன்முறைகள்

# ஜனநாயகத்தின் பாரியதொரு வீழ்ச்சி



நிமல்கா பேர்ணாண்டோ

**நிமல்கா பேர்ணாண்டோ**
**சட்டத்தரணி**
**புதிய இடதுசாரி முன்னனி**
**கொழும்பு மாவட்ட வேட்பாளர்**

நாம் 20 வருடங்களாகப் பெண்கள் பிரச்சினை குறித்து செயலாற்றி வருகிறோம். ஆனால் பிரதான கட்சிகளான பொ.ஐ.முவும், ஐ.தே.கவும் பெண்களுக்கான எதையும் சாதித்து விடவில்லை. இதற்கு ஒரு காரணம் அரசியல் வன்முறைகளாகும். இந்த வன்முறைச் செயற்பாடுகளுக்கு முன் நாம் வாய் மூடி மௌனிகளாக இருக்க முடியாது. நாம் வன்முறைகளுக்கு எதிராக ஒன்று திரள வேண்டும். நாம் எதிர்ப்பு காட்டக் காட்ட வன்முறைகளுக்கான வாய்ப்பு குறைந்து செல்லும் எனலாம்.

இந்தவகையில் நாம் பெண் வேட்பாளர்கள் என்ற வகையில் கட்சிகள் அடிப்படையில் வன்முறைகளை எதிர்க்க துணிந்து செயலாற்ற வேண்டும்.

**திருத்து ஆட்டிகல**
**(கொழும்பு மாவட்ட அமைப்பாளர் ஜே.வி.பி.)**

ஒரு கட்சி என்ற வகையில் ஜே.வி.பி. இன்று பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது அந்த வகையில் கட்சியில் பொறுப்பு வகிக்கும் ஒரு பெண்ணாக பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறேன். நாட்டை கட்டியெழுப்பும் முகமாக ஜே.வி.பியிடம் 5 ஆண்டு திட்டம் உண்டு. புதிய அரசியல், கலாசாரத்தை கட்டியெழுப்பும் பார்வை உண்டு.

மேலும் இம்முறை கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களில் திருப்தியடையக்கூடியளவு பெண் வேட்பாளர்கள் இல்லையென்றே கூறவேண்டும். அந்த வகையில் ஜே.வி.பி. சார்பாக 23 பெண்கள் போட்டியிடுகின்றனர். ஒப்பீட்டளவில் மற்ற பிரதான கட்சிகளைவிட இவ் எண்ணிக்கையினர் அதிகமெனலாம். 52 ஆண்டுகள் நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த ஐ.தே.கவிலும், பொ.ஐ.முவிலும் கணவனை இழந்த பெண்களும், பரம்பரை வழிவந்த குடும்ப பாரம்பரியத்தின் அடிப்படையிலுமே தான் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். எனினும், ஜே.வி.பி. சார்பாக போட்டியிடும் பெண்கள் தனியே சுயவிருப்பத்தின் பேரில் கட்சியில் உழைக்கும் பெண்களாவார்.


பொதுவாகக் கூறுவதாயின் பெண்களை அரசியலுக்குள் உள்வாங்க சாதகமான சூழலை உருவாக்க வேண்டும். மேலும் சமூகத்தின் கருத்தியல்களான பெண்கள் தனியே தாயாகவும், மனைவியர்கவும், மட்டுமே பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயம் மாற்றப்படல் வேண்டும். சமூகத்தில் பெண்கள் தீர்மானம் எடுக்கும் துறைகளில் முன்னணி வகிக்க இயலும் என நிரூபித்து காட்டல் வேண்டும். மற்றும் அரசியல் தடைகள் என நான் 3 விடயங்களை அடையாளம் காண்கிறேன்.

1. சமூகத்தின் மிகப்பழைமைமான எண்ணப்பாடுகள் கருத்தியல்கள் மாற்றமடைதல் வேண்டும்.

2. உடலியல் ரீதியாக பெண்கள் அரசியல் அதிகாரத்திற்கு வர இயலாது என்ற மாயை தகர்த்தெறியப்பட வேண்டும்.

3. வன்முறைகள் சூழலை தகர்த்தெறிய வேண்டும்.

இந்த தடைகளை தகர்த்தெறிய கட்சிகளின் பங்களிப்பும் முக்கியமானதெனலாம்.



ஜயதேவ உயங்கொட

**ஜயதேவ உயங்கொட**
**(சமூக விஞ்ஞானிகள் சங்கம்)**

தேர்தல் கால வன்முறைகள் என்பது ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடாகும். ஜனநாயகத்தில் தேர்தல் மிக முக்கியமானதும், அவசியமானதும் ஒரு செயற்பாடு. இவ்வாறான ஒரு செயற்பாட்டில், கட்சிகளும், வேட்பாளர்களும் வாக்காளர்களும் சுதந்திரமாக செயற்படக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டிய அவசியமாகும். தாராள ஜனநாயக சித்தாந்தத்தில் தேர்தல் ஒரு அங்கம். அத்துடன் இந்தத் தேர்தல் ஒரு வகையில் வாக்காளர்களும், ஆட்சியாளர்களும் சமூக ஒப்பந்தத்தை புதிதாக்கல் என்று கருதப்பட வேண்டும். இதன்படி அனைவரும் சுதந்திரமாக தேர்தலில் பங்குபற்றும் வாய்ப்பை இந்த வன்முறைகள் சார்ந்த சூழல் தடுக்கின்றது எனலாம். அத்துடன் வேட்பாளர்களை சமூகமாக தெரிவு செய்யும் சந்தர்ப்பமும் பாதிப்படைகின்றதெனலாம்.

இந்த வகையில் சிங்கள சமூகத்தில் தேர்தல் குறித்தான பெரிதான அக்கறையின்மையை காணக்கூடியதாக உள்ளது. பொதுவாக தேர்தலில் பங்குபற்றும் கட்சிகள் குறித்தும், தலைமைத்துவம் குறித்தும் அரசியல் நிறுவனம் குறித்துவம் சிங்கள வாக்காளர்கள் அதிருப்தியுற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இந்த அடிப்படையில் 2000மாம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் எவ்வாறான முடிவை எடுப்பார்கள் எனத் தெரியவில்லை எனலாம்.



பாக்கியசோதி சரவணமுத்து

**பாக்கியசோதி சரவணமுத்து**
**(தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம்)**

தேர்தல் வன்முறை குறித்து கூறுவதாயின் நாளுக்கு நாள் பல சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. மோசமான பல சம்பவங்களும் இதற்குள் அடங்கும். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் கடந்த காலத் தேர்தல்களைவிட இம்முறை ஆயுதபாவனை அதிகரித்துள்ளதாகும்.

தகவல்களின்படி வன்முறைச் 600 சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் 200 சம்பவங்கள் மோசமானவை. இச்சூழல் மிகவும் பயங்கரமானதாகும். பொதுத்தேர்தல் நடைபெறும் ஒக்டோபர் 10 திகதி வன்முறைகள் பயங்கரமாக அதிகரிக்கக்கூடும். இதன்படி நோக்கினால் நீதியானதும், சுதந்திரமானதும் தேர்தல் குறித்து சந்தேகமே நிலவுகின்றது.

வாக்காளர்களுக்கும் இது மிகப்பெரிய பிரச்சினை. மஞ்சள் பட்டி கட்டுதல், தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் மக்களின் நீதியான தேர்தல் குறித்து ஆர்வம் கொண்டவர்களும் ஈடுபடுகின்றனர். எனினும் பீதியும், அச்சமும் நிலவத்தான் செய்கின்றது. எவ்வாறாயினும் தேர்தல் ஒரு ஜனநாயக செயற்பாடு. இதன்படி வாக்காளர்கள் அனைவரும் வாக்களித்தலை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஜனநாயகம் பலவீனம் அடையும் மோசமான நிலை ஏற்படும்.

**கிங்ஸ்லி ரொட்றிகோ**
**(பெப்ரல் நிறுவனம்)**

தேர்தல் வன்முறைகள் என இவற்றை ஒருபோதும் குறிப்பிட முடியாது. ஏனெனில் பெயர்ப்பட்டியல் சமர்ப்பித்த பின் தான் வன்முறைகள் அதிகரிக்கின்றன. எனினும் இம்முறை அதற்கும் முன்னரும் கூட வன்முறைகள் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்படக் கூடியது.

வன்முறைகளை அதிகம் மேற்கொள்வது பிரதான கட்சிகள் இரண்டுமாகும். தற்போது நாம் அறிந்தவரையில் 07 மரணங்கள் நிகழ்ந்து விட்டன. நான் அறிந்தவரையில் குறைந்த வன்முறை எண்ணிக்கைகளைக் கொண்ட கட்சியாக ஜே.வி.பி உள்ளது. சிஹல உறுமய போன்ற சிறிய கட்சிகள் வன்முறைகளில் ஈடுபடுவது வெகுகுறைவு. அனுராதபுரத்தில் இரண்டு பா.உக்களுக்கிடையில் மோதல் ஒன்று ஏற்பட்டது. நான் நினைக்கிறேன், ஐ.தே.க வேட்பாளர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது என. குருணாகல், புத்தளம், நாவலப்பிட்டி, அனுராதபுரம், யட்டிநுவர, உடுநுவர ஆகிய இடங்களில் அதிகம் பொ.ஐ.மு தான் வன்முறைகளில் ஈடுபடுகின்றது.

எவ்வாறாயினும் தேர்தல் நடைபெறும் முறையின் அடிப்படையிலேயே வன்முறைகள் எவ்வளவு மோசமானவை என அனுமானிக்க இயலும்.

இம்முறை தேர்தலில் மக்கள் தமது அபிப்பிராயங்களை சிறப்பான முறையில் வெளிப்படுத்துவார்கள் எனத் தோன்றுகின்றது. இலங்கைப் பிரஜைகளில் 90 லட்சம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. 30 லட்சம் மக்கள் பலதரப்பட்ட காரணங்களின் அடிப்படையில் வாக்குகளைப் பிரயோகிக்காமல் இருக்கலாம். 25 லட்சம் கள்ளவாக்குகள் இடப்படும் எனலாம். எவ்வாறாயினும் இம்முறை 25,000 பேர் தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபடுவதால் கள்ளவாக்கு இடும் எண்ணிக்கை குறையும் என எதிர்பார்க்கலாம். மற்ற தேர்தல்களைப் போலவே சாதாரண மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி விட்டு வீட்டுக்குச் சென்று விடுவர். அரசியல்வாதிகள் வன்முறைகளில் ஈடுபடுவார்கள்.

**விக்டர் ஐவன்**
**(ராவய பத்திரிகை ஆசிரியர்)**

தேர்தல் வன்முறைகள் குறித்து ஜனாதிபதி தான் பொறுப்புச் சொல்ல வேண்டும். அவரது ஆதரவாளர்கள் தான் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் எனலாம். இதனை ஜனநாயகத்தின் பாரியதொரு வீழ்ச்சி என்று தான் கூற வேண்டும். இந்த லட்சணத்தில் தான் அவர்கள் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளப் போகிறார்களா?



விக்டர் ஐவன்

இம்முறை பொதுத் தேர்தலில் சமாதானம், ஜனநாயகம் என்பனவற்றை கருத்திற் கொண்டே மக்கள் வாக்களிப்பார்கள். அவ்வாறான சூழல் இல்லாவிடின் அவர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டப் பின்நிற்கப் போவதில்லை.

- ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பெண்ணியச் சிந்தனை

## தேவை ஒரு திறந்த விவாதம்



கடந்த செப்டெம்பர் முதல் வாரத்தில் சென்னையில் நடைபெற்ற தமிழ் இனி 2000 மாநாட்டில் படிக்கப்பட்ட பெண்ணியம் சார்ந்த கட்டுரைகள் தொடர்பாக எழுந்த சர்ச்சைகளும் விவாதங்களும் ஈழத்து தமிழ் சூழலில் பெண்ணிய சிந்தனை மீதான விவாதங்களுக்கான அவசியம் நிலவுவதை சுட்டிக் காட்டியுள்ளன.

சரிநிகரில் வெளியான 'கோணேஸ்வரிகள்' கவிதை தொடர்பான விவாதங்கள் இந்த சிந்தனை மீதான சில கேள்விகளை பதிவு செய்தன என்ற போதும் அவ்விவாதம் ஆழமாக வளர்க்கப்படாமலே நின்று போயிற்று.

அவ்வாறே பெண் போராளிகள் தொடர்பாக ராதிகா குமாரசாமி எழுதிய கட்டுரை ஒன்றின் மீதான விவாதங்களும் கூட ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அப்பால் வளர்ந்து செல்லவில்லை.

அண்மையில் 'பெண்' சஞ்சிகையில் வெளிவந்த தலைப்பிடப்படாத கல்யாணியின் கவிதை தொடர்பாகவும் சிறிய விவாதம் ஒன்று கருக்கட்டிய போதும் அதுவும் மேற்கொண்டு வளராமலே போய்விட்டது.

படைப்புக்கள் மீதான விமர்சனங்களாக இந்த விவாதங்கள் நடைபெற்ற போதும் அவை படைப்பின் மொழி, படைப்பாளியின் அரசியல் என்ற இரு விடயங்களில் மட்டும் கவனத்தைக் குவித்திருந்தனவே ஒளிய இவை இரண்டிற்கும் காரணமான தமிழ் சூழலின் சிந்தனை மட்டத்தை அவை கேள்விக்குள்ளாக்கவில்லை என்றே சொல்லவேண்டும்.

சென்னை மாநாட்டில் நடந்த கருத்துப் பரிமாற்றங்கள் அல்லது மோதல்கள் மிகவும் தெளிவாக இந்தக் கேள்விக்குள்ளாக்கலின் அவசியத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன என்றே தோன்றுகிறது. சரியாகச் சொல்வதானால், பெண்ணியம் தொடர்பான சிந்தனைகள் கடந்த இரண்டு தசாப்த கால வளர்ச்சியை அடைவதற்கு அடிப்படையாக இருந்த தத்துவார்த்த தளமானது இன்று ஈழத்து தமிழ் சூழலில் எழுகின்ற சவால்களை எதிர்கொள்ள முடியாத தேக்க நிலைக்கு உள்ளாக்கியுள்ளது எனலாம்.
இதுவே புதிய கேள்விகள், புதிய சோதனைகள் என்பன எழும் ஒவ்வொரு கணமும் அவற்றை எதிர்ப்புக்குரல்கள் என்ற விவாதத்தில் எதிர்கொள்ளுமாறு பெண்ணிய சிந்தனையாளர்களைத் தூண்டுகிறது என்ற எண்ணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

கோணேஸ்வரிகள் கவிதை முதல சென்னையில் மாநாடு வரையான விவாதத்துக்குள்ளான சகல விடயங்களிலும் அடிநாதமாக இருந்த விடயங்களாக நாம் இனங்காணக்கூடியதாக இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன எனலாம்.
ஒன்று 'பெண்ணிய சிந்தனையின் கலாசார பண்பாட்டு விழுமியமாக நாம் இனங்காண்பது எதனை? என்பது இரண்டாவது பெண்ணிய சிந்தனை என்பதே தன்னளவில் ஒரு அரசியல் சிந்தனையென்ற போதிலும், அது சமூகத்தின் மொத்த அரசியலில் வகிக்கும் பாத்திரம் என்ன? என்பது.

இவ்விரண்டு கேள்விகளுக்கும் - ஈழத்து தமிழ் சூழலின் அரசியல் பொருளாதார் கலாசார பண்பாட்டு நிலைமைகளின் கீழ் - பதில் காணக்கூடிய நிலையில் ஈழத்துப் பெண்ணிய சிந்தனைத் தளம் இருக்கிறதா? அல்லது அது இந்தச் சவால்களை தன்னுள் உள்ளடக்கி விரிந்து வளரும் விதத்தில் தன்னை தயாராக வைத்திருக்கிறதா? அல்லது தனது கோட்பாடுகளில் இறுகிப்போய் நின்று கொண்டு இவற்றை எதிர்க்கின்ற மனோ பாவத்திற்கு தள்ளப்பட்டுள்ளதா?

இவைதான் இன்றைய விவாதத்தக்கு அடிப்படையான மையமான கேள்விகள்.

பெண்கள் மீதான ஒடுக்கு முறையானது தமிழ்ச்சூழலில் நிலவும் இன ஒடுக்கலின் காரணமாக மிகத் தீவிரமாக வெளிப்படுவதை நாம் காணலாம். பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் என்று அவை தீவிரமாக வெளிப்படுகின்றன. அரச இயந்திரம், ஆணாதிக்க மனோபாவம், கலாசார பண்பாட்டு வெறியாட்சி என்பன பெண்கள் மீதான பாலியல் ஒடுக்கு முறைக்கான காரணிகளாக அமைகின்றன. இவற்றில் அரச இயந்திரம் தவிர்ந்த ஏனைய இரண்டும் இனங்காண முடியாத எதிரிகளை பெண்கள் முன் நிறுத்துகின்றன. இந்த மூன்றுக்கும் எதிரான பெண்களதும், சமூக ஜனநாயக சக்திகளதும் எதிர்ப்புகள் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பாடு காண வேண்டிய அவசியம் நிலவுகிறது.

ஆயினும், ஈழத்து தமிழ் சூழலில் நிலவும் பெண்ணிய சிந்தனையானது தேசிய அரசியலின் பாற்பட்டு தனது நிலையை எடுப்பதில் தயக்கம் காட்டிவருகிறது. இதன் தத்துவார்த்த வெளிப்பாடாகவே தேசிய இனப்பிரச்சினைக்கெதிரான நடைமுறையிலிருந்து ஒதுங்கி நிற்கும் 'இனப்பிரச்சினை முடிந்தாலும் பெண்களின் பிரச்சினை முடிவுறாது' என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகிறது. இது தர்க்க ரீதியில் உண்மையே எனினும், மறுபுறத்தில் தேசிய இனப்பிரச்சினை குறித்த தமிழ் முஸ்லிம் சமூகத்தின் போராட்டத்திலிருந்து பெண்களை ஒதுக்கி விடுகின்ற தத்துவார்த்தத் தவறினை மேற்கொள்கிறது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பான செயற்பாட்டில் முழுத் தேசத்தினதும் செயலூக்கமுள்ள பங்களிப்பை பலவீனமாக்கக் கூடிய இந்தச் சிந்தனைக்கு காரணம் பெண்கள் மீதான இனரீதியான ஒடுக்கு முறைகள் பற்றிய பிரக்ஞை இன்மை என்பதை விட அவை குறித்த செயற்பாடுகள் சட்டபூர்வ அரசியல் செயற்பாட்டிற்கு அப்பால் செல்பவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கிவிடும் என்ற அச்சம் மேலோங்கி நிற்பதே காரணம் எனலாம்.

சமூக அரசியல் பொருளாதார கலாசார பண்பாட்டுப் பிரச்சினைகள் எவையாயினும், அவை குறித்த செயற்பாடுகள் எல்லா-வேளைகளிலும் 'சட்டபூர்வ வாத' மட்டத்துள் நின்று தீர்க்கப்படக்கூடியவை அல்ல என்பதையும், அவற்றையும் மீறிய செயற்-பாட்டுக்கு அவசியம் நிலவுகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

வன்முறை அரசியலுக்கும் சட்டபூர்வ நடைமுறையை மீறிய அரசியல் செயற்பாட்டுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமை இவ்வாறான ஒரு அச்சம் ஏற்பட காரணம் எனலாம்.

இதேவேளை கலாசார பண்பாட்டு வடிவங்களிலான, இனங்காண முடியாத எதிரிகளால் நடாத்தப்படும் ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்கள், அதே கலாசார பண்பாட்டுத் தளங்களில் நின்று எழுப்பப்படக் கூடியவை அல்ல என்பதும் முக்கியமானதாகும். அவ்வாறு அதே தளத்தில் இருந்து எதிர்ப்பு எழுப்பப்படும் சந்தர்ப்பங்களில் அவை ஒன்றில் ஒரு வகை ஆணெதிர்ப்பு நிலையை பெண்கள் எடுப்பதற்கு இட்டுச் செல்லும் ஆபத்து ஏற்படுகின்றது அல்லது இவை அதே கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணுதல் என்ற காரணத்தினால் மௌனமாக்கப்பட்டு விடுகின்றன அல்லது அமுக்கப்பட்டு விடுகின்றன. இதையும் ஈழத்து தமிழ்ச் சூழலில் பெண்ணிலைச் சிந்தனை சரிவர இனங்காணவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஆக, இன்றைய பெண்ணிய சிந்தனை வரலாறு பற்றிய ஆய்வுகளிலும், தன்னை கோட்பாட்டு ரீதியாக பலமாக்கிக்-கொள்வதிலும், சமூகத்தில் பெண்ணின் பாத்திரம் குறித்த விவாதங்களிலும் ஈடுபடும் அதேவேளை சமூக அரசியல் கலாசார பண்பாட்டு மட்டத்திலும் அதன் தாக்கத்தை வெளிப்படுத்துவதற்கான கோட்பாட்டுப் புரிதலை நோக்கி நகர்வது மிகவும் அவசியமாகிறது.

பெண் போராளிகள் பற்றிய பிரச்சினை-யிலும், சரி, கோணேஸ்வரிகளின் நிலை குறித்த பிரச்சினையிலும் சரி, ஒரு தெளிவான கோட்பாட்டுத்தளத்திலான பெண்கள் அமைப்புகளது செயற்பாடு குறித்த பிரச்சினையிலும் சரி, புரிதலுக்கு வழிவகுக்கும் விதத்தில் பெண்ணியச் சிந்தனையாளர்கள் திறந்த கருத்தாடலில் இறங்க வேண்டும். அந்த விவாதத்தை தூண்டுவதற்கான ஒரு முன் குறிப்பாகவே இக்குறிப்பு எழுதப்படுகிறது.

- எஸ்.கே.வி.

# சிங்களமும், தமிழும் வேண்டாம்! ஆங்கிலம் தான் வேண்டும்!

இப்போது புதிதாக இறக்குமதி செய்யப்-படும் வாகனங்களின் இலக்கத் தகடுகளைக் கவனித்திருப்பீர்கள்.

ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட இந்த இலக்கத் தகடுகள் வாகனப் பதிவுத் திணைக்-களத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்-கின்றன. முதலில் மாகாணப் பெயரும், பின்னர் GA, GB என்று தொடரும் எழுத்துக்களும் அதன் பின் இலக்கமுமாக அவை எழுதப்-படுகின்றன.

பத்து வருடங்களுக்கு முன் ஜனாதிபதி பிரேமதாச சிங்களச் 'சிறி' எழுத்தை இல்லாமலாக்கிக் கோடு(சிங்களத்தில் 'இரி' என்பார்கள்.) ஒன்றைப் பாவிக்குமாறு அறிவித்திருந்தார்.

அதன் பின் 'சிறி' 'இரி'யாகியது. இனிச் 'சிறி லங்கா' என்பது 'இரி' லங்காவாகும் என்று கிண்டல் செய்து எழுதினார் பத்திரிகையாளர் லூஷியன் ராஜகருணநாயக்க அப்போது! ஆனால், அந்த 'இரி' இப்போது திரும்பவும் ஆங்கில எழுத்தை நோக்கிப் போய் விட்டது.

1958இல் நடந்த இனக் கலவரத்திற்கும், இதன் பின்னர் இற்றை வரையான இன ஒடுக்கல் நடைமுறைக்குமான முக்கியமான ஆரம்பப் புள்ளிகளில் ஒன்றாக இந்தச் சிங்களச் 'சிறி' விவகாரம் இருந்ததை யாரும் மறந்திருக்க வாய்ப்பில்லை.

அப்போது நடைமுறையில் இருந்து வந்த CE, CY, CN, CL போன்ற CEYLON என்ற பெயரில் வரும் எழுத்துக்களைப் பயன்-படுத்திய இலக்கத் தகடுகளுக்குப் பதிலாகச் சிங்களச் 'சிறி'யை அறிமுகப்படுத்தியது பண்டாரநாயக்க அரசு.

இதை எதிர்த்துச் 'சிங்களச் 'சிறி' எதிர்ப்புப் போராட்டத்தை' ஆரம்பித்தது தமிழரசுக் கட்சி. "நண்டெழுத்து வேண்டாம் நமக்கு" என்ற தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பு, ஆங்கிலத்திற்குப் பதில் சிங்களம் என்றிருக்க முடியாது. பதிலாக அது சிங்களமும், தமிழுமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்-படையில் அமைந்தது.

இந்த எதிர்ப்புக்கு அன்றைய அரசு கொடுத்த பதிலடியின் பரிசாக 1958ம் ஆண்டு இனக் கலவரம் வெடித்தது. இன்று மிக இலகுவாகத் திரும்பவும் ஆங்கில எழுத்துக்கள் கொண்டு வரப்பட்டு விட்டன.

சிங்களச் 'சிறி'யை எதிர்த்துத் தமிழ்ச் 'சிறி' போடப் போவதாகக் கூறிக் கொண்டு வட மொழியிலிருந்து எடுத்த 'ஸ்ரீ' என்ற எழுத்தைத் தமது வாகன இலக்கத் தகடுகளில் ஒட்டிக் கொண்டு திரிந்தனர் அன்றைய தமிழரசுக் கட்சியினர்.

ஆனால், பின்னர் அவர்கள் களைத்துப் போய் இந்த 'ஸ்ரீ ' எழுத்தைக் கைவிட்டு விட்டார்கள்!

ஆனால், இந்தச் 'சிறி' எதிர்ப்புடன் தீவிரமடைந்த இனப் பிரச்சினை இன்று பூதாகரமான வடிவை எடுத்து நிற்கின்றது.

பல்லாயிரம் உயிர்களைப் பலி கொண்ட-தாக அது தொடர்கிறது. ஆனால், இப்போது இந்த ஆங்கில எழுத்தை மாற்றும் செயலையிட்டு யாரும் எதுவும் பேசுவதாகத் தெரியவில்லை.

ஒரு 'சிறி'க்காக வெட்டிக் கொத்திக் கொண்ட இரு புறத்துத் தலைவர்களும் இன்று ஆச்சரியப்படத்தக்க வகையில் மௌனமாக, அவர்களது அக்கறைக்குரிய ஒன்றல்ல என்பது போல இருக்கின்றார்கள்.

'சிறி'யை, 'இரி'யாகப் பிரேமதாச மாற்றிய போது காய் கூய் என்று கத்தியவர்கள் கூட இன்று வாயை மூடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு இந்தச் சகிப்புத் தன்மை எப்படித் தான் வந்தது ?

இவர்களது இனவாதக் கண்ணோட்டம் மாறிவிட்டதா ? நாட்டில் சிங்கள இனவாத ஆதிக்கம் போய் விட்டதா? நிச்சயமாக இல்லை.

நிறுவனமயப்பட்டு விட்ட சிங்கள இனவாதம் தன்னை வெளிப்படுத்தவும், தன் உணர்வை வெளிப்படுத்தவும் இனியும் இது போன்ற சில்லறை விடயங்களில் தங்கியிருக்கத் தேவையில்லை என்பதே இதற்குக் காரணம் என்று முன்பொரு தடவை 'இரி' விவகாரத்தின் போது எழுதியதாக ஞாபகம்.

இப்போதும் அதே நிலைதான் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால், 'இரி'க்குப் பதில் திரும்பவும் சிங்களம் அல்லது தமிழுக்குப் போகாமல் ஆங்கிலத்தை நோக்கி அரசாங்கம் போகின்றது. மௌனமாக இருக்கின்றன சிங்கள, தமிழ்க் கட்சிகள். ஒரு வேளை சிங்களம் அல்லது தமிழை விட ஆங்கிலம் பரவாயில்லை என்று முடிவு கட்டிவிட்டார்களோ என்னவோ ?

- சஞ்சித்


நன்றி - நூலகத்திட்டம்



# எமது குரல்

சிங்கள சமூகத்தில் தமிழ் சமூகத்தைப் போலல்லாது ஒப்பீட்டளவில் அதிகளவான பெண் படைப்பாளிகள் உருவாகியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். எனினும், பெருமளவிலான தமிழ்ப் பெண் படைப்பாளிகளைப் போன்றே அவர்களும் குறுகிய வட்டத்தினுள் சுருங்கி விடுகின்றனர். அவர்களிடம் அரசியல் நடைமுறைகள் குறித்து வினவப் படுவதுமில்லை. அபிப்பிராயம் கோரப்படுவதுமில்லை. இதனால், பெரும்பாலும் ஆண்களே அரசியல் ரீதியான கட்டுரைகள், படைப்புகளை மேற்கொள்பவர்களாகவும், அரசியல் விமர்சனம் செய்பவர்களாகவும், அரசியலில் பங்குபற்றுப்வர்க–ளாகவும் இருந்து விடுகின்றனர். இதனால் பெண் படைப்பாளிகள் அரசியல் ரீதியான படைப்புகளை மேற்கொள்ளும் ஆர்வம் அற்றவர்களாகி விடுகின்றனர்.

'எமது குரல்' என்ற இந்தப் பகுதி சிங்களப் பெண் படைப்பாளிகள் தமது படைப்புலகம் சார்ந்தும், சாராமலும் யுத்தம் தொடர்பான அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கான களமாக தொடங்கப் படுகிறது. பெண் படைப்பாளிகளிடையே அரசியல் ரீதியான படைப்புக்கள் உருவாக இது பயனுள்ளதாக அமைவதுடன் போர்ச்சூழல் பற்றிய மனவெளிப் பாடுகளை பகிர்வதாகவும் அமையும் என நம்புகிறோம்.



இவ்விதழில் கவிந்தியா ஜயசேகரா அவர்களை அறிமுகம் செய்கிறோம். இவர் ஒரு இளம் படைப்பாளி 'அ:ங்கிலி கணின அ:ங்கிலி துடு' (விரல்களை எண்ணும் விரல் நுனிகள்) எனும் தனது முதல் நாவலைப் படைத்துள்ளார். இந்நாவல் சமகாலத்தில் வாழும் இளம் பெண் குறித்தும் அப்பெண் வாழும் சமூகம் குறித்தும் அப்பெண்ணுடன் பழகும் நபர்கள் மற்றும் நடத்தை, அனுபவங்கள் குறித்தும் பேசுகின்றது. நாவலின் பிரதான பாத்திரம் அருந்ததி. அருந்ததியைச் சுற்றி நா்வலில் சம்பவங்கள் படைக்கப்பட்டுள்ளன. கவிந்தியா–வின் கருத்தின்படி 'அருந்தி' தனது எண்ணத்தில் உயிர் வாழும் பெண்ணாகும்.

# புலிக்குட்டிகளும் சிங்கக் குட்டிகளும்

## கவிந்தா ஜயசேகரவுடனான ஒரு நேர்காணல்

**உங்களது நாவலில் படைக்—கப்பட்டுள்ள அருந்ததி இலட்சியப் பாத்திரமென குறிப்பிட்டிருந்தீர்கள் காரணம் என்ன?**

"அருந்ததி" நான் விரும்பும் ஒரு இலட்சியப் பெண். நான் நினைப்பதுண்டு இப்படி நான் இருந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும் என்று. சிலவேளை-களில் நாம் விரும்பும் வகையில் கனவு காண நேரிடும். அதேபோல் நாம் வெறுக்கும் வகையிலும் கனவு காண நேரிடும். இதன்படி நான் அருந்ததி எ்னும் பாத்திரப் படைப்பின் மூலம் ஒரு பெண்ணாக - இலட்சியப் பெண்ணாக வாழ விரும்பும் தன்மையை வெளிப்படுத்-தியுள்ளேன்.

**ஏன் இனப் பிரச்சினையை மையமாக வைத்து ஏதும் நாவல் படைக்—கவில்லை?**

இதைப்பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்னர் இந்நாட்டு இனப்பிரச்சினையை நான் உள்-வாங்கும் முறை குறித்துச் சில விடயங்களைக் கூற விரும்புகிறேன்!

முதலாவதாக என்னைச் சூழ இருப்பவர்களின் பெயர்கள் எனக்கு முக்கியத்துவம் மிக்கவையாக உள்ளனவே தவிர நபர்களின் இனம் முக்கியமானதல்ல.

எனது மிக நெருங்கிய தோழி ஒரு தமிழ்ப்பெண். எவராவது பாதிப்புக்குள்ளாகும் போது நானும் அப்பாதிப்புகளை உள்வாங்கிக்-கொள்ள விரும்புகிறேன்.

நான் தமிழ் மக்கள் பாதிக்கப்-படுகின்றனர் என்பதை 1983 கலவரத்தின் போது உணர்ந்து கொண்டேன். அப்பொழுது நான் ஆண்டு 3ல் கற்கும் 9 வயதுச் சிறுமி. 83 கலவரத்தின் போது நான் அனுபவித்த பல விடயங்கள், நேரில் கண்ட சம்பவங்கள் என்னைப் பாதிப்படையச் செய்தன. அதே-நேரம் எனது தோழி இவை பற்றி-யெல்லாம் தமிழில் விபரித்த போது அதை விளங்கிக்கொள்ள முடியாத இயலாமை என்னைப் பெரிதும் பாதித்தது. அவர்களை விளங்கிக்-கொள்ள ஒரு ஊடகம் அற்ற நிலை என்னை இன்னும் வருத்துகின்றது.

**இனப்பிரச்சினை அரசியல் போராட்டமாக வளர்ந்து தற்போது 20 வருடங்கள் கழிந்து விட்டன. இக்காலப்பகுதியுள் எமது நாட்டுப் படைப்பாளிகளின் இன நெருக்கடி குறித்து படைத்த படைப்புகள் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?**

"யுத்தம் மற்றும் இனப்-பிரச்சினை குறித்து எமது நாட்டில் படைக்கப்பட்டுள்ள திரைப்படங்கள் மற்றும் எழுத்தாக்கங்கள் குறித்து நான் அவதானத்தைச் செலுத்-தியுள்ளேன். எனினும், யுத்தம் ஒரு சாபம், யுத்தம் வேண்டாம் என்ற அடிப்படையில் எழுதப்பட்ட படைக்கப்பட்ட இலக்கியங்கள் போதுமானளவு இல்லை.

சரோஜா திரைப்படத்தை பார்த்த போது எனக்குள் பெரும் கவலை ஏற்பட்டது. பரந்த வகையில் அனுசரணைகளைப் பெற்றுக்-கொண்டு யுத்தத்திற்கு எதிரான பீடைப்பு என பிரச்சாரப்படுத்தி பார்வையாளர்களை திரை அரங்-குக்கு வரவழைத்து யுத்தத்தினை விசில் அடித்து வரவேற்கும் தன்மையை அங்கு காணக்கூடியதாக விருந்தது. என்னைப் பொறுத்த-வரையில் "சரோஜா" யுத்தத்தை வரவேற்கும் ஒரு விசிலடி மட்டுமே. நாம் இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில் இருந்து கொண்டு உணர-வேண்டிய விடயங்-களை இன்னும் உணராது இருப்பது கவலைக்குரியதாகும்.



**யுத்தத்தினால் முழுச் சமூகமும் பாதிப்படைகின்றது. அதேபோல் பெண்களும் அதிகளவிலான பாதிப்பை எதிர்நோக்குகின்றனர் இது பற்றிய உங்களது உணர்வு யாது?**

இதுவரை யுத்தத்தின் காரணமாக நான் நட்புக் கொள்ளும் இரண்டு தோழி களின் கணவர்களை இழந்து விட்டிருக்கிறேன். அவர்கள் தமது குழந்தைகளுடன் தனித்து-விடப் பட்டிருக்கிறார்கள். இன்-னொரு தோழியின் கணவர் தற்போது இராணுவத்தில் பணி-யாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் இன்னும் இறக்கவில்லை. எனினும், எனது தோழி ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதை வெறுக்கிறார். குழந்தையுடன் தான் தனித்து விடப்பட்டு விடுவேன் என்ற பீதி அவருள் வேரூன்றி விட்டது. போரினால் தனிமைப்படுத்தப்படும் சூழலை அவள் வெறுக்கிறாள். இது மிகவும் கவலைக்குரிய விடயம். வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் கிட்டத்தட்ட இறந்துபோன நிலைக்-குள்ளாகி விட்டனர்.

முன்பு கோட்டை ரயில்வே நிலையத்தில் வவுனியாவில் இருந்து வரும் புகைவண்டியில் ஓரிரண்டு அங்கவீனமுற்ற இளைஞர்களைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும், இன்று ஒரு நாளைக்கு மட்டும் 20, 30 நபர்களை காணக்-கூடியதாகவுள்ளது. இதில் விசேட-மாகக் கூற என்ன தான் இருக்-கின்றது. இவ்விளைஞர்கள் ஊன-முறுவது சாதாரண நிகழ்வாக மாறி விட்டது.

போரினால் கணவனை இழந்து விடும் பெண்களின் உணர்வுகளைப் பற்றியோ, அப்பெண்களைப் பற்றியோ எவரும் அக்கறை கொள்வதில்லை. அவர்கள் மீண்டும் சட்டரீதியாக திருமணம் செய்து-கொண்டால் கிடைக்கும் வரப்-பிரசாதங்கள் அனைத்தும் மறுக்கப்-பட்டு விடுகின்றன. பிறரின் குழந்தைகளைப் பராமரிக்க இந்த சமூகத்தில் ஆண்கள் தயாரில்லை. மக்கள் கலாசாரம் பழக்க வழக்கங்கள் எனப் போலியான விடயங்களையே பாதுகாக்கின்றனர். எவ்வாறாயினும், வடக்கு பிரதேசப் பெண்களைப் போலவே தெற்கில் வாழும் பெண்களும் போரின் பாதிப்பை அனுபவித்து வருகின்றனர்.

**இளம் படைப்பாளி என்ற வகையில் போர் குறித்தும். போர் காரணமாக இலங்கைப் பெண்கள் உள்வாங்கும் பாதிப்புகள் குறித்தும் எதிர்காலத்தில் ஏதேனும் படைப்பு செய்ய எண்ணமுள்ளதா?**

இவ்வாறான எதிர்வுகூறலை மேற்கொள்வது கடினம். எனினும் எனது முதல் நாவலில் ஒரு பாத்தி-ரத்தை இணைத்துள்ளேன். 26 வயதுப் பெண். அவருக்கு 11 பிள்ளைகள் இருக்கின்றனர். அவள் கர்ப்பிணியாகவும் இருக்கிறார். அப்பெண் எல்லைக்கிராமத்தில் வாழ்ந்து வரும் பெண். ஆனால், அப்பெண்ணைப் பார்க்கும் போது 56 வயது போன்ற தோற்றம். ஆனால், இப்பெண் தனது பிள்ளைகளைக் காட்டி "இவை ஒன்றுகூட எனது பிள்ளைகள் அல்ல" என்கிறார். அதாவது அப்பிள்ளைகள் அப்பெண்ணின் தேவை/ விருப்பு கருதிப் பிறந்தவையல்ல. "பங்கர்-களில் இருப்பவர்களும், காட்டில் இருந்து வருபவர்களும் இரவில் என்னைப் பயன்படுத்திக் கொள்-கின்றனர். இவர்களிடையே புலிக்-குட்டிகளும் இருக்கின்றனர். சிங்கக்குட்டிகளும் இருக்கிறார்கள்" என அப்பெண் கூறுகிறார். இது தான் இன்றைய போரினால் பெண்கள் அடையும் பாதிப்பு.

எதிர்வரும் காலங்களில் இவ் அனுபவங்கள் எவ்வாறு படைப்புக்-குட்படுத்தப்படும் எனக் கூறமுடியா-விட்டாலும், நான் உள்வாங்கிய போர் சம்பந்தமான வேதனைகள் பல உள. அதேபோல் மனித உணர்வுகள் குறித்தும் நான் விழிப்பாக இருக்கின்றேன்.

–ரத்னா

# எங்களுக்கும் உயிரின் மேல் ஆசைதான்!

கடந்த செப்.23 அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் சுயேட்சை வேட்பாளருமான வேல்முருகு தங்கராசா யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை



வேல்முருகு தங்கராசா

நடத்தினார். அப்போது வேல்முருகு தங்கராசா பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்த கருத்துக்கள்:

புலிகளுடன் மட்டும் தான் பேச வேண்டும், நாங்கள் பாராளு-மன்றத்திற்குத் தெரிவு செய்யப்-பட்டால் புலிகளின் கோரிக்கை-களைப் பாராளுமன்றத்தில் எழுப்பு-வோம் என்றார். அப்போது பத்திரிகையாளர்கள் சிலர் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா புலிகளுக்கு எதிரான போர் தீவிரப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறாரே என்றனர்.

உடனே வேல்முருகு தங்ராசா அவரது கருத்து தென்னிலங்கைக் கருத்து, எமது கருத்து வட இலங்கைக் கருத்து என்றார்.

1983 ஜூலைக் கலவரத்தை உருவாக்கியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் தான் என ஐ.தே.கவினரையும் சாடினார் வேல்முருகு தங்கராசா. அப்போது பத்திரிகை-யாளர்கள் செம்மணிப் புதைகுழி-களை ஞாபகப்படுத்தினர். செம்மணிப் படுகொலைகள் எமது ஜனாதிபதி மீது அவதூறு ஏற்படுத்-துபவர்கள், ஐ.தே.கட்சிக்குச் சார்பான இராணுவச் சிப்பாய்கள் மேற்கொண்ட ஒரு நடவடிக்கை என்றாரே பார்க்கலாம். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் வேல்முருகு தங்கராசாவின் தா்கம்?

பத்திரிகையாளர் மாநாடு முடிந்து பத்திரிகையாளர்கள் வெளியேறிக் கொண்டிருந்த சமயம் பொ.ஐ.மு. ஆதரவு வேட்பாளர் ஒருவர் பின்னால் வந்து பத்திரிகை-யாளர் ஒருவரிடம் உங்களுக்குத் தானே தெரியும், ஏதாவது மெசேஜ் வந்தால் இரகசியமாக எங்களுக்கும் சொல்லி விடுங்கள். எங்களுக்கும் உயிரின் மீது ஆசையிருக்கிறது என்றார்.

# ரெலோவுக்கு இல்லை!

அம்மையார் தனக்குச் சார்பான தமிழ்க்கட்சிகளுக்கு தேர்தல் பிரசாரத்திற்கென ஐம்பது இலட்சம் ரூபா வழங்கியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. ரெலோ இயக்கத்தினருக்கு இப்பணம் வழங்கப்படவில்லையாம். கூட்டணி பெற்றுக் கொண்டதா இல்லையா என்பது தெரியவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# நரிச்சிங்கங்கள்

கீழக்கரையில் பெரிதாகப் படித்த ஒரு மெத்தனப்பட்ட கிராமமது என ஆரோ சொன்ன ஞாபகம். என்றாலும் அது பெரிதாகப் படித்த ஊரென என்னால் நம்ப முடியவில்லை. எப்போதும் அந்த ஊர் முட்டாள்தனமாகத்தான் சிந்தித்திருக்கிறது. பல்லில் பொய் வைத்துப் பேசும் எல்லோரையும் வாழவைத்திருக்கிறது. ஏனோ? எனக்குத் தெரியல...... அந்த ஊர் அப்படித்தான். படித்தவன் என்ற கூட்டம் அங்கு முன்னுக்கு வருவதில்லை. தானும் தன் குடும்பமும், தன் பாடும் என்று ஒதுங்குவதும், யார் செத்தால் நமக்கென்ன? யார் வீழ்ந்தால் நமக்கென்ன? நான் மட்டும் நல்ல வாழ்ந்தால் சரிசாமி. இப்படித்தான்.....

நானும் அந்த ஊருக்குப் போய் கனகாலமாகவில்லை. இடப்பெயர்வுகளும், சண்டைகளும் உக்கிரமடையும் போது அப்பப்ப போய் வந்தனான். இப்போது அங்கு தங்கிவிட்டேன். நான் ஊர் உரித்துடையவனல்ல. நெஞ்சு நிமிர்த்தி கேள்வி கேட்க முடியாதவன். இருந்தும் எனது தாயின் பூர்வீகம் எனும் போது நெஞ்சு மயிரைக் காட்டி என்னுடன் சில தரவளிகளைக் கைக்குள் போட்டு இந்த முறை ஊருக்கு வரும் நரிகளுக்கு பதிலடி கொடுப்போம் எனச்சபதம் எடுத்திருக்கிறோம்.

ஊர் வெண்களக்கடைக்குள்ள யானை பூந்தாப் போல ஒரே கலகலப்பு. சந்தி பொந்தெல்லாம் நரிகள் நடமாடின. தொட்டிபட்டியெல்லாம் ஊளையிட்டுத் திரிந்தன. காது கன்னம் வைத்திருக்க முடியாமல் ஒரே எதிரொலியாக ஊரே பிரளயப்பட்டது. நரிகளைக் காக்கா பிடிக்கும் கூட்டம் முண்டியடித்துப் பின் தொடர்ந்தது. மகனுக்கும், மகளுக்கும், தம்பியிட, தங்கச்சிட குடும்பத்துக்கு வேலை கேட்டுப் பேரம் பேசின சில குரங்குகள். மந்திகள் மரத்தில் ஒளித்து நின்று காலை வாரத் தயாராகிநின்றன. ஊருக்குத் தெம்பு கூடியது.

பல்லில் ஒட்டிவைத்த பொய்யைக் கேட்டு ஊரே காற்றில் பறந்து கரணமடித்து கைகொட்டிச்சிரித்தது. நரிகளின் முகத்தில் சந்தோசப் பேரொளி வீசியது. இன்னும் இன்னும் ஆயிரம் ஆயிரம் வாக்குறுதிகள் காற்றில் வந்தன. இன்னும் சில நாட்களில் வேறு நரிகளும் ஊருக்குள் நுழைந்து ஊளையிட்டன. நரிச்சிங்கங்களும் வந்து முகாம் அமைத்து ஊரைப் புகழ்ந்து பாடின.

சிலவாரங்கள் கழிந்தன. நரிகளும் நரிகளும் நடுரோட்டில் கடிபட்டுக் கட்டிப் புரண்டன.

"நான் தான் இந்தக் காட்டுக்கு ராஜா"

"இல்ல நாங்கள் தான் இந்த ஊர் காட்டுத் தலைவர்கள்"

"இல்ல நாங்கள் தான் படித்தநரிகள்"

நாங்கள் தான் நாலுமறிந்த நிரிச்சிங்கங்கள்"

"உய்.... நாங்கள் தான், நாட்டைக் கடந்து எல்லாம் மறிந்தவர்கள், எல்லாக் கலைகளும் பயின்றவர்கள்."

தொங்கலடி
தொங்கா.......
ஊய்யோ....ஊய்யோ.....

புழுதி கிளம்ப
போரே மூண்டது.

கறுத்த நரிகள்
புலியாய்ப்
பாய்நதன. நரிச்சிங்கங்களும், வெள்ளை நரிகளும், சூத்தைக் காட்டிப் பின்புறம் தாவி பத்தைப் புதர்களுக்குள் ஒழிந்து கொண்டன. சில நாழிகையில் சின்னச் சின்ன முகாங்களாக நிரப்புற்றுக்கள் எழுந்தன. மீண்டும் ஊய்யா.... ஊ ..... ஊய்யா... ஊளை ஆணலையும் பெண்ணலையுமாய் அதிர்ந்தது.

நித்திரை வரவில்லை. நடுச்சாமம் தாண்டி சில நாளிகைகள் கடந்திருக்க வேண்டும். ... நரிகளை நினைத்தால் உள்ளுர நடுங்கியது. வானரப் படைகள் இருந்த காலத்தில் எனது ஜனநாயக உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டிருந்த காலமது. இப்போதும் ஊருக்குள் இந்த நரிகளைக் காணும் போது எல்லாம் நடுங்குகிறது. வாழ்க ஜனநாயகம் வீழ்க புள்ளடிகள்.

காகம் கரைய.... குயில்கள் துயர் இசைக்க.... பொல பொல என நிலம் தெளிந்து வந்தது. கதிரவன் கண்வழியாமல் விக்கி நின்றான். ஊர் ஆர்ப்பரித்தது. அடித்து முறித்த உடம்பை "ம்மா" என சோம்பல் முறித்து ஒரு பெரும் கொட்டாவியை விட்டேன். சதீஸ்சும், சதக்காவும், சரத்தும் முழிவுசலத்துக்கு வந்து நின்றார்கள். என்ன கண்ராவியோ. இன்றைக்கு மனம் நொந்து கொண்டது.

"அண்ணே! இண்டைக்கு நரிகளெல்லாம் கூட்டம் போடுதாம். அரசமரத்தடியில் கறுப்பு நரிகளும், நரிச்சிங்கங்கள் வேப்ப மரத்தடியிலும், ஓடையடிச் சந்தியில் வெள்ளை நரிகளும் கூட்டம் கூடி கும்மாளம் போடுதுகளாம். நம்மட ராசாவும். ராசாத்தியும், தம்பியும், தாராவும் பசைவாளியுடன் நரிகளின் படங்களை ஒட்டித்திரியுதுகள். காசுபதியண்ணன் தம்பட்டம் தட்டி ஊருக்கு குரல் வைத்துப் போகிறார். என்ன அண்ணன் செய்வோம். படைதிரண்டு அடித்துத் துரத்துவமா? வாயைப் பொத்தி வாகை மரத்தடியில் ஊளைகளை ரசிப்போமா? எதைச் செய்வோம். எதை விடுவோம்? நீர் சொல்லும்!



நாறியவாயிலிருந்து நாறிப் போனது வார்த்தை!

சதீஸ் எப்போதும் அவசரக் குடுக்கைதான். இப்படித்தான். முருகன் கோவில் விசயத்திலையும் தலையிட்டு அடிவாங்கியவன். "கோவில் என்னத்திற்கு இருக்கு. கோபுரம் கட்டி ராஜ ராஜமாளிகையாக இருப்பதற்காகவா? பட்டத்து ராணிகள் படுத்துறங்கும் அரண்மனைகளாக காட்சியளிப்பதற்காகவா?

எதற்கு? இஞ்ச, பட்டினி கிடந்து வயிறு
வற்றிச் செத்து வடியும் கிராமத்து
மக்களுக்கு ஒருநேர கஞ்சிக்கு
உதவாமல், ஆறு நேர
நெய்வேத்தியமும் அபிசேகமும்
படைத்து இந்தக் கல்லுகளுக்கு
வயிறு வளர்க்கவா?

எதற்கு? இது தகுமா?
சதீசின் நியாயம் சரி.
ஆனால் அவன் காய்
நகர்த்திய முறைதான்.....
அதுபோல்....

சதீஸ்
ஆத்திரப்படாதே!

தோளில் தட்டிச் சமாதானப் படுத்தினேன். ஊளை காதைக் கிழித்தது. வடக்கு, கிழக்கு வாக மரத்தடியில் சைக்கிளைச் சாத்தி முட்டிவேரில் அமர்ந்து கொண்டோம். கொஞ்ச நாளைக்கு முதல் "விக்கெற்" பொல்லினால் தாக்கிய முகமும் நினைப்பும் முன் சுவரில் படிந்திருந்த ரெத்தக் கறை ஞாபகப்படுத்தியது. ஆத்மா ஆணலைக் க்விதை தான் எனக்குள் வந்து வந்து மாய்த்துத் துலைத்தது. அவர்களை பழிவாங்க வேண்டுமெனற விரசம் இருக்கவில்லை. ஆனால் ஏதோ ஒன்று நெஞ்சுக்குள் குறுகுறுத்தது.

உய்யோ... உய்...

ஊ... ஊ... ஊளைகள் கதினுள் ஊறின. சதீஸ்சும், சரத்தும் உசாரானார்கள்.

" எனது உயிரிலும் மேலான என் இனங்களே!

இந்த ஊருக்காக எத்தனை எத்தனையை....... பலி கொடுத்திருக்கிறோம். பக்கத்துக் காகங்களின் அகோரப் பார்வையிலிருந்து எப்படி எப்படியெல்லாம் உமைக்காத்தோம். மணிகிண்டிக் கிடந்த வீதியெல்லாம் சீர்செய்து தார் ஊத்தி ரோட்டமைத்தோம். கள்ளி முளைத்துக் கிடந்த மணல் திட்டுக்களையெல்லாம் பாதை செய்து தந்தோம். உடைந்து கிடந்த ஓட்டைக் கட்டிடங்களையெல்லாம் புதிது புதிதாகத் தந்தோம். இவற்றுக்கு மேலாக உங்கள் அன்புச் செல்வங்களைக் காத்துத் தந்தோம்", "மைக்கைச் சூப்பி ஒரு நரிக்கழுதை கதையளந்தது. சதீஸ் கல்லையெடுத்து வீச ஆயத்தமானான். சரத் கூழ் முட்டையை வீச முற்பட்டான். தடுத்து நிறுத்தி சைக்கிளைத் தள்ளி ஏறினேன். பின்னுக்கு அவர்களும் உளைக்கி வந்தார்கள். காப்பாத்தினாங்களாம் யாரை? ரோட்டில் வெந்து போனவர்களையா? நாய்களும், காகங்களும் இழுத்துப் போனவர்களையா? யாரை?.... எகிறியது. ஆத்திரம் கைமுறுகியது. என்ன செய்ய......?

சில்லாங்கொட்டை சிதறியது போல் குஞ்சுகுறுமான் புழுதி கிளம்பி , இழுபட்டு, இழுபட்டு ஒரு கறுத்த வேனை ஊடறுத்து ஓடி வந்தார்கள். கதவுகள் இல்லா ஒரு வாகனம். நாலா பக்கமிருந்தும் கடதாசிகள் பறந்தன. அடிபட்டு கட்டிப் பிரண்டன சில்லாங்கொட்டைகள். எங்கள் தலைவருக்கு ஜே! காச்சட்டையில்லா ஒரு சில்லுாறு பாடல் இசைத்தது. ஜே! ஜே! இன்னும் ஒன்று ரெண்டு சில்லுாறுகள் பாட்டிசைத்துப் பறந்து போயின.

தோரணங்கள் கட்டியிருந்தது. எங்கும் கதிரவன் அலை அலையாய் பறந்தான். சிவப்பும், மஞ்சள் வர்ணங்கள் கண்ணைப் பறித்தன. நரிச்சிங்கத்தாரின் முகம் சுவர் முழுதும் துளிர்த்திருந்தன. செருப்பைக் கழட்டிப் பாய்ந்தான் சதீஸ். இரு கன்னத்திலும் முள்ளுப் பதிந்திருந்தன. காரி உமிழ்ந்தான். துரோகிகள்.... பச்சத் துரோகிகள்.... இன்னும் இன்னும் ஏதேதோ சொன்னான்.

i i

தங்கத் தமிழா... தானைத் தளபதி தமிழினத்தின் காவலனே! விண் அதிர..... ஊமையனும், செவிடனுகளும் கொடிதாங்கி ஊர்ந்து ஊர்ந்து வந்தார்கள். பேரம் பேசிய குரங்குகள் ஒட்டி ஒட்டி பதுங்கிப் பதுங்கி வந்தன. சைக்கிளில் இருந்து இறங்கி வழி கொடுத்து ஒதுங்கினோம். வேப்பமரத்தை நோக்கி கூட்டம் அலை அலையாய் கூடியது.

"தலைவா! தங்கத் தலைவா!"

சே!... திருத்த முடியாது. பல்லுழந்த கிழவனையெல்லாம் சுட்டுத்தள்ளனும். "ஜே.வி.பி." காரன்ட கொள்கைகள் சரிதான் போல. ஐம்பது வயதுக்குப் புறகு யாரையும் உயிரோடு வைக்கப் போடா என சரத் கர்ச்சித்தான்.

சிங்கத்தார் எழுந்தார். கரகோஷம் விண்ணை முட்டியது. மாலைகள் முகத்தை மறைத்தன. சிங்கத்தார். செருமி குரல் செய்தார். அளந்தார். ஜீவநதி போல் உயிர்த்து உயிர்த்து எழுந்தன. கடல் கடந்து எம்பிரச்சினையை வெளியில் ஊளையிட்டதாக மேசையில் தட்டிக் கத்தினார். முதுகில்லா நம் தலைவர்கள் மத்தியில் தான் தான் முதுகெலும்பாகச் செயற்படுவதாக கதைவிட்டார். இன்னும் இன்னும் ஏதேதோ காற்றில் எறிந்தார். எனக்கு பொல்லாத ஆத்திரம் எழுந்தது. அடக்க முடியாமல் எனையறியாமல் வார்த்தைகள் பறந்தன.

"இறங்கிடா நாயே! கதை விடுகிறாயென்னடா கதை! மூளை


பிசகியவனிட்ட உன்ட பம்மாத்துக் கதைகளை விடு. இல்ல. நட்டுக் கழன்ட கழுதைகளிடம் உன்ட ஊளையை ஊது. எங்கட்ட உன்ட தந்திரம் பலிக்காதுடா நாயே! "கல்லூரி" இந்த மண்ணுக்கு வரப்போடாயென எங்கை எங்கையெல்லாம் ஓடித்திரிந்து தடைபோட்டது மட்டுமில்லாம வெள்ளை நரிகளின் வாலைப் பிடித்து ஊர்த்தண்ணியை விற்க முயன்ற கள்ளா! ஆயிரம் ஆயிரம் பொய்களை அள்ளி வீசி சனங்களை ஏமாத்தலாம் எனப்பார்க்கிறாடா நாயே! இறங்கிடா!"

சடசத்தது சரகோசம். ஒரு கூட்டம் எனை அழைத்தது. "வா தம்பி இந்த நாய்களோட நமக்கென்ன கதை தம்பி" இன்னொரு கூட்டம், "டே யாருடா அவன்? நரியார்.

சதக்கா ஆத்திரப்பட்டான். பல்லை நற... நற வெனக் கடித்தான். சரத் தோளில் தட்டி எனக்கருகில் அமர்த்தினான்.

"யாருக்கும் நான் "வோட்" போடுறதில்ல, ஆனா இந்த ஜாதியில புறந்த பாவத்திற்காக தருவுக்கு மட்டும் புள்ளடியிறதான் வாப்பா. வேற எந்த செயித்தான் வந்தாத்தான் நமக்கென்ன வாப்பா. நமக்கென்ன வேலை தரப் போறானுகளா? அடிபட்டுச் சண்டை பிடித்து பொலிசில நாம் இருக்க ஆர் ஆரோ சுகம் பெற நமக்கென்ன கடுப்பா? ஆளவிட்டா போதும் என்ட அல்லா" காதர் காக்கா சத்தம் வைத்தார்.

"ஓம் காக்கா நானும் தான்
எந்த நாய்க்கும்
புள்ளடியிடுறதில்ல. இந்த
இனத்தில புறந்த பாவத்திற்காக
இரவிக்குப்
புள்ளடியிடுறதான். வேற
என்ன செய்யிற?
இருக்கிற
கள்ளனுகளுக்குள்ள
இந்தக் கள்ளனுகள்
கொஞ்சம்
பரவாயில்ல..."



முறிங்கடா
அவன்ட
முதுகெலும்ப....

ஆர்ப்பரித்தது
சத்தம். சதக்காவும்,
சரத்தும், சதீஸ்சும்,
நினைப்பில்லா
முகங்களும் எனைச்
சூழ்ந்து வாகை மரத்தடியில்
கொண்டு வந்து சேர்த்தார்கள்.

குளிர்காற்று இதமாயிருந்தது. கொந்தளிப்பு சற்று அடங்கிற்று. எழுந்தேன். செல்வண்ணண்ட கடையை நோக்கி "சைக்கிளை" விட்டன். சந்தியில் "ஆமிக்காரனும், பொலிஸ்காரனும்" 'சென்றி'க்கி நின்றார்கள். 'ஐ.சி.யை கேட்டார்கள். கொடுத்தேன். பார்த்துவிட்டுத் தந்தார்கள்." பெரிலை " அமுக்கினேன். செல்வண்ணன் முடி திருத்திக் கொண்டிருந்தார். கடை நிறைய சனக்கூட்டம். அவரோட கதைக்க முடியல. மனிசனோட கதைச்சா மனசுக்குத் தெம்பாயிருக்கும். 56ம் ஆண்டுக் கலவரத்திலிருந்து இப்ப வரைக்கும் உயிர்வாழும் ஒரு ஜீவன். பூவரசு நிழலில் அமர்ந்து கொண்டேன். அவர்களும். வந்து சேர்ந்தார்கள். பச்சைத் தோரணங்கள் கண்ணுக்குள் வந்து வந்து விழுந்தன. காற்றோடு ஊளையும் கரைந்து போயின.

i i i

மின்னி மின்னிகளைப் பிடித்து இருண்ட கண்டத்தை வெளிச்சமாக்கியதாகவும் ஆமைகளை அமர்த்தி வீதியமைத்ததாகவும், நரிகளின் ஒற்றுமைக்காகப் போராடியதாகவும் சமாதானப் புறாவைச் சரிக்கட்ட ரவிவர்மனிடம் பாதை யாத்திரை சென்றதாகவும் இன்னும் இன்னும் நூறாயிரம் புழுகுகளை விட்டார் வெள்ளை முருகண்ணன் கதை விட்டார்.

செல்வண்ணன் என்னைப் பார்த்துச் சிரித்தார். சதீஸ் என்ன செய்வோம் எனக் கையினால் சைகை காட்டிக் கேட்டான். பூவரசு நிழலில் இருந்து ரோட்டுக்கு வந்தேன். இவனுகளுக்கு ஒரு வழிதான் இருக்கு "பீமுட்டி" அடிப்பதை விட வேறு வழியில்ல. நாளைக்கு இதுதான் வேலை. சதீசும், சதக்காவும், சரத்தும் தலையை ஆட்டினார்கள். "சைக்கிள்" வேப்பையடி ரோட்னால் புழுதி கிளம்பிப் பறந்து போனது.

இரவியெண்டா என்ன? தருவெண்டா என்ன?

தும்பி ஆண்டா என்ன? மேசை ஆண்டா என்ன?

நரிச் சிங்கம் வந்தாலென்ன?
நரிக்கழுதை வந்தாலென்ன?

வெள்ளை நரிகள் வந்தாலென்ன?...

கறுத்த நரிகள் வந்தாலென்ன?......

தொங்கலடி தொங்கா கூய்யோ....


கூய்.... கூய்யோ.... கூய்....

மகாத்மா

# திலீபன் நினைவு

## 13 வது வருடம்

விடுதலைப் புலிகளின் லெப்ரினன்ட் கேர்ணல் திலீபனின் 13வது நினைவு தினம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் எங்கிலும் எழுச்சி விழாவாகக் கொண்டாடப்பட்டது.



1987ஆம் ஆண்டு அன்றைய இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கை-களை முன்வைத்து நீரும் அருந்ததாது உண்ணாவிரதமிருந்த தீலீபன் 1987ஆம் ஆண்டு செப். 26ஆம் திகதி மு.ப. 10.48 மணியளவில் உயிர் நீத்தார்.

இந்தியப்படையின் அசிரத்தையாலும், இலங்கை அரசின் பிடிவாதத்தாலும் அவரது உண்ணாவிரதம் உயிரிழப்பில் முடிவடைந்தது. ஆயிரக்கணக்கான மக்களை அதிர்ச்சிக்கும் துயரத்துக்கும் உள்ளாக்கிய இச்சம்பவம் இரு அரசு-களதும் மனிதாபிமானமற்ற நடைமுறை-யைத் தெளிவுபடுத்தியது. கூடவே இவ்வரசுகளுடன் சாத்வீகப் போர் சாத்தியமில்லை என்ற புலிகளின் முடிவை இது வலியுறுத்துவதாகவும் அமைந்தது.

தீலிபன் ஊரெழுவைச் சொந்த இடமாகக் கொண்டவர். விடுதலைப் புலிகளின் யாழ் அரசியல் பொறுப்பாளராகவும் செயலாற்றியவர். விடுதலைப் புலிகளின் மாவீரர் பட்டியலில் 651மாவீரராக உண்ணாவிரதமிருந்து உயிர்த்தியாகம் செய்துள்ள தீலிபன் தனது இறுதி உரையின்போது யாழ் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கிறதோ அன்று தான் தமிழினத்தின் சுதந்திரவிடிவின் ஆரம்ப நாளாகும் எனக் கூறினார்.

வன்னிப் பெரு நிலபரப்பின் சகல பிரதேசங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு கலை நிகழ்ச்சிகள், சிரம-தானப்பணிகள் என நடத்தப்பட்டன. இறுதி மூன்று நாட்களும் அடையாள உண்ணா-விரமும் நடைபெற்றது. நினைவெழுச்சியின் இறுதிநாளான செப். 26ஆம் திகதி வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் உள்ள பாடசாலை-களிலும், வகுப்புக்களைத் தவிர்த்தும், மக்கள் தமது பணிகளைக் கைவிட்டும் சகல பிரதேசங்களிலும் நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களில் கலந்து கொண்டனர்.

தீலீபனின் நினைவு இறுதி நாளன்று படையினருக்கு எதிரான தாக்குதல் ஏதும் தொடங்கப்படலாம் என்று கடந்த காலங்களில் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டே வந்துள்ளனர். இந்த ஆண்டும் படையினர் தாக்குதலை எதிர்பார்த்தே இருந்தனர். இறுதி நேரம் வரைப் போர்க்களம் அமைதியாகவே இருந்தது.

எனினும், செப். 26ஆம் திகதி காலை தொடக்கம் கடுமையான மோதல் யாழ். குடாவில் தொடங்கியுள்ளது.

# வவுனியா: மக்கள் கேள்விகளும் வேட்பாளர்கள் திணறலும்

நெடுங்குளம் பகுதியில் மக்களை நேரில் சந்தித்து வாக்குக் கேட்க பொ.ஐ.முன்னணியின் வன்னி தேர்தல் தொகுதியின் முதன்மை வேட்பாளர் சுமதிபாலா அவர்களும் அவருடைய கட்சி அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் சென்ற போது அந்தப் பகுதிக்குள் பொ. ஐ. முன்னணியினர் வரத் தேவையில்லை கூட்டமும் வைக்கக் கூடாதென அந்தப் பகுதி மக்கள் கூறியுள்ளனர். இதைச் சற்றும் எதிர்பாராத கட்சியினர் காரணம் கேட்டுள்ளனர். மக்கள் கொடுத்த பதிலடி கட்சியினரை பதில் செல்ல முடியாதபடி செய்துள்ளது. நீங்கள் கடந்த தேர்தலில் ஆட்சிக்கு வந்து என்ன செய்தீர்கள்? ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஒருவர் இந்தக் கிராமத்தில் இருப்பதால் தொலைபேசி இணைப்பு வழங்காது அடுத்த கிராமத்திற்கு பலமைல் சுற்றி இணைப்பு வழங்கியவர்கள் தானே நீங்கள்? என மக்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தமது தேர்தல் பிரசாரத்தை கைவிட்டு நெடுங்குளம் கிராமத்திலிருந்து வெளியேறி விட்டனர்.


இதேபோல ரெலோ தவசிகுளம் பகுதியில் பிரசாரம் செய்யப் போன போது தேங்காயெண்ணை, தேங்காய் போன்ற பொருட்களுக்கு வரி எடுப்பதை நிறுத்திவிட்டு வாருங்கள் வாக்களிக்கின்றோம் என மக்கள் கூறியுள்ளனர். அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதால் அரசிடமிருந்து எதுவித உதவிகளும் எமக்குக் கிடைப்பதில்லை. ஆகவே தான் எமது இயக்க உறுப்பினர்களின் செலவுகளுக்காக இந்த வரியை எடுக்கின்றோம் எனக் காரணம் கூறிய போதும் - இந்தக் காரணமும் தேவையில்லை தேர்தல் கூட்டங்களும் தேவையில்லை எங்களிற்குள்ள பாஸ் பெறும் சிக்கல்களைத் தீர்க்கவே யாரும் இல்லை. இதேபோல நாளாந்தம் ஏற்படும் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்படாத நிலையில் எங்களுக்கு என்ன தேர்தல் என மக்கள் கேட்கும் கேள்விகளிற்கு பதில் சொல்ல முடியாது வேட்பாளர்கள் திணறுகின்றனர். இதனால் சில இடங்களில் மக்களுக்கு முன் சென்று வாக்குக் கேட்க முடியாத நிலையிலும் வேட்பாளர்கள் தவிக்கின்றனர்.

- கே.ஆர்.

நன்றி - நூலகத்திட்டம்








# தலைமறைவு வாழ்க்கை

## நினைவுக் குறிப்புகள் – 1

மருதானையிலிருந்து தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்த ஒரு ரெயில் வண்டியின் மூன்றாம் வகுப்பு பெட்டியொன்றில் அமர்ந்திருந்தேன். அப்போது எனக்குப் பதினேழு வயது ஆகியிருக்கவில்லை. பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். எனது மடியில், ஒரு திறந்த புத்தகம். "சோசலிசம்: தத்துவமும் நடைமுறையும்" என்ற ஜோன் ஸ்ரற்றச்சியின் நூல் அது. விக்டர் கொலனிஸின் இடதுசாரி புத்தக வெளியீட்டகத்தினரால் வெளியிடப்பட்ட சிவப்புநிற அட்டையிடப்பட்ட புத்தகம் அது. அதைப் படிப்பதில் ஆழ்ந்து போயிருந்த நான் சற்றுத் தலையை உயர்த்திப் பார்த்த போது எனக்கு எதிர்ப்புறமிருந்த சீற்றிலிருந்த ஒருவர் என்னை மிகவும் நெருக்கமாக உற்று நோக்கிக் கொண்டிருப்பதை அவதானித்தேன்.

'நீங்கள் சி.டி.எஸ்.சிறிவர்தனவின் சகோதரரா?' என்று கேட்டார் அவர்.

'ஓம்' - நான் பதிலிறுத்தேன்.

எங்கள் குடும்ப முகம் என்னிடமும் இருந்தது, அவருக்கு என்னை அடையாளம் காணக் காரணமாக இருந்திருக்கலாம் என்று எனக்குப் புரிந்தது.

'நீங்கள் ஜோன் ஸ்ரற்றச்சியின் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்று நினைக்கிறேன்.

- இது அவர்.

'ஆம்... அவர் நல்லாக எழுதுகிறார், இல்லையா?'

எதிர்ப்புறத்தில் இருந்த அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். ஒரு மெல்லிய முரண்நகை அவரது புன்னகையில் வெளிப்பட்டது.

"சோசலிசத்தை மத்தியதர வர்க்கத்தினர்கள் மத்தியில் எடுபடச் செய்வதற்கு முயல்பவர்களில் இந்த ஸ்ரற்றச்சியும் ஒருவர்" என்றார் அவர்.

எனக்கு இது ஒரு அதிகபட்சமான நிந்தனை போலப்பட்டது. ஆனால் அவர் ஒருவகை உறுதியுடன் அதைக் கூறினார். தவிரவும் என்னைவிட வயதானவராகவும் தெரிந்தார். எனவே அவருடன் விவாதிக்கும் துணிவு எனக்கு வரவில்லை. அவருடன் விவாதிப்பதற்கான அவகாசமும் கூட இருக்கவில்லை. புகையிரதம் ஏற்கெனவே அவர் இறங்கவேண்டிய இடத்திற்குக் கிட்ட வந்திருக்க வேண்டும். அவர் எழுந்து நின்றார். ஆனால், அவர் இறங்குவதற்கு முன்பாக நான் அவரிடம் கேட்டேன்.

"உங்களது பெயர் என்ன என்று நான் அறியலாமா?"

"பேர்னாட் சொய்சா"

இந்தச் சந்திப்புத் தான் லங்கா சமசமாஜக் கட்சியுடனான எனது ஈடுபாட்டிக்கான தொடக்கமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

000

அதற்குப் பிறகு நீண்ட நாள் வரை பேர்ணாட்டைப் பற்றி நான் எதையும் அறிந்து கொண்டிருக்கவில்லை. ஆனால், அவர் எப்படி இங்கு வருகிறார் என்றால், என்னைப் பற்றி அவர் ஹெக்டர் அபேவர்த்தனவிடம் கூறியிருந்தது தான். 'நாம் கலந்துரையாடுவதற்குரிய முதிர்வுடன் ஒரு பாடசாலை மாணவன் இருக்கிறான்' என்று என்னைப் பற்றி ஹெக்டரிடம் அவர் கூறியிருக்கிறார். நான் அப்போது ரத்மலானையில் வசித்து வந்தேன். ஹெக்டர் மவுண்ட் லவனியாவில் (கல்கிசை) அப்போது இயங்கி வந்த இலக்கியக் கழகத்தில் ஒரு செயல்வேகமிக்க உறுப்பினராக் இருந்து வந்தார். இந்த இலக்கியக் கழகம் விரிவுரைகளையும், விவாதங்களையும் ஒழுங்கு செய்து வந்தது. ஹெக்டர் என்னை அந்தக் கழக செயற்பாடுகளில் ஈடுபடுமாறு செய்வதில் வெற்றி கொண்டார். பிறகு அவர் எனக்குப் புத்தகங்கள் தந்தார். என்னுடைய சோசலிசம் தொடர்பான கல்வி மெல்லமெல்ல ஸ்ரற்றச்சியை விடவும் மேலே வளர்ந்து செல்லத் தொடங்கியது.

'சோசலிசம்: தத்துவம் நடைமுறையும்' என்ற இந்தப் புத்தகமல்ல நான் முதலில் படித்த ஸ்ரற்றச்சியின் புத்தகம். சில மாதங்களுக்கு முன் அவரது "நீங்கள் ஏன் ஒரு சோசலிஸ்ட் ஆகவேண்டும் என்ற ஒரு பிரசுரத்தையும் படித்திருந்தேன். கோட்டையிலுள்ள வெஸ்லி தெருவில் நடந்து கொண்டிருக்கையில் ஒரு தேனீர்க்கடையில் 'கவுண்டரு'க்கு மேலாக கிளிப்பில் தொங்கிக் கொண்டிருந்த அந்தப் பிரசுரத்தை நான் கண்டேன். அப்போது ஜோன் ஸ்ரற்றச்சி என்ற பெயரை நான் கேள்விப்பட்டிருக்கவில்லை, அதை நாற்பது சதம் கொடுத்து வாங்கிக் கொண்டேன். அதைப் படித்து முடித்துவிட்டு எனக்குள் சொல்லிக் கொண்டேன். "நான் இப்போது ஒரு சோசலிஸ்ட்." ஸ்ரற்றச்சி சிலவேளைகளில் பேர்ணாட் சொன்னது போன்ற ஒரு ஆளாக இருக்கலாம் (பின்னாளில் தொழிற்கட்சி அரசாங்கத்தில் அவர் யுத்தத்துக்குப் பிந்தியகால அமைச்சராக பதவியேற்றார்): ஆனால், அவர் ஒரு நல்ல பிரச்சாரகன். எப்படியோ என்னுடைய அனுபவத்தில் நான் பல தடவை சந்தித்த ஒரு உண்மை என்னவென்றால், **ஒரு புத்தகம் உங்கள் மீது ஏற்படுத்துகிற பாதிப்பு என்பது அந்தப் புத்தகத்தின் சிறப்பில் தங்கியிருப்பதில்லை. பதிலாக அந்த நேரத்தில் நீங்கள் எப்படி முதிர்வடைந்திருந்தீர்கள் என்பதில் தான் தங்கியிருக்கிறது** என்பது தான்!

சோசலிசம்: தத்துவம் நடைமுறையும் என்ற புத்தகத்தை அதே தெருவில் உள்ள அலுவலகம் ஒன்றில் வாங்கினேன். பின் நாளில் உயர்ஸ்தானிகராக வந்த ஜஸ்டின் சிறிவர்தன என்பவரால் நடாத்தப்பட்ட அந்த அலுவலகம் சிவப்பு நூல் கழகத்தின் (Red book club) ஒரு முகவர் நிலையமாகச் செயற்பட்டு வந்தது என்று நினைக்கிறேன். முதற் பிரசுரத்தை வாங்குவதற்கான நாற்பது சதத்தையோ அல்லது இந்தப் புத்தகத்தை வாங்குவதற்கான இரண்டோ மூன்று ரூபாயையோ நான் எப்படிப் பெற்றுக் கொண்டேன்' என்பது ஆச்சரியம் தான்! எனது அப்பா ஒரு கிளார்க் ஆக இருந்து ஒய்வு பெற்றவர். எனது குடும்பம் மிகவும் சிக்கனமான வாழ்க்கை நடாத்தி வந்தது. சிறுவர்களுக்குக் கைச் செலவுக்குப் பணம் (Pockct money) கொடுக்கும் வழக்கம் எம்மிடம் இருக்கவில்லை.

**டோரோதி கெயேர்ஸ்** அல்லது **அகதா கிறிஸ்டி** ஆகியோரின் புத்தகங்களை நான் எப்போதாவது மருதானை ஸ்ரேசனிலுள்ள ஒரு கடையில் வாங்குவதுண்டு. எனது பழைய பாடசாலைப் புத்தகங்களை, அந்தக் காலத்தில் நகரத்தின் அந்தப் பகுதியில் பரவலாக காணக் கிடைக்கும் பழைய புத்தகங்கள் வாங்கும் கடைகளிலொன்றில் விற்றுக் கிடைக்கும் பணத்தில் இவற்றை நான் வாங்குவேன். ஸ்ரற்றச்சியின் புத்தகங்களைக் கூட நான் அப்படித் தான் வாங்கியிருக்க வேண்டும் என நினைக்கிறேன்.

ஆனால், என் இளமைக் காலத்தில் நான் சோசலிசத்தை நோக்கி ஈர்க்கப்பட்டதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் அது வெறுமனே ஸ்ரற்றச்சியையோ அல்லது அந்தக் காலத்தில் நான் படித்த வெல்ஸ், ஷோ போன்றவர்களின் புத்தகங்கள் மட்டுமல்ல (அவற்றுக்கும் பங்கு இருப்பினும்) வேறுசில செல்வாக்குகளும் கூட எனது உருவாக்கத்தில் பங்கு வகித்தன என நினைக்கிறேன். **ஒருவரின் அறிவார்ந்த சிந்தனையின் வெளிப்பாடுகள் தான் எப்போதும் அவரது புத்திஜீவித அர்ப்பணிப்புகட்கான ஒரே காரணம் என்று கொள்ள முடியாது. பிரக்ஞைபூர்வமாக இல்லாவிட்டாலும் வேறு சில ஆர்வங்களும் கூட இதற்குக் காரணமாக உள்ளன. இவற்றை எந்தவிதத்திலும் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது.**

ஆனாலும், என்னுடைய குடும்ப வாழ்க்கையிலோ அல்லது பாடசாலைச் சூழலிலோ இருந்த எது என்னை நான் போய்க் கொண்டிருக்கும் பாதையை நோக்கித் தள்ளியது என்று என்னால் அடையாளம் காண முடியவில்லை. இப்போது திரும்பிப் பார்க்கையில் என்னை உருவாக்கிய அந்தச் சக்திகளை ஓரளவுக்கு இனங்காண முடிகிறது.

**(இன்னும் வரும்)**

---

நீ போனாய்!
மழைக்கால இருள்வெளியில்
எம் மனதிலெல்லாம்
கறுத்தச் சாயம் வீசி
தன்னந்தனி வெளியாய்
நீ மறைந்து போனாய்...!

ஊரெல்லாம் கேட்பாரில்லாமல்
மூடி மறைத்த உன் ஞாபகம்
இரண்டு கிழமையின் பின்
குசுகுசுத்து ஊரெல்லாம்
வாய் பேச........

2.
கண்ணைக் கட்டி
எனை அழைத்து
சொப்பின் பேக் பிடித்து
கதறக் கதற
ஆணுறுப்பில் 'பெற்றோல்' ஊத்தி
'லாச்சிக்'குள் வைத்து அமுக்கி
இரத்தம் பீறிட.........
அலறி ஒப்பாரியிட்டு
லட்ச நாம அர்ச்சனைக்கும்
காது கேளாக் கடவுளின்
கருணையின்றி
இரண்டு வருட
இருட் சிறையிலிருந்து
நான் விடுதலையானது
உன்க்குத் தெரியாது.

3.
நீ மக்களுக்காய்
சுடுகலன் ஏந்தியவன்
ஒரு சொட்டுக் குடும்பப் பாசமின்றி
அம்மா அப்பா, சகோதரரர்களை உதறித் தள்ளி
இன விடுதலைக்காய்......
சுடுகலனை தோளில் சுமக்க
நீ எம் கண்ணில் மண்ணைத் தூவி
மறைந்து போனவன்
இப்ப ஏன் வந்தாய்!

4.
இருள் வெளியில்
இரண்டு வருடம் கழிந்த உன் ஞாபகம்
எம் நெஞ்சத்தில் 'கிச்' சென்ற
பாச அதிர்வுகள் இல்லத்துப் போன போது
மீண்டும் ஊரில் வாய் முளைத்து
உன் நாமம் ஊரெல்லாம் பரவ......

கைகள் நடுங்கி
கால்கள் உதற
ஏது செய்வதென!
மலக்க மலக்கப் பார்க்கிறேன்

ஏன் வந்தாய்!
சுடுகலனை தோளில் சுமந்து
வீரராய்ப் போன நீ!

மீண்டும் எனை.........
.....................

## மழைக்கால இருள் வெளியின் ஒப்பாரிப் பாடல்

**த.மலர்ச்செல்வன்**

நன்றி - நூலகத்திட்டம்



## வாஸந்தியின்: சிந்திக்க ஒரு நொடியும் வாஸந்தி சிந்திக்க பல நொடிகளும்!

"எனக்கு அச்சமாக இருக்கிறது.
புகை மண்டலம் தேசிய சின்னமாகவும்
வெடிச் சத்தங்களே தேசிய கீதமாகவும்
அங்கீகரிக்கப் பட்டு விடுமோ.!?
எனக்கு அச்சமாகயிருக்கிறது"

என்ற ஈழத்துக் கவிஞரொருவரின் கவிதையின் மேற்கோளோடு இந்தியாடுடேயில் வாஸந்தி எழுதியிருக்கும்: சிந்திக்க ஒரு நொடி: ( அதை வாசிக்கவே பல நொடிகள் வேண்டும்!) பத்தி வாசித்தாயா? எனக்கு அண்மையில் கவனத்தை ஈர்த்த விடயம் வாசந்தியின் உணர்ச்சிமயமான எழுத்துக்கள் தான்! இந்த உணர்ச்சி ஈழப் பிரச்சினையென்று வந்து விட்டால் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. வை.கோ. மற்றும் ராமதாஸினது புலி ஆதரவு ஆர்ப்பரிப்புகளைக் கண்டித்து தன் விசனங்களை தேச அபிமானத்தோடு எழுதியிருக்கிறார். "ஈழத் தமிழருக்காகக் குரல்" என்று பேசும் அரசியல் போலியானது என்று "உண்மை" சொல்லியிருக்கிறார். புலிகளை "தன் இனத்தவரையே அழிக்கத் தயங்காத, அச்சுறுத்தும் பயங்கரவாத வன்முறைக் கும்பல்" என்று பொரிந்து தள்ளியிருக்கிறார். இது புலிகளினதும் போராட்ட சக்திகளினதும் கவனிப்பைப் பெற வேண்டிய ஒன்று. ஏனென்றால் ஒரு போராட்டமொன்றிற்கான தேவை, நியாயப்பாடுகள் எவ்வளவுதான் பெரிதாக, நீண்டதாக, அவசியமாக் இருந்தாலும் இடைக்காட்டப்படுகிற வன்முறைகள் அவைகளை மிகைத்து வேறொரு தளத்திற்கு இட்டுச் சென்று விடுகின்றன என்பதற்கு வாஸந்தியின் இந்தக் கணிப்பு நல்லதொரு உதாரணம். இங்கு வாசந்திக்கு ஈழப் போராட்டமென்பது புலிகளுக்குள் மட்டும் சுருங்கிப் போய்க் கிடப்பது இன்னொரு அவலம். ஆக்கிரமிப்பின் அனைத்து வடிவங்களுக்குள்ளும் சிக்குப்பட்டிருக்கிற மக்களின் துயரங்களுக்கு வை.கோ.வினதோ, ராமதாஸினதோ ஆரவாரங்கள் எதுவும் செய்து விட முடியாது என்ற சிறுபான்மையும் உணர்கிற ஒரு விடயத்தை வைத்து வாஸந்தி இவ்வாறு பொரிந்து தள்ளியிருப்பதற்கான பின்னணி வாஸந்திக்கு மட்டும் வெளிச்சமாக இருக்கலாம்.

எங்களுக்குள் ஜாதி மத பேத உணர்வுகள் உண்டு. ஊழல் அரசுகள் உண்டு. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் உண்டு. ஆனால் நாட்டின் இறையாண்மை ஒற்றுமை சார்ந்த விடயமென்றால், நாங்கள் ஒரு இரும்புக் கோட்டை என்று அடைபட்ட தன்மையை வைத்து கோஷம் போடுகிறார். புலிகள் ஆதரவுக் கோஷமெழுப்பிய ஒன்றிற்காக மட்டும் இந்தப் புலம்பல் அல்ல என்பது இப்போது உனக்கு விளங்கும். (புலிகள் என்ன இந்தியாவிலும் ஒரு துண்டையா கேட்கிறார்கள்!) இந்தியாவின் இறையாண்மை ஒற்றுமை சார்ந்த விடயமாக இப்போதெல்லாம் இல்லை என்பது சமகால அரசியல் போக்குகளுடன் தொடர்புடைய எவருக்கும் எளிதில் புரியக் கூடியது. வாஸந்தியே சொல்லும் மொழி, மத, ஜாதி பேதங்களே இறையாண்மையை ஆட்டம் செய்து கொண்டிருப்பதை உணர்ச்சியற்ற நிலையில் புரிந்து கொள்ள வேண்டும். தீவிரவாத ஆளும் கும்பலின் சிறுபான்மையினர் மீதான அத்துமீறல்கள் வேறு வடிவம் கொள்ளவாரம்பிக்க நெடுநாட்கள் காத்திருக்கத் தேவையில்லை. இப்போது இந்துத் தீவிரவாதமாக பரப்பப்படுபவை நாளை ஹிந்தித் தீவிரவாதமாக மாறும் போது (ஏற்கனவே இது தொடர்பான உரசல்கள் இருக்கின்றன) தமிழ்நாட்டினருக்குப் புரியும். இன்னொன்று ஜாதியின் மதத்தின் மற்றும் அரசியலின் பெயரால் நடைபெறும் கொலைகள், கொடுரங்களின் ஒப்பீட்டளவான எண்ணிக்கை இங்கு குறைந்ததே. National Crime Records Bureau வெளியிட்டுள்ள Crime in India 1998 என்ற நூலின் பதிவுகள் மூலம் கிடைத்த சம்பவங்களின் படி வருடமொன்றுக்கு 38,000 கொலைகளும் 15,000 பாலியல் வன்புணர்வுகளும், 23,000 ஆட்கடத்தல்களும் நடைபெறுகிறதாம்!

"நீங்கள் அனுபவிக்காத புறக்கணிப்பை நாங்கள் அனுபவிக்கவில்லை" என்று தேசப்பற்று மிகுந்த விட்டுக் கொடுப்புகள், கையாலாகாத்தனங்களுக்காக வாஸந்தியை நாம் வாழ்த்தத்தான் வேண்டும். தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும் என்று கிழட்டுபதேசம் பண்ணிவிட்டு நாம் ஒதுங்குவோம். இது போக, இந்தியா டுடேயின் அரசியல் எப்போதும் முற்போக்குச் சக்திகளின் விமர்சனங்களுக்குட்பட்டது என்பது உனக்குத் தெரியும். அதன் இலக்கிய மலர் மலத்துடைப்புக்குள்ளான அவலம் அதற்கெதிரான மாபெரும் குறியீடு!

இங்கு உனக்கு இந்தியாவின் இன்னொரு பிரபல எழுத்தாளரின் குறிப்பொன்றையும் சொல்கிறேன் வாசித்துப்பார். கமலாதாஸ் (மாதவிக்குட்டி என அறியப்பட்ட மலையாளத்தின் பிரபல எழுத்தாளர்) அண்மைய குமுதம் இதழொன்றுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு சொல்கிறார்-: "காஷ்மீருக்கு மட்டுமல்ல.....எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி தர வேண்டும். மாறி வரும் அரசியல் சூழ்நிலையில் மத்திய அரசு அதிகாரங்களை அள்ளி முடிந்து வைத்திருப்பது சரிப்பட்டு வராது. அதுவும் கூட்டணி அரசில் அது சாத்தியமும் இல்லை. இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா பழைய மாதிரி சிறு சிறு சமஸ்தானங்களாகப் பிரியும்". இரு எழுத்தாளர்களின் பார்வை வித்தியாசங்களைப் பார்..... அவர்களின் இலக்கிய எழுத்துக்களுக்கிடையே இருக்கும் வித்தியாசங்களைப் போல! வாஸந்தியின் பீற்றல்களுக்கு "பழைய மாதிரி" என்பதிலும் "சமஸ்தானங்களாகப் பிரியும்" என்பதிலும் முகத்திலடிக்கிற மாதிரியான பதில்கள் இருக்கின்றன. இங்கு இன்னொன்றையும் எதிர்வு கூறலாம். "கமலாதாஸ் இப்போது முஸ்லிமாகி கமலா சுரைய்யா ஆகிவிட்டாதானே. 'அதுதான் பாகிஸ்தான் உளவுப்பிரிவான ஐஎஸ்ஐ' (Inter -Services Inteligence) யிடம் காசு வாங்கிக் கொண்டு அப்படிச் சொல்கிறா என்று.

வாஸந்தியின் இன்னொரு உணர்ச்சிப் பெருக்கைக் கவனி -

'அனுதாபத்தால் ஈழப் போராளிகளுக்கு அடைக்கலம் தந்த தமிழ் மண்ணிலேயே எங்கள் காதில் பூ சுற்றி, அச்சுறுத்தும் பயங்கரவாத செய்தி பரப்ப எங்கள் தலைவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட போது, இது பச்சைத் துரோகம் என்று ஒவ்வொரு இந்தியனும் அன்று எதிர்த்தது இன்னும் மறக்க முடியவில்லை'.

பச்சைத் துரோகம் இழைத்தது யாரென்பது அரசிலாளர்களுக்கு நன்கு தெரிந்த விடயம். உணவுப் பொட்டலங்களைப் போட்டவர்கள் எப்படி குண்டு போடுபவர்களாக மாறினார்கள்? இந்தியப் படை இங்கு கொன்ற, வல்லுறவுப் படுத்திய உயிர்களெல்லாம் என்ன சந்தைச் சரக்கா? ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது. அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்குப் பின்னால் என்ன இருக்கிறது? மத்திய அரசு இராணுவத்தனத்தோடு நடந்து கொள்கையில் அடைக்கலம் தந்து ஏன் இறையாண்மை அற்று நின்றீர்கள்? அது தமிழக அரசியல். எல்லாரும் புரிந்து கொள்கிற சாதாரண விடயம். இறையாண்மை என்பது சொல்லிக்கொள்ளத்தக்க, போற்றத்தக்க விடயங்களிலாயிருக்க வேண்டும். அட்டுழியங்களுக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் சாந்து பூசி இறையாண்மைப் பெருமை கொள்வதில் என்ன சிறப்பிருக்கிறது?

இன்னொரு விடயத்திற்கு வருவோம். அனுதாபத்திற்குட்பட்டவர்கள், அடைக்கலம் வழங்கப்பட்டவர்களால் கொல்லப்பட்டதால் (இதிலும் கூட மொத்த தமிழ் பேசும் ஈழத்தவருக்காக புலிகளை பிரதிநிதித்துவப்படுத்துவது முதல் தவறு) பச்சைத் துரோகம் என்கிறார். சரி, ராஜிவ் காந்தி இலங்கை வந்த போது ஒரு சிங்கள இராணுவ வீரன் அடித்தானே (கொலை செய்ய ஏதுவான ஆயுதங்கள் இருந்திருந்தால் அன்று கொல்லப்பட்டிருக்கலாம் என்ற எடுகோளில் இதைப் பார்ப்போம்) அதை எடுப்போம். ஆட்சியாளர்களும், ஆக்கிரமிப்பாளர்களும் அதே மாதிரியான ஓர் அரசுக்கு உதவ வந்த போதுதானே இது நிகழ்ந்தது. அது எப்படி ஒருவர் எதிரியினதும் கூட்டாளியினதும் இலக்காக முடியும்? இங்கேதான் இருக்கிறது வாஸந்தி புரிந்து கொள்ள வேண்டிய அரசியல். இந்திரா காந்தி கொலையை எடுப்போம். இறையாண்மையான நாட்டுக்குள்ளேதானே, ஓர் இந்தியக் குடிமகனால் தானே அவர் கொல்லப்பட்டார் (அப்படியே காந்தி வரைக்கும் போகலாம்). அவர்களை என்னவென்பார் வாஸந்தி? வீட்டுக்குள்ளே என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்றாரானால் அது கதை. யதார்த்தமும் அரசியலுமல்ல!

புலிகளும் ஈழத்தமிழரும் இப்போது யாரையும் நம்பத் தயாராக இல்லை என்பது வாஸந்தி போன்றோர் புரிந்து கொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயம். தமிழகத்தில் இப்போது அரசியல் சூடு பிடித்திருக்கிறது. அதன் சமகாலத் தலைப்பு ஈழத் தமிழர் பிரச்சினை. பேச, எழுத, உணர்ச்சிவசப்படவென எல்லாவற்றுக்கும் ஏற்ற நல்ல தலைப்பு!

அது சரி அந்த சந்தனக்கடத்தல் வீரப்பனிடமிருந்து (அவனைப் பிடிப்பதை விடு) நடிகர் ராஜ்குமாரை விடுவித்து விட்டார்களா?

## சுத்தி (The Cow)

### சிங்கள குறுந்திரைப்படம்



அனோமா ராஜகருணா

பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பின் அனுசரணையில் அனோமா ராஜகருணாவினால் நெறிப்படுத்தப்பட்ட "சுத்தி" சிங்கள குறுந்திரைப்படம் கடந்த 15ம் திகதி ரஷ்ய கலாசார நிலையத்தில் காண்பிக்கப்பட்டது. எம்.டீ.ரத்தம்மாவின் "பசு" என்ற கேரளச் சிறுகதையே இக்குறும்திரைப்படத்தின் கருவாக அமைந்துள்ளது. இச்சிறுகதையின் முக்கிய பாத்திரமாக வரும் பெண் பாத்திரம் சுத்தி. இந்தப் பெயரே திரைப்படத்தின் பெயராகவும் அமைந்துள்ளது.

கல்வி, தொழில், அன்பு என்று... ... கனவுகளும் எதிர்பார்ப்புகளும் நிறைந்தது இளமைக்காலம். இதற்கு சுத்தியும் விதிவிலக்கல்ல. சுத்தி நாட்டியத்தில் மிகுந்த ஆர்வமும் விருப்பமுமுடையவள். சிறந்த நாட்டிய ஆசிரியையாக வரவேண்டும் என்பது அவளது பெரும் விருப்பாக இருந்தது. ஆனால், ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களுக்கான பிரத்தியேக வரையறைகளை ஏற்படுத்தியுள்ள குடும்ப கட்டமைப்பு சுத்தியின் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் சிதைத்து விடுகின்றது.

சுத்திக்கு இரு பெண் சகோதரிகள் இருப்பதால் சுத்தியை விரைவில் திருமணம் செய்து வீட்டை விட்டு அனுப்பிவிட பெற்றோர் தீர்மானிக்கிறார்கள். பொதுவாக பெண்கள் என்றாலே குடும்பத்திற்கு சுமை என்பது தொன்றுதொட்டு இயல்பாகிப் போய்விட்ட ஒன்று. இதனால் சுத்திக்கு திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. சீதனம் எதிர்பார்க்கப்படாததும் சுத்தி வீட்டாரின் தகுதிக்கு ஏற்றதாக அமைந்ததாலும் திருமணம் எவ்வித கேள்விகளுமின்றி நடைபெறுகின்றது. சுத்தியின் அபிப்பிராயம் தொடர்பாக எவ்வித அக்கறையுமின்றி பெற்றோரே எல்லா விடயங்களையும் தீர்மானித்து முடிவெடுக்கின்றார்கள்.

சுத்திக்கு திருமணம் நடக்கிறது. வழமை போலவே திருமணத்துக்கு பின் கணவன் வீட்டுக்கு போகின்றாள் சுத்தி. திருமண நாள் இரவு சுத்தியின் கணவன், "இன்று முழுதும் எனது நண்பர்களை நான் பார்க்கவில்லை. அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்" என்று கூறி பண்ணைக்குச் செல்கிறான். அவன் வீடு திரும்பும் போது சுத்தி நித்திரையாகி விடுகிறாள். பின் இதுவே வழமையாகியும் விடுகின்றது. சில சமயங்களில் அவளின் உறக்கத்தைக் குழப்பக் கூடாது என்று நினைத்து பண்ணையிலேயே அவன் தங்கி விடுவதும் உண்டு. திருமண வாழ்வில் நாட்டமில்லாதவனான அவன் பெரிதும் நேசிப்பது அவனது பண்ணையையே. அதனால் அவன் தன்நாட்களின் பெரும்பகுதியை அங்கேயே கழித்து விடுகிறான். இதனால் சுத்தி தனிமையில் இருக்க நேரிடும் போதெல்லாம் நாட்டியத்தைப் பற்றியே சிந்திப்பதுண்டு. வளையல்களும், காற்சதங்கையும் அவளுக்கு அதை நினைவூட்ட



மறப்பதில்லை. சுத்தியின் கணவன் அவனது தொழிலிலேயே முழு ஈடுபாட்டையும் காட்டி வருவதால் கணவனில் வெறுப்படைகிறாள் அவள்.

ஒரு நாள் பண்ணையில் நடக்கும் சம்பவம் அவளை மிகவும் பாதிக்கிறது. பண்ணையில் இருந்த கன்றுக்குட்டிக்கு ஒன்றுக்கு சுகமில்லாமல் போகின்றது. கன்றுக்குட்டிக்கு சுகமில்லை என்றதும் சுத்தியின் கணவன் பெரிதும் பதறிப்போய் விடுகிறான். சுகவீனமுற்ற கன்று இறுதியில் காப்பாற்ற முடியாமல் இறந்து போகிறது. அதற்காக அவன் படும் வேதனையையும் கவலையையும் கண்ணுற்ற சுத்தி வேதனைப்படுகிறாள். "நான் இறந்தால்கூட இவ்வாறு கவலைப்படமாட்டீர்கள் போலும்" என்று தன் ஆதங்கத்தை அவனிடம் வெளிப்படுத்துகின்றாள்.

அவன் தனது பண்ணையை அதிகளவு நேசிப்பதனை அவதானித்த சுத்தி இறுதியில் ஒரு நாள் பண்ணைக்கு சென்று பசுமாடுகளுடன் இருந்து தன்னையும் ஒரு பசுவைப் போன்று கற்பனை செய்து கொண்டு கொள்கிறாள். அவ்வாறு இருந்தால் தன் கணவன் எவ்வாறு தன்னுடன் நடந்து கொள்வான் என்றும் கற்பனை பண்ணிப் பார்க்கிறாள். அவளது கற்பனையில் சுத்தியின் கணவன் அவளுக்கு சாப்பாடு வைக்க வருவதைப் போலும், பசுமாடான அவளைத் தடவி விடுவதைப் போலும் கற்பனை பண்ணுகிறாள்.

இறுதியில் வீட்டில் அவளைக் காணாது தேடுகிறார்கள். அவள் பண்ணையில் இருப்பது தெரிந்து அங்கு வருகிறான் சுத்தியின் கணவன். அங்கு அவள் சிவப்பு ஆடையில் நடனமாடுகிறாள். இதைக் கண்ணுற்ற அவன் பயந்து போய் ஓடுகிறான். இதுதான் இப்படத்தின் கதை.

திருமணத்தில் இணையும் இருவரின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் பொருள் பண்டம் குடும்ப கௌரவம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்தச் சமூகத்தில் திருமணம் என்பது வெறும் ஒப்பந்தமாக மாறி விட்டுள்ளது. நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தமான திருமண உறவில் உண்மையான மனித உறவுகளை கட்டியெழுப்ப முடியுமா? வாழ்வின் மீதான சுத்தியின் எதிர்பார்ப்புகள், விருப்பு வெறுப்புகள் கனவாகிப் போய்விடுமா? அல்லது கைவிடப்படுமா? போன்ற கேள்விகளையும் இது எழுப்புகின்றது.

படத்தின் ஆரம்பத்திலேயே குறிப்பிடப் போகும் விடயம் என்னவென்று புலப்படுவதால் தொடர்ந்து படத்தை ஆர்வத்தோடு பார்க்க முடியவில்லை என்ற ஆதங்கம் மனதைவிட்டகலவில்லை. இருப்பினும் காட்சிகள் ஒரு கிராமத்து சூழலுக்குள் பார்வையாளர்களை இழுத்து வைத்திருந்ததுவும் மறுக்க முடியாது. காட்சியமைப்பு கண்களுக்கு மாத்திரமன்றி மனதிற்கும் குளிர்ச்சியாகவே அமைந்திருந்தன. மொத்தத்தில் பார்க்கப்பட வேண்டிய ஒரு திரைப்படம் இது. இத்திரைப்படம் எதிர்வரும் 29ம் திகதி சுயாதீனத் தொலைக் காட்சி சேவையில் (ITN) இரவு 9.30 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளது.

– தர்ஷினி


பேராசிரியர் கா.சிவத்தம்பியின்

# மதமும் கவிதையும்

~ சில குறிப்புகள்

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களால் எழுதப்பட்டு அண்மையில் வெளி-வந்திருக்கும் "மதமும் கவிதையும்" என்னும் நூல் சிறியதே ஆயினும் பல விஷயங்களில் முக்கியமான ஒன்றாகக் கருதத் தக்கது எனலாம்.

முனைவர் மே.து.ராசகுமார் அவர்களின் முயற்சியால் 1999 டிசம்பரில் தமிழ்நாடு மக்கள் வெளியீட்டினால் வெளிக் கொணரப்பட்ட இந்நூல் "மதமும் கவிதையும்", "தமிழ் அனு-பவம்", "தமிழின் இரண்டாவது பக்தி யுகம்", "திருவாசகம் காட்டும் மணிவாசகர்", "தமிழ்ப் பண்பாட்டிற் கிறிஸ்தவம்", "இலக்கியமாகப் பக்திப் பாடல்கள் - பின்னுரையாகச் சில குறிப்புகள்" ஆகிய ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. இந்நூலில் காணப்படும் "மதமும் கவிதையும்" - தமிழ் அனுபவம் என்னும் முதலாவது கட்டுரை மட்டும் ஒரு சில மாற்றங்களுடன் இன்னொரு நூலாக




வெளியீடு:
கொழும்பு தமிழ்ச் சங்கம்
7, 57ம் ஒழுங்கை, கொழும்பு - 06

விலை:50.00

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் பிரசுரிக்-கப்பட்டு அதன் பிரசுர செயற் திட்டத்தின் முதலாவது வெளியீடாக 2000ம் தை மாதம் வெளிக் கொணரப்பட்டிருக்கிறது.

"மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்" என்னும் ஆய்வு சம்பந்தமாக ஆசிரியர் தனது இரண்டாவது சிறுநூலில் . பின்வருமாறு கூறுகிறார்:

"தமிழ்க் கவிதை விமர்சனத்தினுள் தமிழின் உலகப் பெரும் பங்களிப்புகளில் ஒன்றான பக்திக் கவிதைகள் வராமை குறித்து நான் எப்பொழுதும் சிந்திப்பதுண்டு. அப்-பாடல்களின் இலக்கியச் சிறப்பை இலக்கிய நிலை நின்று நோக்குவது அவசியம் என்றே கருதுகிறேன். அப்பொழுது தான் தமிழ் இலக்கிய விமர்சன நோக்குப் பொலிவுறும்.

"தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் உலகளாவிய புகழ் காரணமாக நான் சென்ற மேனாட்டுப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் Religion and Poetry - The Tamil Experience என்ற தலைப்பில் விரிவுரையாற்றினேன்.

"இவ்விடயத்தை விரிவாக ஆராய வேண்டும் என்பது என் அவா. ஆனால் நம்மீது திணிக்கப் பெற்ற "பெயர்ச்சிகள்" காரணமாக அதனைச் செய்ய முடியவில்லை. 1998ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னை இராமநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்-துமாறு அழைத்த பொழுது இந்த விடயத்-தையே உரைப் பொருளாகக் கொள்ள எண்ணினேன்."

இவ்வாறு "மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம்" என்ற ஆய்வுக் கட்டுரையின் தோற்றத்தின் காரணத்தை விளக்குகிறார் ஆசிரியர்.

நான் ஏற்கெனவே கூறியது போல இந்நூலின் முக்கியத்துவம் பல வகையானது. முதலாவது தமிழில் பெரிதும் பேசப்படும் பக்தி இலக்கியக் கவிதைகளான தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் ஆகியவற்றை இலக்கிய நிலை நின்று நோக்குவதும் விமர்சிப்பதும் இதுகால வரை தமிழில் இடம் பெற்றதில்லை. இதனால் இக்கவிதைகளை எழுதியவர்கள் கவிஞர்களாகப் பார்க்கப்படும் நிலை தள்ளி வைக்கப்பட்டு அவர்கள் அருளா-ளர்களாக கொள்ளப்படுதலே மரபாய் இருந்து வந்துள்ளது. அதனால் அவர்கள் விமர்சனத்-திற்கு அப்பாற்பட்டவர்களாகவும், இவர்கள் எழுதிய பக்திக் கவிதைகளை இலக்கிய நிலை நின்று விமர்சிப்பது ஒரு அபச்சாரமாகவும் கருதப்பட்டது எனலாம்.

இந்த ஒரு போக்கின் பிரதிபலிப்பாகவே ஆறுமுக நாவலர், வள்ளலார் பாடிய பாடல்-களை நாயன்மார்களின் தேவாரங்களோடு சமமாக வைத்துப் பார்க்கத் தகுதியற்ற "மருட்-பாக்கள்" என்று சொன்னவற்றைக் கொள்ள வேண்டும்.

அதாவது தேவாரம், திருவாசகம், திருப்புகழ் என்று தந்தவர்கள் இனி எவராலும் அவர்களை எட்ட முடியாத உயரத்தில் இருக்-கும் புனிதமானவர்கள் என்றும் அவர்கள் பாடிய பக்திக் கவிதைகள் எந்தவித குறைநிறை-களுக்கும் உட்படாதவை என்றும், கொள்ளு-கின்ற ஒரு போக்கு. ஆகவே இத்தகைய ஒரு போக்கை விட்டு அவற்றையும் ஒரு இலக்கியப் படைப்பாகப் பார்க்க வேண்டும் என்று சொல்வதோடு, அதை ஒரளவுக்கு செய்து காட்டுவதற்கு அடித்தளம் இடும் முதல் நூலாக "மதமும் கவிதையும்" என்னும் இந்நூலைக் கொள்ளலாம்.

மேலும் இந்நூல் தமிழில் உள்ள பக்திக் கவிதைகள், இந்து சமய வழிபாடு பற்றி சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு உட்படாது வெளியே நிற்கும் சுதேச மொழிப் பாடல்களாகும் என்ற உண்மையையும், ஏ.கே.ராமானுஜனின் ஆய்வை நினைவு பத்தி உறுதி செய்கிறது.

அடுத்து சித்தர்களின் பாடல்கள் பற்றிச் சொல்லும் இடத்து இந்நூல் Metaphysical Poetry அல்லது Mystical Poetry என்று சொல்கின்ற இயற்கை அதீத அனுபவக் கவிதைகள் பற்றியும் பேச முயல்கிறது. அதாவது வார்த்தைகளால் கூற முடியாத "சொற்பதம்" கடந்தவற்றை சொல்ல முயலும் புதுவார்த்தைப் பிரயோக கவிதைகள் பற்றிய பிரஸ்தாபமும் இதில் இடம் பெறுகிறது. இதுவும் இந்நூலின் முக்கியமான அம்சமென்றே கருத வேண்டும்.

Metaphysical Poetry பற்றி தமிழில் அருந்தலாகவே எழுதப்பட்டுள்ளன என்றே சொல்ல வேண்டும். எனது "யதார்த்தமும் ஆத்மார்த்தமும்" என்னும் நூலில் இது பற்றி இலங்கைக் கவிஞர்களை ஒப்பிட்டு ஓரளவு விரிவாக எழுதியுள்ளேன். ஆயினும் இது பற்றி வேறு விரிவான ஆய்வுகள் இடம் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

மேலும் "மதமும் கவிதையும்" என்னும் நூலில் காணப்படும் ஏனைய கட்டுரைகளான "தமிழின் இரண்டாவது பக்தியுகம்", "திருவாசகம் காட்டும் மணிவாசகர்", "தமிழ்ப் பண்பாட்டியற் கிறிஸ்தவம்", "இலக்கியமாகப் பக்திப் பாடல்கள்" ஆகியவையும் பக்திப் பாடல்களை இலக்கிய நிலை நின்று பார்ப்பதன் வெவ்வேறு வெளிப்பாடுகளே.

இச்சிற்றாய்வு நூலைப் படிப்பவர்கள், இந்த வழிநின்று மேலும் பல ஆய்வுகளைத் தரத்துாண்டப்படுவார்கள் என்பதே இந்நூலின் சிறப்பாகும். அதேவேளை ஏனைய சமயத்-தோரின் தமிழ் இலக்கியத்துக்கான பங்களிப்பு பற்றிய விரிவான ஆய்வுகள் இடம் பெறாதது இதன் குறைபாடென்பதை நாம் சுட்டலாம். இதை இந்நூல் ஆசிரியரும் ஒப்புக் கொண்டுள்ளார்.

-மு.பொ.

---

வெளியீடு:
"மூன்றாவது மனிதன்" வெளியீட்டகம்

## இலங்கையில் இனக்குழும அரசியல்

கட்டுரைத் தொகுப்பு

விலை:100.00
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு.
கொழும்பு- 11




அண்மையில் சி.அ.யோதிலிங்கத்தின் "இலங்கையில் இனக்குழும அரசியல்" என்னும் நூல் வெளியிடப்பட்டது. மூன்றாவது மனிதன் வெளியீட்டகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

ஜோதிலிங்கம் ஆரம்ப காலங்களில் மலையக மக்கள் உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பாக சரிநிகரில் எழுதி வந்தவர். மலையக மக்களின் பிரச்சினையில் அவர்களில் ஒருவராக நின்று செயற்படவே விரும்புகிறேன் என்று தெரிவித்துள

, இத்தொகுப்பினை மலையக மக்களின் உரிமைகளுக்காக போராடி மரணித்த-வர்களுக்காக சமர்ப்பணம் செய்துள்ளார்.


இலங்கையில் அரசியல் தொடர்பான சரியான கண்ணோட்டத்தில் விடயங்கள் தொடர்பான பிரக்ஞையுடன் எழுதி வருபவர்-கள் ஒரு சிலரே. இவ்வகையில் ஜோதிலிங்-கத்தின் பங்களிப்பு காத்திரமானது.

இந்நூலில் சுதந்திரத்திற்குப் பின்வந்த இலங்கையின் அரசியல் யாப்புகளும், இனப்பிரச்சினையும் தொடர்பான ஆய்வில் யாப்புகளில் சிறுபான்மையினர் தொடர்பாக நிலைப்பாடுகள் பற்றியும், இலங்கை இந்திய உறவுகள் பற்றிய ஆய்வில் சுதந்திரத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் இலங்கை இந்திய உறவுகளின் நிலை, பாதிப்பு, தொடர்பாகவும் இலங்கை இந்திய உறவுகளின் எதிர்காலம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அரசியல் துறை ஆசிரியரான இவரின் கட்டுரைகள் இத்துறை சார்ந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பது உண்மையே. சிறந்த அட்டைப் படத்துடன் வெளிவந்திருக்கும் இப்புத்தகம்

- ஆர்ஸ்.

---



"மூன்றாவது மனிதன்"
தருகை: 50.00
தொடர்புகளுக்கு:
37/14, Vauxhall Lane,
Colombo - 02,
Sri Lanka.
T.P. 01-300919, 01-302729
Email: tman@dynanet.lk

"சார்பான அரசியல் பேசுபவர்கள் சார்புநிலை எடுப்பவர்கள் இன்று எதையும் நியாயப்படுத்திட முடியும். அநேகமாக மனித விழுமிங்கள் குறித்த அக்கறை, விடுதலைக் கோட்பாட்டாளர்களிடம் அருகிக் கொண்டே வருகிறது. இச்சூழலில் இல்க்கியமும் கலைப்படைப்புகளும் மட்டுமே தத்துவ அரசியல் கோட்பாடு மத இன ஜாதிய அதிகாரங்களுக்கு எதிரான - மனித விழுமியங்களுக்கு ஆதரவான நிலைப்-பாடுகளை முன்வைத்து வருகிறது."

- இது யமுனா ராஜேந்திரன் மூன்றாவது மனிதன் கடைசி இதழில் இந்தியாவின் நாவலாசிரியருள் ஒருவரான குஷ்வந்த் சிங்கினால் எழுதப்பட்ட பமேலா ரூக்சீன் என்பவரால் இயக்கப்பட்ட Train to Pakistan (1998) பட விமர்சனத்தில் வருகின்ற ஒரு பத்தி.

இதை வெறும் பத்தி என்று எடுக்காமல் இதில் உள்ள அர்த்தத்தினை சரிவர புரிந்து கொள்ளல் அவசியம். இன்றைய சூழலில் இலக்கியதாரர்களுக்கான தனித்த காத்திரமான சஞ்சிகை மூன்றாவது மனிதன். படைப்புக்களை வெறும் இலக்கியங்களுக்காகப் படைப்பதற்கு அப்பால் மனித சமூகத்தின் சிந்தனைக்கும் விடிவிற்கான ஆதாரமாக படைக்கப்படுதல் அவசியம். இதில் மூன்றாவது மனிதன் தன்னாலியன்றளவு வெற்றி பெற்று வருகின்றது என்பது உண்மையே.

மூன்றாவது மனிதனின், 9வது இதழில் யமுனா ராஜேந்திரன் எழுதிய "இலக்கியம் திரைப்படம் அரசியல்" விமர்சனம் கட்டுரை, ஈழத்து சிறுகதை உலகில் நன்கு அறியப்-பட்டவரான உமாவரதராஜனின் செவ்வி, ஜேம்ஸ் ஜொய்ஸ் என்ற கலைஞன் பற்றிய ஒரு 'நவீனத்துவவாதியின் உருவாக்கம்' என்ற பிரேம்நாத் என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலக் (Gentlemen May 2000 - Magazine) கட்டுரையின் மொழிபெயர்ப்பு, பேராசிரியர் சிவத்தம்பியின் "புலம் பெயர் தமிழர் வாழ்வு" பற்றிய கட்டுரை, ஓவியர் நிலாந்தன் படைப்புகள் பற்றி "விநாயக நடனம்" என்னும் ஜெயசங்கரின் கட்டுரை, விக்னேஸ்வரனின் "மௌனிக்கின்ற சுமைகள்", பொன் கணேஸ் இன் "ஒரு தனித்த மிகச் சிறிய புள்ளியாக" சிறுகதைகள், மற்றும் கவிதைகள் இடம் பெற்றுள்ளது.

என்.கே.ரகுநாதன் இன் "கந்தன் கருணை" நாடகத்தில் சாதியமும், அதற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் என்னும் தலைப்பில் லெனின் மதிவாணம் எழுதிய கட்டுரையும் உள்ளக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் சிறந்த பல படைப்புக்களைக் கொண்டு வெளிவந்திருக்கும் மூன்றாவது மனிதன் தனது தனித்துவத்தினையும் பேணி உள்ளது. அட்டைப் படமும் அழகாக உள்ளது.


ஒரு தனி மனிதன் உழைப்பில் அவரின் நாட்களின் பெரும் பகுதியை தின்று வெளிவந்திருக்கும் இவ்விதழும் உழைப்-பிற்கான பெறுமானத்தில் தனித்துவமாய் நிற்கிறது.

பல சஞ்சிகைகள் வந்தும் நின்றும் காணாமல் போய் விடுகிற சூழலில் ஒரு தனிமனித முயற்சியில் 9வது இதழும் காத்திரமாக வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்-குரியதுதே. ஒரு நல்ல ஈழத்து இலக்கிய இதழ் தொடர்ந்தும் வெளிவருவதற்கு தங்களின் பங்களிப்பினை இலக்கியதாரர்களும் வழங்குவதன் அவசியத்தை புரிதல் நல்லது.

- ஆர்ஸ்.

நன்றி - நூலகத்திட்டம்





## பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடியுங்கள்!

பத்திரிகைகள் கடைப்பிடிக்க வேண்டிய "தகைமைகளும் தகுதியும் கௌரவமும்" - இதன் ஒட்டு மொத்தமான பண்பாகப் பத்திரிகா தர்மம் என்று கூறக் கூடிய ஒரு தர்மத்தை சரிநிகர் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தாலும், கரிசனையிலும் இச்சிறு குறிப்பை எழுதுகிறேன். சரிநிகர் இதழ் 201(செப்.15-செப் 22) ல் 2ம் பக்கத்தில் ஆற்றாமை. 2 என்று தலைப்பின் கீழ் கே. எஸ். சிவகுமார் (சிவகுமாரன் அல்ல அவரது பெயர்) தனது சுய விபரக்கோவை என்ற பிரசுரத்தை தமிழ் இனி மாநாட்டில் விநியோகித்தார் என்று கிண்டலாகவும், இகழ்ச்சியாகவும், அதைப் பலர் கிண்டலாகப் பேசியதாகவும் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது சுய விளம்பரமாகவும் விளக்கப் பட்டுள்ளது. அவர் அப்படிச் செய்தது சரியல்ல, நாகரீகமல்ல என்று சரிநிகருக்குத் தோன்றினால் அதைப் பிரசுரித்துப் பகிரங்கப்படுத்தி எள்ளி நகையாடுவது அதை விட அநாகரீகம் என்பது சரிநிகர் ஆசிரியர் பீடத்திற்கும், ஏன் தெரியவில்லை?

"மூத்த பத்திரிகையாள்ர் என்றும், எழுத்தாளர் என்றும் சரிநிகரால் கருதப்படும் ஒருவரை அகௌரவப்படுத்துவதில் சரிநிகருக்கு என்ன லாபம்? யாராவது ஒருத்தர் அட இப்படிச் செய்வது சுய விளம்பரம் என்று மற்றவர்கள் நினைக்கப் போகிறார்கள் என்று இவருக்குச் சொல்ல முன்வந்தார்களா என்பது தெரியவில்லை. தனது அனுபவத்தையும், கல்வி, தொழில் போன்றவற்றையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்களும் தானும் ஏதேனும் வழிவகையில் ஒத்துழைக்க முடியும் ஒரு செய்தியை அவர் தனது சுய விபரக்கோவை கொடுப்பதன் மூலம் தெரியப்படுத்தலாமல்லவா?

எது எப்படியாயினும், இதில் சரிநிகர் இப்படி எழுதியது தவறு என்பது எனது அபிப்பிராயம்.

**— செல்வி திருச்சந்திரன்**
**கொழும்பு — 06.**

## படையினருக்குப் பாதுகாப்பு பொதுமக்கள் வார்ட்டில்

யாழ். பண்ணைப்பாலத்தில் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக் கருதி பாலத்தின் இருபுறமும் முட்கம்பிச் சுருள் வேலி அமைக்கப் பட்டுள்ளது. இந்தப் பாலத்தில் வாகனங்களில் வருபவர்களுக்குப் படையினர் நடை பழக்குவது வழக்கம்.

கடந்த வாரம் பஸ் ஒன்றில் வந்த பிரயாணிகள் தமது நடைப்பயிற்சியை முடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏற முண்டியடித்த போது வேலணை கமநல சேவைத்திணைக்களத்தில் கடமையாற்றும் பி. சண்முகநாதன் என்பவர் முட்கம்பிக்கு மேல் விழுந்து காயமடைந்த நிலையில் யாழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னரும் இதே இடத்தில் இதே அலுவலகத்தைச் சேர்ந்த திருமதி சச்சிதானந்தன் என்ற எழுதுவினைஞரும் காயமடைந்து சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### தலைவர் உத்தரவு!

குட் மோர்ணிங் சேர்மன். யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச சபை ஒன்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் தினமும் கடமைக்கு வந்தவுடன் இவ்வாறு தொலைபேசியை எடுத்துத் தலைவருக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என தலைவர் உத்தரவிட்டுள்ளாராம்.

## நூல் வெளியீட்டு விழா




சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சி.அ.யோதிலிங்கத்தின் "இலங்கையில் இனக்குழும அரசியல்" என்னும் நூல் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் சி.அ.யோதிலிங்கம் அவர்கள் உரையாற்றுவதை படத்தில் காண்கிறீர்கள்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் சரவணன், வி.ரி.தமிழ்மாறன், பேரா.சோ.சந்திரசேகரம், தாட்சாயினி ஆகியோர் உரையாற்றினர்.


**வாக்காளர்களுக்கு,**
**ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தின் வேண்டுகோள்!**

**உங்கள் வசம் துப்பாக்கித் தோட்டாவிலும் வெடிகுண்டிலும் பார்க்க சக்தி வாய்ந்த ஆயுதமுண்டு!**
**சமூகத்தைப் பாதுகாக்க அதைப் பாவியுங்கள்!**

நீங்கள் விரும்பும் கட்சியை ஆதரிக்க உங்களுக்கு உரிமையுண்டு.

அதேபோல் மற்றவர்களுக்கும் தாம் விரும்பும் கட்சியை ஆதரிக்க உரிமையுண்டு.

சுயாதீன. ஜனநாயக. சமாதான சமுதாயம் நிலவ இது அவசியமான அடிக்கல். அதுவே எமது வேணவா.

அரசியல் கட்சிகளோ. அவற்றின் சில ஆதரவாளர்களோ. வன்முறைகளிலும் வேறு அடாவடித்தனங்களிலும் ஈடுபடுவதனால் அதை வீணடிக்கின்றார்கள். வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அவ்வித செயல்களை ஆதரிக்கத் தயாரில்லை என்பதை அறிந்தால் மானங்கெட்ட அவ்வித செயல்களைக் கைவிட்டு விடுவார்கள்.

அமைதியை விரும்பும் குடிமக்களாகிய நீங்கள் உங்கள் அரசியல் சார்பு எப்படியிருப்பினும் தேர்தல் காலத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் உங்கள் பாரிய பங்களிப்பைச் செய்ய முடியும்.

- வன்செயலில். அடாவடித்தனங்களில் யார் ஈடுபட்டாலும் உங்கள் கண்டனத்தை வெளிப்படுத்துங்கள்.
- உங்கள் எதிர்ப்பை நீங்கள் விரும்பும் விதத்தில் தெரிவியுங்கள். அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடன் உரையாடுவதாலோ. முக்கியமாக உங்கள் வாக்கைக் கேட்டு வருபவர்களிடமோ. உங்கள் கட்சித் தலைமையின் எல்லா மட்டத்திலுமுள்ளவர்களுடன் கடித மூலமோ வன்செயலுக்கும். அடாவடித்தனத்திற்கும் உங்கள் எதிர்ப்பை அறிவியுங்கள்.
- வன்செயல், அடாவடித்தனத்தில் ஈடுபட்டோ. அதை ஆதரித்தோ வரும் எந்த வேட்பாளர்களுக்கும் உங்கள் வாக்கைப் போடாதீர்கள்.

சூரியா விக்கிரமசிங்க
செயலாளர்
செப்டெம்பர் 18. 2000

ஜ. உ. பா. இயக்கம்
31. சார்ள்ஸ் இடம். கொழும்பு -03.

advt.


**திருத்தம் - 1 :**

சென்ற இதழில் சென்னை தமிழ் இனி - 2000 மாநாட்டில் கட்டுரை படித்த இலங்கைப் பேராளர்களின் பெயர்ப்பட்டியல் வெளியாகியிருந்தது.

இம்மாநாட்டில் இலங்கையிலிருந்து சிறப்புரையாளர்களாகக் கலந்து கொண்ட கலாநிதி செல்வி திருச்சந்திரன், கலாநிதி சி.மௌனகுரு ஆகியோரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டு விட்டன. தவறுக்கு வருந்துகிறோம்.

**திருத்தம் - 2 :**

கடந்த இதழில் வெளியான சந்தா விபரம் தவறுதலானது. சரியான விபரம் கீழே தரப்படுகிறது.

**சரிநிகர் வார இதழ் சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல் !**

உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

புதிய சந்தா விபரம் :

| சந்தா விபரம்: | 6 மாதங்கள் | ஒரு வருடம் |
| --- | --- | --- |
| உள்நாடு: | 350/= | 750/= |
| இந்தியா: | 15 US $ | 25 US $ |
| வெளிநாடு: | 30 US $ | 50 US $ |

முகவரி:
சரிநிகர், 19/4, நாவல வீதி, நுகேகொட, இலங்கை.

தொலைபேசி : 815004, 814859
தொலைமடல் : 815003

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

ஏற்கெனவே சந்தா செலுத்தியுள்ளவர்களுக்கு வார இதழ் சந்தா விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

*"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

**மின்னஞ்சல்:** sarini@sltnet.lk


## நடவடிக்கை எப்போ?

**தே**ர்தல் நாள் நெருங்க நெருங்க வன்முறைகளும், பெருமளவில் அதிகரித்துக் கொண்டு போகின்றன.

இந்த பத்தியை எழுதிக் கொண்டிருக்கிற இந்த நேரம்வரை கிடைத்த தகவல்களின்படி 685க்கும் மேற்பட்ட வன்முறைகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பதிவுசெய்யப்படாத இன்னும் எத்தனையோ வன்முறைகள் நடந்திருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

ஆளும், பொ.ஐ.மு. முதல் ஜே.வி.பி. வரை அனேகமாக எல்லாக் கட்சிகளினாலும் வன்முறைகள் அரங்கேற்றபட்டுக் கொண்டிருக்கின்றன.

பொ.ஐ.மு. மட்டும் இதுவரை நடந்த வன்முறைகளில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட சம்பவங்களுக்கு காரணமாக இருந்திருக்கிறது.

இந்தச் சாதனைகளில் அடுத்ததாக நிற்பது ஐ.தே.க. அதனுடைய சாதனை 20 சதவீதமான தாக்குதல்கள்!

பொ.ஐ.மு அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் எதைச் சாதித்திருக்கிறது என்று கேட்டால் நிச்சியமாக சொல்லக்கூடிய ஒன்று இந்த அரசியல் வன்முறைகள் என்று துணிந்து கூறலாம்.

உள்ளூராட்சி தேர்தலின்போது 46 சதவீதம் ஆக இருந்த அதன் சாதனை ஜனாதிபதித் தேர்தலின்போது 48 சதவீதமாக அதிகரித்திருந்தது. இப்போது பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் அதன் சாதனையை 50வீதத்தை தாண்டி விட்டுள்ளது.

அதிலும் தேர்தல் வன்முறையை தனது அணியைச் சார்ந்தவர்க்கு எதிராக நடாத்துவது என்ற விடயத்திலும் கூட அது சாதனை படைத்திருக்கிறது.

தனக்கெதிரான வன்முறைகள் என்று அது முறைப்பாடு செய்தவற்றுள் கிட்டத்தட்ட 20 சதவீதமான முறைப்பாடுகள் தன் சொந்த கட்சியினர்க்கெதிரான முறைப்பாடுகளாகவே உள்ளன.

தேர்தல் வன்முறைக்குப் பெயர்போன வடமேல் மாகாணத்தில் தான் இம்முறையும் பெருமளவான வன்முறைகள் நடந்துள்ளன.

இதில் வேடிக்கைய என்னவென்றால், மிகக் குறைந்தளவு தேர்தல் வன்முறை பதிவு செய்யப்பட்ட மாகாணம் வடக்கு கிழக்கு மாகாணம் என்று தேர்தல் கண்காணிப்பு நிலையம் ஒன்றின் அறிக்கை கூறுகிறது.

ஆம், நாட்டில் மிகப்பெரிய வன்முறை நடந்து கொண்டிருக்கும் ஒரு பிரதேசத்தில் தேர்தல் வன்முறைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்ற செய்தி ஒரு வேடிக்கையான செய்தி தான்.

ஆனால், இந்த வேடிக்கைக்குப் பின்னால் உள்ள காரணிகள் மிகவும் முக்கியமானவை.

முதலாவதாக அங்கு, குறிப்பாக வடக்கில் தேர்தலில் குதித்தவர்களும் வேலை செய்பவர்களும் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் என்பது. இரண்டாவது தேர்தலின் பொய்மையும், தேர்தலில் நிற்பவர்களின் பசப்பல்களும் பற்றி மக்கள் அலட்டிக் கொள்ளாதபோது அங்கு வன்முறைக்கான தேவைகள் குறைவு என்பது. மூன்றாவதாக நாளும் வன்முறைக்கு முகம் கொடுத்து வாழம் அங்குள்ளவர்க்கு முறைப்பாடு செய்யுமளவுக்கு முக்கியமானதாக தேர்தல் வன்முறைகள் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. நான்காவதாக, யார் பற்றிய முறைப்பாட்டை யார் யாரிடம் செய்வது?

ஏற்கெனவே அரசாங்கத்தின் தேர்தல் நிகழ்ச்சி நிரலை ஏற்று ஆயுதப்படைகளது ஆயுதங்களின் பாதுகாப்பில் வந்துள்ள இந்தக் கட்சிகளைப்பற்றி யாரிடம் முறைப்பாடு செய்ய முடியும்? ஆக, அங்குள்ள தேர்தல் வன்முறை பற்றிப் பேசுவது ஒரு வேடிக்கைக் கதை அல்லாமல் வேறென்ன?

உண்மையில், அங்குள்ள மிகப்பெரிய வன்முறை, கட்சிகளிடையேயான மோதல் அல்ல, கள்ளவாக்கு அல்ல, வாக்காளரை மிரட்டுவதோ கடத்துவதோ கூட அல்ல, மாறாக அங்கே ஒரு தேர்தலை வைப்பது தான்.

இடம்பெயர்ந்தோர், பெயர்ந்து கொண்டிருப்போர், யுத்தத்துள் சிக்குண்டோர், சிக்குண்டு இறந்து கொண்டிருப்போர் எல்லோருடைய நிலைமைகள் எல்லாம் அப்படியே இருக்க தேர்தல் என்கிற வன்முறை அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வன்முறையை அங்குள்ள மக்கள் மீது திணித்தவர் தான் உண்மையான வன்முறையாளர்.

அவர்கள் வேறு யாருமல்ல!

இந்த நாட்டின் ஜனாதிபதி.

தேர்தல் ஆணையாளர் மற்றும்

தேர்தலில் நிற்க முடிவு செய்த தமிழ்க்கட்சிகள்!

தேர்தல் வன்முறையில் கூட்டாக இறங்கியிருக்கும் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படப்போவது எப்போ?

இதற்கு அம் மக்கள் தான் பதில் சொல்ல வேண்டும்!

**ஓயாத அலைகள் -4 ஆரம்பம்:**

# நாகர் கோவில் படை முகாமுக்கான வழங்கல் பாதை துண்டிப்பு!

ஓயாத அலைகள்-4 நடவடிக்கை திலீபனின் நினைவு நாளான செப். 26 மாலை 4 மணிக்கு தென்மராட்சி பகுதியில் ஆரம்பமாகியது என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

திலீபனின் நினைவெழுச்சி நாளில் விடுதலைப் புலிகளின் படையணிகள் சிறிலங்காப் படையினரின் முன்னரங்கப் பாதுகாப்பு அரண்களை உடைத்து நொருக்கிக் கொண்டு அலையலையாக முன்னேறியதாகவும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

செப். 26 செவ்வாய் மாலை 4 மணிக்கு ஆரம்பமான இந்நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

ஆறுமுனைகளில் முன்னேறிய விடுதலைப் புலிகள் கிளாலி-முகமாலை-நாகர்கோவில் வரைப்பட்ட, நன்கு பலப்படுத்தப்பட்ட நீண்ட இராணுவ வேலியை பல இடங்களில் துண்டாடியுள்ளனர். விடுதலைப் புலிகள் தமது முன்னைய நிலைகளில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்கு முன்னேறிச் சென்றுள்ளனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தவிர நூற்றுக் கணக்கான காவலரண்களும் படையினரின் பதுங்கு குழிகளும் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக புலிகள் விடுத்து செய்திக் குறிப்பில், கிளாலி எழுது மட்டுவாள் ஈறாக நாகர்கோவில் வரையான சிறிலங்காப் படையினரின் பாதுகாப்பு நிலைகள், பதுங்குகுழிகள் என்பன விடுதலைப் புலிகளின் சிறப்புக் கொமாண்டோ படையணிகளால் தாக்கி நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. ஆட்லரிகள், மோட்டார்கள் கொண்டு விடுதலைப் புலிகளின் ஆட்லரி படையணி மற்றும் மோட்டார் படையணிகள் கடுமையான தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகளின் சிறப்புக் கொமாண்டோக்கள் சிறிலங்காப் படையின் முன்னணிப் பாதுகாப்பரண்களை பல இடங்களில் உடைத்து அழித்து உள்நுழைந்துள்ளனர். இம்மோதலில் படையினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

*நாகர் கோவில் படை முகாமுக்கான வழங்கல் பாதை துண்டிப்பு:*

எழுதுமட்டுவாள் இராணுவத் தளம், கிளாலி கடற்படைத்தளம் என்பன மீது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர் எனவும், நாகர் கோவிலில் சிறிலங்காப்படை முகாமுக்கான பிர்தான வழங்கல் பாதையும் விடுதலைப் புலிகளால் துண்டாடப்பட்டுள்ளது என்றும் புலிகள் அறிவித்துள்ளனர். நாகர்கோவில் படைமுகாம் மீதும் புலிகள் தொடர்ந்து ஆட்லரி தாக்குதலை நடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது தரப்பில் 9 விடுதலைப் புலிகள் பலியாகியுள்ளதாகவும் கடும் சண்டைகள் தொடர்வதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் நடவடிக்கையில் நூற்றியம்பது அரசபடையினர் கொல்லப்பட்டு ஐநூறுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

*வரணியில் எறிகணை வீழ்ந்து ஒருவர் பலி இருவர் படுகாயம்:*

இதேவேளை செப்.26 செவ்வாய்க்கிழமை இரவு கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வரணி



குடமியன் என்னுமிடத்தில் வந்து வீழ்ந்த எறிகணையினால் மாடு கட்டுவதற்காகச் சென்ற 6 பிள்ளைகளின் தாயாராகிய இராசதுரை கனகமணி என்ற குடும்பப் பெண் மரணமடைந்ததுடன், இச்சம்பவத்தில் திருக்குமரன் சந்திரலேகா (27), கதிர்காமநாதன் லலிதா (17) ஆகிய இருவரும் படுகாயமடைந்ததாக யாழ் குடாநாட்டில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

*கொடிகாமத்தில் எறிகணை வீழ்ந்து இருவர் பலி மூவர் படுகாயம்:*

கொடிகாமம் மீன்சந்தை பகுதியில் வீழ்ந்து வெடித்த இன்னுமொரு எறிகணையினால், காளிகோவிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யோகலிங்கம் (57) என்பவர் தலை துண்டிக்கப்பட்டு மரணமானார் எனவும், அவருடைய மகளாகிய தமிழரசி (25) படுகாயமடைந்து பின்னர் மரணமடைந்ததாகவும். அவருடைய மனைவியாகிய பரமேஸ்வரி (47) வலது கை துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்ததுடன், அவருடைய மகனாகிய மதுசுதன் என்பவர் கால் பாதமொன்று துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


* **யுத்தம் அகதிகளாக்கியது யாரை?**

தமிழ் மக்களையா? முஸ்லிம் மக்களையா? சிங்கள மக்களையா?

* **யுத்தம் ஓடஓட விரட்டியது யாரை?**

ஆண்களையா?பெண்களையா? சிறுவர்களையா?

* **நித்தமும் அவல வாழ்வு யாருக்கு?**

பாருங்கள் ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொவைலக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியை




**செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு**

**ரி.என்.எல் தொலைக்காட்சியில்**

*எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!*

*இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!*

*சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்*

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன். வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன். 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 27.09.2000.